ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்




'சொல்லும் நிமிடங்களை
சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067

1.50 Euro

# ஈழமுரசு ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 07 - 13 Octobre 2004 33

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# சமாதான முயற்சிகளில் புலிகளின் நடவடிக்கை மகிழ்ச்சி தருகிறது

## சுவிசில், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(04.10.2004)

சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் மகிழ்ச்சி தருகிறது என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்திருக்கிறார். சுவிற்சர்லாந்தில் விடுதலைப் புலிகளின் அரசியலமைப்புக்குழு, தமிழர் தாயக மனித உரிமைகள் அமைப்பு மற்றும் சட்டவல்லுனர் குழுக்களுடன் சந்திப்பு நடத்திய விதார் ஹெல்கிசன், இவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பேசிய நோர்வே பிரதி வெளிவிகார அமைச்சர், சமாதான நடவடிக்கைகள் கைகூடாத நிலையிலும் விடுதலைப்

(தொடர்ச்சி 25ம் பக்கம்)



## தேசியத்தலைவரின் பன்முக ஆளுமையை சித்தரிக்கும் ஆங்கில நூல் சுவிசில் வெளியிடப்பட்டது

தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை மாலை சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது. 'Prabakaran a leader for all seasons' எனும் இந்நூல் வெளியீட்டு விழா, சுவிஸ் பேர்ண் நகரில் நடைபெற்றது.




ஆரம்ப நிகழ்வாக, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு. அம்பாறை அரசியல்த்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் நேரு குணரட்ணம் ஆகியோர் உரைகள் நிகழ்த்தியிருந்ததுடன், தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நூலின் முதல்ப்பிரதியை வெளியிட்டு வைத்தார். இந் நூல் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் அதிக ஒளிப் படங்களை தாங்கி வெளிவந்துள்ளது.

## அரசில் ஜே.வி.பி. இருக்கும் வரை பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது !

(04.10.04)

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் அதிகாரம் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது என தெரிவித்துள்ள ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டே சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் உடன்படிக்கையை மேற்கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

### கைகூடாமல் போன ஆலோசனை சபை !

### சிறீலங்காவின் இன்றைய அவலம் !

### நாய்களும் நாங்களும்



### அரியகுட்டியர் கார் படிகப்போகிறார்

### இலண்டனில் 'விம்பம்' நடாத்திய குறும்படத் தேர்வு

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு !!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

லாக்கூர்நேவ்'இல் தரத்திற்கும் மலிவுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்
கிருஷ்ணாஸ் பல்பொருள் அங்காடி
இலங்கை,இந்தியா,பாகிஸ்தான்,ஆபிரிக்க இறக்குமதிப் பொருட்கள் மொத்தமாகவும்,சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
தினசரி,வாராந்த,மாதாந்த சஞ்சிகைகள்,திரைப்பட,தொடர்நாடக ஒளிநாடாக்கள் என்பனவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
தரிப்பிடம் -M°-7, Tram 1, Bus 152-609-607-773. (சுப்பர் மார்சே பின்புறம், சென்றல் கொமர்சியல் கட்டிட உட்புறம்-G-4 கலரி)

# கிளிநொச்சி அறிவியல் நகரில் தமிழ்மொழி ஆய்வு பல்கலைக்கழகம்

(03.10.04)

தேசியத் தலைவரின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி, அறிவியல் நகரில் தமிழ் மொழி ஆய்வுப் பல்கலைக்கழகம் ஒன்றை நிர்மாணிக்கும் ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவி அன்பன் இதனைத் தெரிவித்தார்.

`ஒரு மொழியைப் பாதுகாப்பதற்காக போராட்டம் நடத்தப்படுவது எமது ஈழத்தில்தான். அது தமிழ் மொழியைக் காப்பாற்றும் போராட்டம்' என்றும் கவி அன்பன் கடந்த வியாழக்கிழமை திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருகோணமலை கல்வி வலயத் தமிழ்மொழித் தின விழாவில் சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

தூய தமிழ்மொழி ஈழத்தில் தான் வளர்க்கப்பட்டு வருகின்றது என்பது தமிழக அறிஞர்கள் எம்மைச் சந்திக்கும் போதெல்லாம் கூறுவார்கள். தூய தமிழ்மொழி இந்தியாவில் கிடையாது. வேற்று மொழிக் கலப்பால் நோய்வாய்ப்பட்ட மொழியாக இந்தியாவில் காணப்படுகின்றது என்றும் கவி அன்பன் தெரிவித்தார். தமிழ்மொழி தோன்றிய காலம் இன்னும் வரையறுக்கப்படவில்லை. ஏனைய மொழிகளின் ஆரம்பம் போல் தமிழ் மொழியின் ஆரம்பத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காலத்தால் மூத்தமொழி தமிழ் என்றும் கவி அன்பன் தமதுரையில் தெரிவித்துடன், தமிழ்மொழியைப் பாதுகாக்க அனைவரும், உறுதியுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் இலக்கியம் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் படைப்புக்களினால் புதிய பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ளது என்று வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் இவ் விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றிப் பேசும்போது தெரிவித்தார். தமிழ்மொழி பல இடர்பாடுகளைக் கடந்து வந்துள்ளது. வல்லமை வாய்ந்த தமிழ் மொழியை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது. மொழி என்று கூறும்போது, அது வெறும் மொழியுடன் நின்று விடாது ஒரு இனத்தின் பண்பாடு, விழுமியங்களுடன் பின்னிப் பிணைந்ததே மொழியின் வரலாறு. மொழியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மாணவர், ஆசிரியர், பெற்றோர் அனைவரையும் சார்ந்தது என்றும் அவர் கூறினார்.

## யானைகளால் திண்டாடும் சிறீலங்கா!



யானைகளால் திண்டாடும் சிறீலங்கா என்றவுடன் ஐக்கியதேசியக் கட்சியினால் என எண்ணிவிட வேண்டாம். இது நிஜ யானைகளால் ஏற்பட்டுள்ள பிரச்சினை. காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைகின்றவர்களுடைய இறப்பு வீதம் கடுமையாக, அதிகரித்திருப்பதாக சிறீலங்கா புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சராசரியாக ஒரு வருடத்தில் 40 பேர் முதல் 60 பேர் வரையான மக்கள் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்து வருவதாகவும், அண்மைக் காலமாக இலங்கையின் வட மேற்குப் பகுதியில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக, யானைகள் ஊர்மனைக்குள் பிரவேசிப்பதனால் இறப்பு வீதம் திடீரென அதிகரித்திருப்பதாகவும் அறியவருகிறது.

இதேவேளை, தற்பாதுகாப்பை முன்னிட்டு விவசாயிகள் சுடுவதனால் வருடத்துக்கு சராசரியாக 150 முதல் 160 யானைகள் இறந்து போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட மேற்குப் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக நிலவும் வரட்சி காரணமாக, உணவு, நீருக்காக குறைந்தது 3500 யானைகளாவது ஊர் மனைகளுள் பிரவேசித்திருக்கலாமென நம்பப்படுகின்றது. இவற்றால் விவசாயச் செய்கை சீரழிக்கப்படாதிருப்பதற்காக விவசாயிகள் இரவு வேளைகளில் காவலில் ஈடுபட்டுள்ளதாகவும், யானைகள் வருமிடத்து தீப்பந்தங்கள் காட்டி விரட்டியடிப்பதாகவும், இவ்வாறு விரட்டியடிக்கும் சந்தர்ப்பங்களில் சில விவசாயிகள் உயிரிழக்க வேண்டி நேரிடுகின்றது எனவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது விவசாயிகளுக்கும் யானைகளுக்குமான மோதல் மிக உக்கிரமடைந்திருப்பதாகவும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமானது எனவும் அநுராதபுர மாவட்ட வனவிலங்கு கண்காணிப்புத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன தெரிவித்துள்ளார்.

`நாங்கள் யானைகளை நேசிக்கிறோம் என்றாலும், எமது பயிர்களுக்கு கேடு ஏற்படும்போது பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. எனவேதான், இப்பிரதேசத்தை விட்டு யானைகளை அகற்றுவதில் முனைப்புடன் இருக்கிறோம்.' என தெரிவித்துள்ள விவசாயிகள் துப்பாக்கி மூலமும், நஞ்சு வைத்த உணவுப் பொருளை கொடுப்பதன் மூலமும், சில காட்டு யானைகளைக் கொன்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாவகச்சேரியில் மக்களை தடியால் அடித்து விரட்டிய குரங்கு

(03.10.04)

தனது சகபாடியின் இறப்பினால் ஆவேசம் கொண்ட குரங்கு ஒன்று வீதியால் போவோர் வருவோரைத் தடியினால் துரத்தித் துரத்தி அடித்த சம்பவம் சாவகச்சேரி கல்லடிமூட்டுச் சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரவுவேளை இடிமின்னல் தாக்கியதில் அப்பகுதியில் குரங்கு ஒன்று இறந்து விட்டது. மறுநாள் காலை அக்குரங்கு இறந்துவிட்டதைக் கண்ட மற்றொரு குரங்கு தடி ஒன்றை முறித்து அவ்வீதியால் போவோர் வருவோரைத் துரத்தித் துரத்தித் தாக்கியது. குரங்கின் ஆவேசத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மக்கள் தப்பியோடியுள்ளனர். இரு மாதங்களுக்கு முன்னர் இதே இடத்தில் மின்சாரம் தாக்கி குரங்கு இறந்த போது கோபம்கொண்ட மற்றொரு குரங்கு, மோட்டார் சைக்கிளில் வந்தசிலர் மீது பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## மாணவிகளை பாலியல் ரீதியாக வதை செய்த அதிபருக்கு 18 மாத சிறைத் தண்டனை

**- வவுனியா நீதிமன்றம் தீர்ப்பு -**

வவுனியாவில் உள்ள சிங்களப் பாடசாலை ஒன்றில் 13 வயது நிரம்பிய மூன்று மாணவிகளை பாலியல் ரீதியான வதைக்கு உட்படுத்தினார் எனும் குற்றச்சாட்டின் பேரில் அதிபர் ஒருவருக்கு 18 மாத சிறைத் தண்டனையும், தலா 10,000 ரூபா வீதம் முப்பதாயிரம் தண்டப்பணம் செலுத்துமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். மேற்படி சம்பவம் 2000ம் ஆண்டு ஆவணி மாதம் இடம் பெற்றுள்ளது. பாடசாலை முடிந்த பின்னர் மாலை நேர வகுப்பு என்று கூறி மாணவிகளை தனித்தனியாக அறைக்கு அழைத்துச் சென்று அங்கசேட்டை புரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக பெற்றோர்களாலோ அல்லது மாணவிகளாலோ பொலிசில் முறைப்பாடு செய்யவில்லை எனினும் சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானதன் பின்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சேவை வவுனியா பொலிஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தது.

இதனையடுத்து, 2002ம் ஆண்டில் வவுனியா நீதவான் நீதிமன்றில் வவுனியா பொலிசார் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைகள் இடம் பெற்றன. வழக்குக்கு பாடசாலை அதிபர் மாணவிகள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் சாட்சியம் வழங்கியிருந்தனர். கல்வித் திணைக்கள அதிகாரிகள் மாலைநேர வகுப்பு வைப்பதற்கு தாங்கள் அனுமதி வழங்கவில்லை என்று சாட்சியம் அளித்திருந்தனர். பாடசாலை அதிபர் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமானது பொய்யானது என்றும் அரசியல் பின்னணி கொண்டது என்றும் தெரிவித்திருந்தார்.

எனினும், 18 மாதகால சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் வழங்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.

Errances Travels
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
à partir de
Bombay - 560 Eu
Delhi - 560 Eu
Bangkok - 550 Eu
Colombo - 660 Eu
Singapour - 660 Eu
Madras - 658 Eu
New york - 550 Eu
Montreal - 540 Eu
Oslo - 315 Eu
Toronto - 540 Eu

# சிறீலங்கா நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளதால் அரசினால் எதுவும் செய்யமுடியாது! தமிழீழ நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளதால் புலிகளால் எதுவும் செய்யமுடியாது!

(03.10.04)

ஊர்காவல் படையினரின் விடுதலை மற்றும் நாகர்கோவில் பகுதியில் முன்னரங்க காவல்நிலைகளை பின் நகர்த்தல் தொடர்பாக சிறீலங்கா அரசாங்கம் விடுத்த கோரிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டதால் இவ்விவகாரத்தில் தங்களால் எதுவும் செய்ய முடியாதிருப்பதாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. திருகோணமலை கோமரங்கடவெல பகுதியில் கடந்த 10ம் திகதி புலிகளால் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட இரு ஊர்காவல் படையினரையும், கைதிகள் பரிமாற்ற அடிப்படையிலில்லாது விடுதலைப் புலிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனக் கண்காணிப்புக் குழு ஊடாக சிறீலங்கா அரசு வலியுறுத்தியிருந்தது.

அதேநேரம் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் விடுதலைப் புலிகள் தங்கள் முன்னரங்கக் காவல் நிலைகளையும் பின்நகர்த்த வேண்டுமெனவும் அரசு தரப்பு கோரியிருந்தது. இவை தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் றொண்ட் பியூறு ஹொவ்டேவை சந்தித்து அரசின் நிலைப்பாட்டை தெரிவித்திருந்தார். பொலிஸ் விளக்கமறியலிலுள்ள தங்கள் உறுப்பினர்களில் பத்துப் பேரை விடுதலை செய்தால் மட்டுமே இரு ஊர்காவல் படையினரையும் விடுவிப்போமெனப் விடுதலைப் புலிகள் தெரிவித்ததை ஜெனரல் பியூறு ஹொவ்டே இந்தச் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

எனினும், இவர்கள் சிறீலங்கா நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளதால் அதில் தாங்கள் தலையிட முடியாதெனவும், கைதிகள் பரிமாற்றத்திற்கு இடமில்லையென்றும் தெரிவித்த சிறில் ஹேரத், ஊர்காவல் படையினர் இருவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தார். இது குறித்து, ஜெனரல் பியூறு ஹொவ்டே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் சுட்டிக்காட்டிய போது, போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி தங்கள் பகுதிக்குள் வந்த இரு ஊர்காவல் படையினரையும் தாங்கள் கைது செய்து தமிழீழ நீதிமன்றில் நிறுத்தியுள்ளதால் தங்களாலும் எதுவும் செய்ய முடியாதென தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

இதேநேரம் நாகர்கோவில் பகுதியில் தற்போது இருதரப்பு முன்னரங்க காவல் நிலைகளுக்குமிடையே 20 மீற்றர் தூர இடைவெளியே இருப்பதால் இதனைப் பரஸ்பரம் பின்நகர்த்துமாறு கண்காணிப்பு குழு விடுத்த கோரிக்கையை அரசும் படைத்தரப்பினரும் முற்றாக நிராகரித்த நிலையில், பரஸ்பர பின்நகர்த்தலுக்கு இணக்கம் தெரிவித்துள்ள புலிகள், ஒரு தரப்பாக தங்கள் நிலைகளைப் பின்நகர்த்தப் போவதில்லையெனவும் உறுதிபடக் கூறிவிட்டனர். இந்த நிலையில் இவ்விவகாரத்தில் தங்களால் எதுவும் செய்ய முடியாதெனக் கூறியுள்ள கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், நாகர்கோவில் விவகாரம் குறித்து இரு தரப்பு பிராந்தியத் தளபதிகளுடனான அடுத்த சந்திப்பில் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## பேரெழுச்சியுடன் கிளிநொச்சியில் பெண்கள் சங்கம நிகழ்வு



(03.10.04)

முதல்ப்பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி நினைவாக பெண்கள் சங்கமம் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் பெண்கள் சங்கமம் நிகழ்வு ஆரம்பமானது. முதலில் பொதுச்சுடரினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா ஏற்றிவைத்தார்.

மாவட்ட மகளிர் அரசியல்த் துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், 2ம் லெப் மாலதியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்ட்டு ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப் பட்டது. பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்கின்ற பிரச்சனைகள் பற்றி



யும், அதனை எவ்வாறு எதிர்கொள்வது பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். கிளிநொச்சி பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் இதனை ஒழுங்கமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபல சிங்களத் திரைக்கலைஞர் காமினி பொன்சேகா காலமானார்

(03.10.04)

சிங்களத் திரைப்படங்கள் மூலம் தன் நடிப்புத்திறனை வெளிப்படுத்திய காமினி பொன்சேகா சிறந்த கலைத்துவம் மிக்க கலைஞராக விளங்கினார். திரை நடிப்புடன்

1959ம் ஆண்டு வெளியான தெய்வ யோகயா என்ற திரைப் படத்தில் அறிமுகமானவர் காமினி பொன்சேகா அவர்கள். 60, 70, 80களின் காலப்பகுதியில் சிங்களத் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த இவர்,





இயக்குனராகவும், இவர் விளங்கினார். உலகப்புகழ் பெற்ற திரைக்கலைஞரான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் பல திரைப்படங்களில் காமினி நடித்து சர்வதேச மட்டத்தில் அறிமுகமானவர்.

பெரிதாக வளர்ச்சி கண்டிராத சிங்களத் திரையுலகை வளர்தெடுத்து மக்கள் மத்தியில் புகழ்பெற வைத்த பெருமையும் இவருக்குண்டு. பிற்காலத்தில் தமிழ்-சிங்கள அரசியல் பிரச்சனையை வைத்து கொட்டிவலிகய என்ற திரைப்படத்தை இவர் இயக்கினார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுனராகவும் இவர் பதவி வகித்துள்ளார். இனவாதமற்ற ஒரு கலைஞனாக விளங்கிய இவர் இலங்கை - இந்திய கூட்டுத்தயாரிப்பான நங்கூரம், நீலக்கடலின் ஓரத்திலே ஆகிய தமிழ்ப்படங்களில் கூட நடித்திருக்கிறார். இவ்வருட ஆரம்பத்தில், இலங்கை திரையுலகம், காமினி பொன்சேகாவின் திரையுலகப் பொன்விழாவை பண்டாரநாயக்கா சர்வதேச நினைவரங்கில் கொண்டாடியபோது, இன மத மொழி பேதமின்றி, இலங்கைத் திரையுலகின் அத்தனை கலைஞர்களும் வந்திருந்து வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

அவ்விழாவில் உரையாற்றிய காமினி பொன்சேகா அவர்கள், திரைக்கலைஞர்கள் அரசியலுக்குள் காலடி எடுத்து வைப்பதை முற்றாகத் தவிர்க்கும் படியும், தனது அனுபவத்தில், பிரதான இரு சிங்களக் கட்சிகளுக்கும் தான் நிறையவே உழைப்பையும் ஆதரவையும் வழங்கியும்கூட, திரையுலகிற்கு அவர்கள் செய்வதாக உறுதியளித்த எதையுமே செய்ய முன்வரவில்லை என்று கூறியிருந்தார். சிறீலங்காவின் பிரதான கட்சிகள் மக்களையும் திரையுலகையும் நிறையவே ஏமாற்றி விட்டதாகக் கவலையுடன் குறிப்பிட்ட காமினி பொன்சேகா அவர்கள், இனிமேலும் இக்கட்சிகள் திரையுலகிற்கு எதுவும் செய்வார்கள் என்று எதிர்பார்க்காது, திரைக்கலைஞர்கள் தாங்களாகவே முன்வந்து திரையுலகை வளர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## விடுதலைப் புலிகளை பாராட்டிய யுனிசெஃப்!

(03.10.04)

"சுயவிருப்பின்பேரில் இணைய வரும் வயது குறைந்த சிறார்களை விடுதலைப் புலிகள் தமது பெற்றோரிடம் ஒப்படைத்து வருவது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதொரு விடயமுமாகும்". கடந்த வாரம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தமது சுயவிருப்பின் பேரில் இணைய வந்த இரு சிறார்களை கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் வைத்து யுனிசெப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தவேளை இலங்கைக்கான யுனிசெஃப் பிரதிநிதி, பற்றிக் கம்பல் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இவ்வாறான நிகழ்வுகள் வடக்குக் கிழக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன. விடுதலைப் புலிகள் தமது அமைப்பில் இணைய வரும் வயது குறைந்த சிறார்களை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்து அவர்களுக்கான கல்வி வசதிகளை மேற்கொள்ள நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றார்கள். ஆனால் சில ஊடகங்கள் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருவதையும் காணக்கூடியதாய் உள்ளது" என்றார்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# செய்தித் துளிகள்

- மட்டக்களப்பில் எதிர்வரும் புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் இடம் பெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த 22ம் திகதி வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் இருதரப்பினருக்குமிடையில் இடம் பெற்ற புரிந்துணர்வு சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மாதத்தில் இரு தடவை இத்தகைய சந்திப்பு மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்த்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளதன் காரணமாகவே, குறிப்பிட்ட சந்திப்பு, திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

- மன்னாரில் முஸ்லிம் வர்த்தகர் இஸ்மாயில் சலீம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அரசியல்துறை பொறுப்பாளர் எஸ்.இனியவன், தேசவிரோதக் குழுக்களே விடுதலைப் புலிகள் மீது இப் பழியை சுமத்த முற்படுவதாகவும் கூறியுள்ளார். இந்த சம்பவத்தின் எதிரொலியாக தேசவிரோத சக்திகளின் தூண்டுதலின் பேரில் தமது அலுவலகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பொலிசாரும் ஈடுபட்டதை தங்களால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும், இதுபற்றி போர் நிறுத்த கண்காணிப்புக்குழு ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

- மட்டக்களப்பு வாகரை மதுரங்குளத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பியோடிய கருணா குழுவினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான சூட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். ஓமடியாமடு வாசியான தம்பிஐயா மன்னவன் என்ற 32 வயது இளம் குடும்பஸ்தரொருவரே இவ்வாறு பலியாகியுள்ளார். காட்டிற்கு வேட்டையாடச் சென்ற சமயமே இவர் இவ்வாறு துப்பாக்கிச் சூட்டிற்குள் அகப்பட்டிருக்கலாம் என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். வேட்டையாடச் சென்ற இவர் நேற்று காலை வரை வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் தேடிச் சென்ற சமயம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவரது சடலத்தை கண்டெடுத்தனர்.

- பதுளை மாவட்டம் ஊவா பரனகமவிலுள்ள தோட்டமொன்றில் 2ம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் தோட்டப் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். பயிர்ச்செய்கைக்காக நிலத்தை மண்வெட்டியால் கொத்தி பண்படுத்திக் கொண்டிருந்த சமயம் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள் ஒன்று வெடித்து சிதறியதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக வெலிமட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- மட்டக்களப்பு - பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமமொன்றில் கைவிடப்பட்ட நிலையில் ஒரு தொகுதி வெடிப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு சனிக்கிழமை மாலை செயலிழக்கப்பட்டன. பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் `மக்' நிறுவன தொழில் நுட்ப வழிகாட்டலுடன் இந்த வெடி பொருட்களை செயலிழக்கச் செய்யப்பட்டன. ஆர்.பி.ஜி. மோட்டார்கள், கிளேமோர்கள் மற்றும் கைக் குண்டுகள் என்பன அடங்கியிருந்தன.

- தானியங்கு வேவுவிமானம் ஒன்று கடந்த 30ம் திகதி கிளிநொச்சி நகரை வட்டமிட்டு நோட்டமிட்டது. சுமார் ஒரு மணிநேரமாக விமானம் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. நீண்ட கால இடைவெளிக்குப் பின் விமானம் நோட்டமிட்டதை அச்ச உணர்வோடு மக்கள் அவதானித்தனர்.

- மாபளகம, அழுத்ஸஹலப் பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த ஆறு கொள்ளையர், ஆயுத முனையில் வர்த்தகரையும் வீட்டிலுள்ளோரையும் அச்சுறுத்தி மூன்று இலட்சம் ரூபா பணத்தையும் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் செல்லும் போது, பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இந்த அறுவருள் இருவர் இப்போதும் இராணுவ முகாம்களில் கடமையாற்றும் இராணுவத்தினர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இவர்களுள் ஒருவர், மருதானை இராணுவ முகாமிலும் மற்றவர் பனாகொட இராணுவ முகாமிலும் கடமையாற்றிவருகின்றனர். இக் கொள்ளை நடைபெற்று, ஒரு மணி நேரத்தில் பொலிசார் இவர்களைக் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது சம்பந்தமாக நாகொட பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை

(03.10.04)

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பகுதியில் முதன்முறையாக தியாகி திலீபன் மருத்துவப் பிரிவினர் நடமாடும் மருத்துவ சேவையினை வழங்கியுள்ளனர். இரண்டாம் லெப். மாலதி நினைவாக இந்த மருத்துவ சேவை இடம் பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் 9வது யூனிட் பகுதியில் முதல் கட்டமாக காலை 9 மணி முதல் மதியம் 12.30 வரை இந்த மருத்துவ சேவை இடம்பெற்றது.






இதேவேளை, விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரர் மாலதியின் நினைவு நாள் நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடத்துவதற்கு வவுனியா அரசியல்த்துறையினர் தயாராகி வருவதாகவும், முதலாம் திகதி முதல் பிரதேச ரீதியாக இந்த நிகழ்வுகள் இடம் பெறும் என்றும், இதனைத் தொடர்ந்து 10ம் திகதி வரை வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இறுதிநாள் நிகழ்வுகள் இடம் பெறவிருப்பதாகவும் விருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்த்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை தெரிவித்துள்ளார்.

# தமிழ்க் குழுக்கள் கொல்லப்படுவதற்கு சந்திரிகா கடும் கவலை!

## தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும் தெரிவிப்பு



(03.10.04)

ஜனநாயக வழிக்கு வந்த அரசியற் கட்சிகளின் பிரமுகர்களை விடுதலைப் புலிகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின் தொடர்ந்து படுகொலை செய்து வருவதாகவும், நிராயுதபாணிகளான அரசியற் கட்சிகளின் பிரமுகர்களை தொடர்ந்தும் கொலை செய்வதை அரசாங்கம் என்ற ரீதியில் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்றும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்படும்போது, இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படலாமென அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலமும், நேரடியாகவும் பல முறை எடுத்துக் கூறியதாகவும் அப்போது நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டங்களிலும் இதனை பிரஸ்தாபித்திருப்பதாகவும் தெரிவித்த சந்திரிகா, அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பெனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கடந்தவாரம் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளார். அந்த அறிக்கையில், எமது அரசாங்கம் பதவியேற்ற பின் பாதுகாப்புக் கோரி அனைத்து தமிழ் அரசியல்வாதிகளுக்கும் கூடுதல் பட்ச பாதுகாப்பினை வழங்கியது. ஜனநாயக வழிக்குள் பிரவேசித்தவர்களின் பாதுகாப்பை வழங்குவது அரசின் கடமையென பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்படுகிறது. முன்னர், ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்தபோது, அனைவரும் தமது பாதுகாப்பிற்கு தாமே பொறுப்பு என்று கூறப்பட்ட கொள்கையினை அரசாங்கம் நிராகரிக்கும் அதேசமயம், அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பினை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பென ஏற்றுக் கொள்கிறது. வடக்கு, கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறும் மனிதப் படுகொலைகளை நிறுத்துவதற்கு கண்காணிப்புக் குழுவினால் முடியாதுள்ளது. தெற்கில் குறிப்பாக கொழும்பில் நடைபெறும் கொலைகளுக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டுமென்பதால் இது தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா குழுவுடன் டக்ளஸ் குழு மற்றும் ஏனைய தமிழ்க்குழுக்கள் இணைந்து செயற்படத் தொடங்கியதன் பின்னரே ஏராளமான ஈ.பி.டி.பி. கூலிக்குழுவினர் கொல்லப்பட்டுள்ளனர். இது அக் குழுக்களுக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடுகள் காரணம் என செய்திகள் வெளியாகிய வண்ணமுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் ஆயுதக்குழு !

(03.10.04)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்திடையே ஆயுதக்குழு ஒன்று செயற்படுவதை அக்கரைப்பற்று ஒலுவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உறுதிப்படுத்துவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். அக்கரைப்பற்றில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு முஸ்லிம் ஆயுதக்குழுவே காரணம் என தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. இரு அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட பிணக்குத்தான் இக் கொலைக்குக் காரணம் எனவும் இதில் ஒரு முஸ்லிம் ஆயுதக்குழு சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முஸ்லிம் பிரதேசங்களில் சிறு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடந்தாலும் விடுதலைப் புலிகள் தான் காரணம் என தவறான பிரச்சாரம் செய்து வந்த நிலையில் தற்போது அக்கரைப்பற்று சம்பவம் முஸ்லிம்களிடையே ஆயுதக் குழுவொன்று செயற்படுவதை தெளிவாகக் காட்டுகின்றது எனவும் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.



சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்
N.S.Jewellery
(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)
உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.
சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.
N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich
Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# சந்திரிகாவின் பொய்களை உடைத்தெறியும் வருகை

விடுதலைப் புலிகள்தான் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கிறார்கள். பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு விடுதலைப் புலிகள்தான் தாமதம் காட்டுகிறார்கள் என்று சிறீலங்கா ஜனாதிபதியும் அவரது அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் சர்வதேச அளவில் ஒரு தவறான செய்திகளைப் பரப்பிவருகிறார்கள். இந்நிலையில், சிறீலங்கா ஆளும் தரப்பு சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகளின் மீது பரப்பி வரும் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் அரசியல் உயர் மட்டக் குழுவினரின் சுவிஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் அமைந்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத் தொடரில் உரையாற்றியிருந்த சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கக் கூடிய ஒரு சூழலை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தவில்லை என்ற ரீதியில் குற்றம்சாட்டியிருந்தார். இவரது இந்தப் பொய்யுரையை அம்பலப்படுத்தி, சமாதானப் பேச்சுக்கான சூழலை, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் தற்போது சுவிஸ் நாட்டை வந்தடைந்திருக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு ஏற்படுத்தும் எனவும் எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்த இப்பயணம் வழிவகுக்கும் எனவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மிக விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு இடைக்கால வரைபுக்கு அமைய தீர்வு ஒன்று எட்டப்பட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். சமாதான முன்னெடுப்புக்களின் அடிப்படையில் மனிதாபிமான நடவடிக்கை மிகவும் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஆகவே அந்த வகையில் பேச்சுக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டுமென விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் இறுக்கமான உறுதிப்பாட்டுடன் இருக்கிறது. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து தமக்குள் முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் அரசாங்கம், அதனால் பேச்சு மேசைக்கு வரத் தயங்குவதை வெளிக்காட்டாமல், சர்வதேச ரீதியில் உண்மைக்குப் புறம்பான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. இதற்கமைய தமிழ் மக்களினதும் தலைமைப்பீடத்தினதும் நிலைப்பாடுகளை வெளிநாடுகளுக்கு உயர்மட்ட அளவில் வெளிப்படுத்தவே இப்பயணம் எனவும், தமது ஐரோப்பிய விஜயத்தின் நோக்கம் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்துவதேயாகும். அத்துடன் சர்வதேச அரசியலாளர்களைச் சந்தித்து எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை சம்பந்தமாக சில முடிவுகள் எடுப்பதற்குமாகும். ஜனாதிபதி சந்திரிகா ஒவ்வொரு நேரத்திற்கும் ஒவ்வொரு மாதிரி பேசுகிறார். எனவே சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்து அவர்களைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவர வேண்டும். இடைக்கால வரைபை ஏற்றுக் கொண்டு அரசு பேச்சு நடத்தினால், தாம் முழு ஆதரவு வழங்குவோம் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. இந்தத் தருணத்தை அரசு சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என்று சுவிஸ் புறப்படுவதற்கு முன்னர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆனால், ஆளும் தரப்புகள் சமாதானத்தைக் காண்போம் என உதட்டளவில் கூறிக் கொண்டு உள்ளத்தில் போர்த் திட்டங்களை வகுத்துக்கொண்டு ஆயுததளபாடக் கொள்வனவுகளில் ஆர்வங்காட்டி வருவதால் தமிழினத்தின் பிரச்சினைக்கான தீர்வு என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தி அரசியல் பிணக்குக்குத் தீர்வு காண்பதன் மூலம் சமாதானத்தை தோற்றுவிக்கலாம். ஆனால் தென்னிலங்கையில் இனவாதம் ஊற்றெடுத்துக் கொண்டே வருகின்றது. சிறீலங்காவின் ஆட்சி அதிகாரம் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து சிங்கள இனவாத சக்திகளின் கைகளுக்கு மாறிய காலம் தொடக்கம் தென்னிலங்கையில் ஊற்றெடுக்கும் இனவாதம் சமாதானத்தை மூழ்கடித்து வருகின்றது.

தற்போதும் தென்னிலங்கையில் ஊற்றெடுக்கும் இனவாதத்தை கட்டுப்படுத்திப் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைவாக சமாதானத்தைக் கொண்டு வரும் காய் நகர்த்தல்களை ஆளும் அம்மணி தரப்பு மேற்கொள்ளாது சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகள் பெற்றிருக்கும் நற்பெயரைச் சிதறடிக்கும் சூழ்ச்சி வலைகளை விரிக்கும் வகையில் பொய்ப் பிரச்சாரங்களை பரப்பி வருவதை அண்மைக் கால நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

எனினும் சர்வதேசம் இன்று விடுதலைப் புலிகளின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது அவர்களது கோரிக்கைகளை நியாயமானதாக மனப்பூர்வமாக ஏற்கும் சூழல் தோன்றியுள்ளது. இத்தகைய நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் விஜயம் பெறுமதிமிக்கது. அது எதிர்காலத்தில் இறுகிப் போயிருக்கும் சமாதான முயற்சியை இலகுபடுத்தி சமாதானச் சூழலை ஏற்படுத்துவதற்கு சர்வதேச ரீதியாக சிறீலங்கா அரசுக்கு அழுத்தத்தைப் பிரயோகிக்க வழிவகுக்கும் என்பது உண்மை.

# சிறுபான்மையினர் பலத்தைச் சிதைக்க!

வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்ற சட்ட மூலத்தை அரசாங்கம் விரைவில் அமுலாக்கம் செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றது. எதிர்வரும் ஏழாம் திகதி இச்சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் அரசாங்கத் தரப்பு குறியாக இருப்பதாக அரச தரப்புத் தகவல்களில் இருந்து உணரக்கூடியதாகவுள்ளது.

ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் இச்சட்ட

**இதற்குத் தமிழ் தரப்பில் இருந்து எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டாலும் அரசாங்கம் இதனைக் கருத்திற்கொள்ளப்போவதில்லை - இத்தகையதொரு நிலையே தற்பொழுது இ.தொ.கா விற்கும் ஏற்பட்டுள்ளது.**

மூலத்தில் தீவிர அக்கறை காட்டுவதென்பது ஒன்றும் தேர்தலில் மோசடிகள் இடம் பெறாமல் தடுத்து விடுவதற்கோ அன்றி சனநாயக ரீதியில் அரசாங்கம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்ல. அரசாங்கத்தின் ஒரே இலக்கு சிறுபான்மை இனங்களின் அரசியற் பலத்தைச் சிதைவுறச்செய்வதே ஆகும்.

வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்பது சிங்களவரைப் பொறுத்து பெரியளவிலான பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் பெரும் பகுதியினர் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அவ்வாறு பெற்றுக்கொள்ளாது போனாலும் விரைவில் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

ஆனால் சிறுபான்மையினரைப் பொறுத்து குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தே இது பாரிய கேடு விளைவிப்பதாகவும், அவர்களின் சனநாயக ரீதியான உரிமைகளை மறுப்பதாகவும் அமையத்தக்கதாகும். ஆனால் இது சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தெரியாததல்ல இதனால் அடையாள அட்டை அவசியம் என்பது புரிந்து கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையல்ல.

மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்து பிரஜாவுரிமை பெறுதலில் இருந்து தேசிய அடையாள அட்டை பெறுதல் வரையில் நெருக்கடி மிக்கதொன்றாகவே உள்ளது. அதாவது இவை தொடர்பான ஆவணங்களை அவர்கள் தேடிக்கொள்வதென்பதும், அதன் மூலம் அடையாள அட்டைகளைப் பெறுதல் என்பதும் மிகவும் சிக்கல் நிறைந்ததாகவே இன்றும் உள்ளது. ஆகையினால் இதனைக் காரணம் காட்டி வாக்களிக்கத் தடைசெய்தல் என்பது அம்மக்களின் சனநாயக உரிமையை மறுப்பதற்குச் சமமானதாகும்.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தும் இது குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தத்தக்கதாகும். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தமிழ் மக்களின் தாயகத்தில் சிறிலங்கா இராணுவம் கட்டவிழ்த்து விட்ட போரினால் மக்கள் பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வந்தது. பல தடவைகள் இடப்பெயர்வுகளைச் சந்திக்க வேண்டியும் வந்தது. இவற்றின் காரணமாக தேசிய அடையாள அட்டைகள், பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட்ட முக்கிய ஆவணங்களும் தொலைந்து போயும் காணமற் போயும் உள்ளன. இவற்றை மீளப் பெறுதல் என்பதும் இலகுவானதாக இல்லை. இந்நிலையில் தேசிய அடையாள அட்டை கோருவதென்பது அவர்களின் வாக்களிக்கும் உரிமையை மறுப்பதற்கு ஒப்பானதாகும்.

இதேபோன்று வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களும் இச்சட்டத்தின் மூலம் பாதிப்பிற்குள்ளாகும் நிலையியே உள்ளது. இவர்களும் கடந்த இரு தசாப்த காலமாக யுத்த பிரதேசத்திற்குள் வாழ்ந்தமை காரணமாக தேசிய அடையாள அட்டை போன்ற ஆவணங்களை முழுஅளவில் கொண்டுள்ளவர்களாக இல்லை.

இந்நிலையில் தேர்தலில் வாக்களிக்கத் தேசிய அடையாள அட்டை அவசியமென்ற அரசின் சட்டமூலமானது நடைமுறையில் சிறுபான்மை மக்களின் வாக்குரிமைகளைப் பறிக்கும் அன்றிக் கட்டுப்படுத்தும் ஒன்றாகவே இருத்தல் முடியும்.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து சிறுபான்மையினர் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிப்பதென்பது என்றும் எரிச்சல் ஊட்டும் விடயமாகவே இருந்து வருகின்றது. ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கியதெனினும் இதனை ஒழித்து விடுவதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் பகீரதப் பிரயத்தனங்களைச் செய்து வருகின்றனர். இதற்கான முதற்படியாகவே வாக்களிப்பிற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதற்குத் தமிழ் தரப்பில் இருந்து எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டாலும் அரசாங்கம் இதனைக் கருத்திற்கொள்ளப்போவதில்லை. இத்தகையதொரு நிலையே தற்பொழுது இ.தொ.கா விற்கும் ஏற்பட்டுள்ளது. இச்சட்ட மூலத்தில் தமது திருத்தம் இடம்பெறவேண்டும் என இ.தொ.கா வலியுறுத்திய போதிலும் அரசாங்கம் இதனைக் கண்டுகொள்ளவில்லை.

இ.தொ.கா அரசாங்கத்தில் பங்கேற்பினும் இத்தகையதொரு அவலம் ஏற்பட்டுள்ளமைக்கு இ.தொ.கா நிபந்தனையற்ற விதத்தில் சரணாகதி அடைந்தது போன்று அரசாங்கத்தில் பங்கேற்க முடிவு செய்ததே ஆகும். ஆனால் ஆட்சியில் பங்காளிகள் என்ற ரீதியில் இச் சட்டமூலம் நிறைவேற்ற இ.தொ.கா ஆதரவு அளிக்குமேயானால் அது அக்கட்சியைப் பொறுத்து தற்கொலை செய்வதற்கு ஒப்பானதாகும்.

(தங்களுடைய கருத்துக்கள் வெளியிடுவதற்கு அனுமதியளித்த மட்டக்களப்பு ஈழநாதம் நாளேட்டு நிறுவனத்தினருக்கு அனுப்பி வைக்கப்படும்.)

– **நன்றி ஈழநாதம்** *(04.10.2004)*



# கைகூடாமல்போன ஆலோசனை சபை !

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அது தொடர்பான ஆலோசனைகளை பெறுவதற்கும் மற்றும் நாட்டில் பல்வேறு பட்ட பிரச்சினைக் கான தீர்வுகளை அணுகுவதற்கும் ஏதுவாக ஜனாதிபதி தேசிய ஆலோசனை சபையொன்றை நிறுவுவதற்கு எடுத்த முயற்சி கைகூடவில்லை. ஏற்கனவே திட்டமிட்டபடி ஆலோசனை சபையின் முதலாவது அமர்வு இன்று (நேற்று) நடைபெற்றது. காலி முகத்திடலில் உள்ள பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி தலைமை தாங்கியிருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் சமூகமளித்திருந்தன. ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இந்த அமர்வை பகிஸ்கரித்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முற்றாகவே நிராகரித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமய முன்நிபந்தனையுடன் இன்றைய அமர்வில் கலந்துகொள்ள வில்லை. குறிப்பிட்டுச் சொல்வதானால் ஜனாதிபதி எதிர்பார்த்த கட்சிகள் எதுவும் இந்த அமர்வை பகிஷ்கரித்தன அல்லது நிராகரித்தன என்றே கூறலாம். யாருடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த ஆலோசனை சபையை ஜனாதிபதி கூட்டினாரோ அந்தப் பிரச்சினைக்குரிய மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகையை பயனற்றது என விமர்சித்திருக்கின்றது.

நோர்வேயின்` ஏற்பாட்டுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் அனைத்து முன்னேற்றங்களுக் கும் ஜனாதிபதியே தடைக்கல் என்பதும் கண்கூடு. இந்த நிலையில் ஜனாதிபதி கூட்டிய தேசிய ஆலோசனை சபை அந்த தடைக்கல்லுக்கு மேலும் மெருகூட்டுவதாகவே அமைந்திருக்கின்றது. (ஜனாதிபதியின் நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்கு முறை இப்பந்தியில் ஏற்கனவே விமர்சிக்கப்பட்டது.) யார் என்ன சொன்னாலும், எதனைச் செய்ய முற்பட்டாலும், ஜனாதிபதி தான் நினைத்ததை செய்து முடிப்பதில் கங்கணம் கட்டியிருக்கின்றார் என்பதற்கு இன்றைய இந்த அமர்வு சாட்சி பகிர்கின்றது. ஜனாதிபதி செய்பவை எதுவும் இதுவரை உருப்பட்டதாகவோ அல்லது அது நடைமுறைக்கு வந்ததாகவோ சரித்திரம் இல்லை. எல்லாமே பேச்சளவிலும் உதட்டளவிலும் மட்டும்தான். பிரச்சினைக்கு தீர்வுகாண உண்மையான அக்கறை ஜனாதிபதிக்கு இருந்திருக்குமானால் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாகவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். நிறைவேற்று அதிகாரம் இருக்கும் போது சகல கட்சிகளையும் அழைத்து ஆலோசனை பெறுவது என்ற ஜனாதிபதியின் முயற்சி வேடிக்கையானதுதான். அந்த வகையில் இன்றைய அமர்வு வேடிக்கையாகவே அமைந்துவிட்டது. சர்வதேச நாடுகள் கூட ஜனாதிபதியின் இந்த முயற்சியை வரவேற்கவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அதற்கான ஏற்பாடு செய்யவும் நோர்வே இருக்கும் போது இந்த ஆலோசனை சபை எதற்கு என்ற கேள்வியே எல்லோர் மனதிலும் விஞ்சி நிற்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்னெடுப்புக்கள் கடந்த சில மாதங்களாக பின்னடைவு கண்டுள்ளன. பொறுமை எல்லை மீறிக்கொண்டிருக்கின்றது. யுத்தத்தின் கொடூரத்தன்மையை அறியாதவர்கள் நெருப்புடன் விளையாடிக் கொணடிருக்கின்றார்கள் என்ற கடுமையான எச்சரிக்கைகள் சமாதான முயற்சியாளர்களிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்னெடுப்புக்கள் பின்னடைந்து வருவதைக் கண்டு இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதன் பொருட்டு கடுமையாக உழைத்துவரும் நோர்வே மற்றும் ஜப்பான் பிரதிநிதிகள் விசனமடைந்துள்ளனர். பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவர்களான அரசும் விடுதலைப் புலிகளும் இழுபறிகளை விட்டு விரைவாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என ஜப்பானின் சமாதானத்திற்கான விசேட தூதுவர் யசூசி அகாஸி அங்கலாய்ப்புடன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தை மட்டுமே அவதானித்துக் கொண்டிருப்பதற்கு சர்வதேச சமூகத்திற்கு காலம் இல்லை. இலங்கைக்கான அதன் கால அவகாசம் நழுவிக்கொண்டிருக்கின்றது. இதனை இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என கூறுபவர்கள் மட்டும் அல்ல சகலரும் உணர வேண்டும் என்ற எச்சரிக்கையும் அவரிடமிருந்து வெளிப்பட்டிருக்கின்றது. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதன் பொருட்டு நோர்வே அரசாங்கத்தினதும் அதன் பிரதிநிதிகளினதும் பங்களிப்பு போற்றக்கூடிய அளவுக்கு இருந்து வருகின்றது. நோர்வேயின் பங்களிப்பினை குறைத்து மதிப்பவர்களும் அவமதிப்பவர்களும் நோர்வேயின் பங்களிப்பினை அலசி ஆராயவேண்டும். எதனையும் ஒரு வெறுப்புக் கண்களுடன் பார்க்காமல் ஏற்பட்டுள்ள நன்மைகளை ஓரளவுக்காவது உள்வாங்க முயற்சிக்க வேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கை போன்ற முன்னேற்றகரமான அம்சங்கள் இடம்பெற்றமைக்கு நோர்வேதான் காரணம் என்பதை இவர்கள் உணர வேண்டும். இல்லையெனில் கடந்த ஈராண்டுகளுக்கு மேலான காலத்தில் நாட்டில் பேரழிவுகள் இடம் பெற்றிருப்பதுடன் மேலும் பல ஆயிரம் பயிர்கள் பறிபோயிருக்கும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு என்பது பல கட்சிகளின் கூட்டு முன்னணியாகும். அரசு ஒன்றினை அமைப்பதில் இவர்கள் ஒன்றிணைந்துள்ள போதும் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை விவகாரத்தில் இவர்களிடையே ஓர் இணக்கப்பாடு இல்லை. இத்தன்மை பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு பெரும் இடைஞ்சலாகவிருக்கின்றது என்பது உணரக்கூடியதே. அரசு தன் பங்காளிகளிடையே நிலவுகின்ற முரண்பாடுகளை நீக்கிக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. பிரதான அரசியல் கட்சிகளிடையே இணக்கப்பாடுகள் ஏற்படவில்லையானால் சர்வதேச நாடுகள் சிறீலங்காவை கைவிடும் நிலைதான் ஏற்படும். சர்வதேச சமூகத்தின் மனநிலையை அரசியல் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் சமாதானம், பொருளாதார அபிவிருத்தி என்பதைக் கண்டுவிட முடியாது. பேரினவாத அரசியல்வாதிகளின் தீர்க்க தரிசனமற்ற, தூர திருஷ்டியற்ற குறுகிய



கொள்கைகள் மக்களை மேலும் மேலும் இனரீதியான பிரிவுக்கே இட்டுச்செல்லும். ஆகவேதான் தேசிய ஆலோசனை சபை, வட்டமேசை மாநாடு, நாடாளுமன்ற ஆலோசனைக்குழு என்றெல்லாம் குழுக்களை அமைத்து காலம் தாழ்த்தாது புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிப்பது உசிதமானது.

**– கொழும்பில் இருந்து**
**ஊரோடி**

## மரண அறிவித்தல்

மலர்வு
19.03.1961



உதிர்வு
27.09.2004

### திரு. காந்தன் செல்லத்துரை

***யாழ் கரவெட்டியை பிறப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த காந்தன் செல்லத்துரை 27.09.2004 அன்று காலமானார்.***

இவர் காலஞ்சென்ற கந்தன், மீனாட்சியின் அன்புமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், பவித்திரி, விதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினம் (இந்தியா) சரஸ்வதி (இலங்கை) செல்வமலர் (பிரான்ஸ்) வசந்தமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராஜா, நந்தகுமார், விஜயகாந்தன், கிரிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாபு, பவா, மயூரன், சோபனா, கஜனி, அனுஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.10.2004 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் பிற்பகல் 14.15 மணிவரை Hopital tenon, 4 rue la chine-75020 இல் ஈகக்கிரியைகள் நடைபெற்றபின் Cremotorium du pére - Lachaise 71, Rue des rondeaux, 75020 (M° Ligne N0-3) Gambettaஇல் உள்ள சேமக்காலையில் பிற்பகல் 15.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்றபின் மாலை 16.00 மணிக்கு தகனம் செய்யப் படும் என்பதை அறியத் தருகின்றோம்.

***தகவல்***
***உற்றார், உறவினர், நண்பர்கள்.***
Tél: 01 64 52 62 61 - 06 64 11 46 15 (விஜி)
01 44 93 09 17 (நந்தினி) - 06 13 47 12 59 (பவா).

# படைத்தரப்பின் போக்கில் மாற்றம் ஏற்படுமா?



யாழ் மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் யாழ் மாவட்ட கட்டளை அதிகாரியாக பொறுப்பேற்ற பின் 29.03.2004 அன்று யாழ் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினரை சந்தித்தார். இச்சந்திப்பு ஒரு அறிமுகத்திற்கான சந்திப்பு எனக் கூறப்பட்ட போதிலும் இச்சந்திப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதை விட இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ் மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன்பன், யாழ் மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த சுதாஸ், யாழ் மாவட்ட ஊடகப்பிரிவுப் பொறுப்பாளர் இமயவன், ஆகியோரும் படைத்தரப்பில் யாழ் மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தயா செனிவிரட்ன, கேணல் ரணவல, காரைநகர் கட்டளை அதிகாரி ம.பிரேமரட்ண, வடபகுதி கடற்படை உதவி கட்டளை அதிகாரி ரணசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு வழமையான சந்திப்பு எனவும் இச்சந்திப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதாக இரு தரப்பும் கூறினாலும் இச்சந்திப்பில் இருதரப்பிலும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதை விட இச்சந்திப்பு இரண்டு மணி நேரமாக இடம் பெற்றிருக்கின்றது. இதை விட அடுத்த சந்திப்பிற்கான திகதியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் உயர் பாதுகாப்பு வலய விடயம் நிச்சயமாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கும். இவ்விடயத்தில் யாழ் குடாவின் புதிய படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் எவ்வாறு சமாளித்திருப்பார் என்பதே முக்கியமான கேள்வியாகும்.

இருந்தாலும் இச்சந்திப்பு பற்றி இரு தரப்பும் குழப்பம் இன்றி தங்களது சந்திப்பை முடித்துள்ளனர். ஆனால் இனிவரும் காலத்தில், யாழ் குடாவின் புதிய இராணுவத் தளபதி உயர் பாதுகாப்பு வலய விடயத்தினை எவ்வாறு கையாண்ட தனது பதவிக் காலத்தை கடத்தப் போகிறார் என்பதே தற்போதைய கேள்வியாகும். யாழ் குடாநாட்டிற்கு வரும் மேற்குலக இராஜதந்திரிகளும் தென்பகுதி ஊடகவியலாளர்களும், தென்பகுதி பொது அமைப்புக்களும், யாழ் குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயங்களை ஆராய்வதில் அக்கறை காட்டத் தொடங்கி உள்ளனர். குடாநாட்டில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்திக்கும் தென்பகுதி மக்கள் அல்லது தென்பகுதி அமைப்புக்கள் உயர் பாதுகாப்பு விடயங்களை அறிவதில் காட்டும் அக்கறையை பார்க்கும் போது அவர்களுக்கு குடாநாட்டு நிலவரம் பற்றிய சரியான தேளிவில்லை என்று தான் கூற வேண்டும். இங்கு வந்து நிலைமைகளை அறிந்து தெளிவு பெற்றபின் அவர்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது. இந்த அமைப்புக்களிடம் ஏற்படும் மாற்றம், சாதாரண சிங்கள மக்களிடமும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். இதை இங்கு, வந்து செல்பவர்கள் அங்கு போய்ச்செய்பவர்களா என்பது கேள்விக்குரிய விடயம் தான். ஒரு சில அமைப்புகள் ஆக்கபூர்வமாக செயற்பட்டாலும், பல அமைப்புக்கள் யாழ் குடாநாட்டிற்கு பொழுது போக்கிற்காக வந்து பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடிவிட்டு, அவர்கள் தமது பொருளாதார வளத்தை பெருக்கிக் கோள்கிறார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்பு யாழ் குடாநாட்டிற்கு வந்த மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பைச் சேர்ந்த குருநாகல் மாவட்டத்தில் இருந்து வருகை தந்த ரஞ்சித் மொறகொட தலைமையிலான குழுவினர், வெளிப்படையாக இங்கு மக்கள் படும் அவலத்தை தாங்கள் சரியாக அறியவில்லை என மனம் திறந்து தெரிவித்துள்ளனர். இவரின் கருத்து உண்மையாக இருந்தாலும், படைத்துறையினர் படைவலுச் சமநிலைக்காக தாங்கள் தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பேண வேண்டும் என்பதில் உறுதியாகவே உள்ளனர். தனிமனித அவலங்களையும் அவர்களின் வாழ்விற்கான உரிமைகளையும் படைத்தரப்பு மதிக்கப்போவதில்லை. இதைத்தான் புதிய யாழ் குடா படைத்தளபதியும் செய்யப்போகிறார். ஆனாலும் படைத்தரப்பு மக்களின் வாழ்விடங்களை தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயமாக பேண வேண்டுமானால் இனிவரும் காலத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கவே வாய்ப்பு உள்ளது. தொடர்ச்சியாக அகதி முகாம்களில் வாழும் மக்கள் இன்னல்களை அனுபவித்தால், அவர்கள் வீதிகளில் இறங்கிப் போராட தயாராகி வருகிறார்கள். மக்களின் நியாயமான போராட்டங்களுக்கும், மனித உரிமை ஆர்வலர்களின் கேள்விகளிற்கும் பதில் சொல்ல வேண்டியவராக யாழ் குடாப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இருக்கிறார்.



இது இவ்வாறு இருக்க, பலாலி படைத்தளத்திற்கு கனேடியத் தூதுவர் விஜயம் செய்து, நீண்ட நேரமாக யாழ் குடா படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் பேச்சு நடத்தியுள்ளார். செவ்வாய்க்கிழமை பலாலி இராணுவத் தளத்திற்கு வந்த சிறீலங்காவிற்கான கனேடியத் தூதுவர் வலேரி ரேமண்ட் அம்மையார், முன்னதாக சிரேஷ்ட படை அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இதன் பின்னரே யாழ் குடா படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை சந்தித்து கலந்துரையாடி உள்ளார். இச்சந்திப்பில் உயர் பாதுகாப்பு வலயப் படைவலுச்சமரில் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை இவர்கள் ஆராய்ந்துள்ளனர். இச்சந்திப்பின் போது பாதுகாப்பு வலயம் தொடர்பாக கனேடிய தூதுவர் படை அதிகாரி கூறிய விளக்கங்களை ஏற்றுக் கொண்டாரா, என்பது ஒரு புறம் இருக்க, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான பிரதிநிதிகளை கிளிநொச்சியில் சந்தித்த கனேடியத் தூதுவர், மறுநாளே அவசரமாக யாழ் குடாநாட்டிற்கு வந்து படைத்தரப்பைச் சந்தித்ததன் நோக்கம் என்ன? யாழ் குடாநாட்டிற்கு வருகின்ற மேற்குலக நாட்டுத் தூதுவர்கள் வழமையாக பலாலியில் படைத் தரப்பையும் சிவில் சமூகத்தையும் சந்திப்பது வழக்கம். அமெரிக்கா உட்பட மேற்குலகில் இருந்து வரும் அனைத்து இராஜதந்திரிகளும் தமது விஜயத்தின் போது இத்தகைய நடைமுறையினையே பின்பற்றி வருகின்றனர். ஆனால் கனேடியத் தூதுவர் குடாநாட்டின் வேறெந்தப் பகுதிக்கும் விஜயம் செய்யாமல் பலாலிப் படைத்தளத்திற்கு மட்டுமே விஜயம் செய்துள்ளார். இவருடன் கனேடியத் தூதர ஆலோசகர் கிறிஸ்ரினா பிறிபொன்ரை சிரேஷ்ட அபிவிருத்தி அதிகாரி ஜே.வில்லியம்சும் இச்சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர். யாழ் குடாநாட்டின் மக்களின் நிலைமையை அறியும் ஆவல் கனேடியத் தூதுவரிற்கும் அவரது குழுவினருக்கும் இருந்திருந்தால், அவர்கள் நிச்சயமாக யாழ் குடாநாட்டிற்கு வருகை தந்த போது குடாநாட்டில் மக்கள் சார்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திக்க முற்பட்டிருப்பார்கள். படைத்தரப்பை மட்டும் சந்தித்தமையால் நிச்சயமாக படைவலுச்சமநிலை பற்றியும் உயர் பாதுகாப்பு வலயம் பற்றியும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் பற்றியுமே இவர்கள் ஆராய்ந்திருப்பார்கள். குடாநாட்டின் மக்களின் உணர்வுகளை மனம் திறந்து குடாநாட்டு இராணுவத் தளபதியால் நிச்சயமாக கனேடியத் தூதுவருக்கோ அல்லது வேறு எந்த நாட்டு தூதுவருக்கோ கூறமுடியாது. அவ்வாறு கூறினால் அது படைத் தரப்பின் இருப்பை கேள்விக் குறியாக்கி விடும். அத்தகைய ஒரு வேலையை படைத்தரப்பு எப்போதுமே செய்யாது. அவ்வாறு படையினர் மனம் மாறினால் எதிர் காலத்தில் அவர்களுக்கும் நல்லது, ஏக்கப் பெருமூச்சுடன் வாழும் தமிழ் மக்களுக்கும் நல்லது.

**வே. தவச்செல்வன்**

சுஜி ஜுவல்லரி **SUJI JEWELLERY**

சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜிஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்கநகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

**Neuengass - Passage 3, 3011 Bern** **Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02**

# சமாரா குண்டுவீச்சில் 100 இற்கு மேற்பட்டோர் பலி, படுகாயம் !

(01.10.04)

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஈராக்கியப் படைகள் ஈராக்கின் வடபகுதி நகரமான சமாரா மீது இன்று அதாவது வெள்ளியன்று நடாத்திய பாரிய குண்டுவீச்சு மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாகவும், பலநூறு மக்கள் காயமடைந்திருப்பதாயும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஈராக்கின் உள்துறை அமைச்சின் பேச்சாளர் இதுபற்றி ஊடகத்துறைகளுக்கு விளக்கியபோது சிறுபான்மை சுன்னித் முஸ்லீம்களின் முக்கோணப் பிராந்தியமான சமாராவைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் தாக்குதல்களை தாம் ஆரம்பித்திருப்பதாயும் தமக்கு அமெரிக்க படைகளும் வான் மற்றும் தரைவழித் தாக்குதல்களில் உதவி புரிந்துவருவதாயும் தாம் இதுவரை சமாராவின் 80 வீதத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதாயும் தெரிவித்தார். அமெரிக்கப் படைகளின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றிக் கூறியபோது 109 தீவிரவாதிகள் தம்மால் கொல்லப்பட்டதாயும், பலர் படுகாயமடைந்துள்ளதாயும் தெரிவித்தார். ஆனால் உயிரிழந்தவர்களில் பெரும்பான்மையினர் பொதுமக்கள் என்பது உத்தியோகபூர்வமற்ற செய்தியூடகங்களின் வாயிலாகத் தெரியவந்துள்ளது.

சமாரா மீதான தாக்குதல்களை நேற்றிரவு கனரக ஆயுதங்கள் மற்றும் விமானங்களின் உதவியுடன் ஈராக்கிய அமெரிக்கப் படைகள் ஆரம்பித்தன. இப்படைகளை எதிர்த்து தீவிரவாதிகள் சிறு ஆயுதங்கள் மற்றும் எறிகணைகள் கொண்டு மோதினார்கள். இதே வேளை தமது படைகளால், ஈராக்கிய கடத்தல்காரர்களால் பணயக்கைதியாக்கப்பட்டிருந்த துருக்கித் தொழிலாளர் ஒருவரை மீட்டுள்ளதாய் அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக்கில் அடுத்த சில மாதங்களில் தேர்தல் இடம்பெறலாம் என்ற நிலையில் ஈராக்கியப் படைகள் தமது கட்டுப்பாட்டிற்குள் நாடு முழுவதையும் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாகவே இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சகத்தை ஆதாரம் காட்டி மத்திய கிழக்கின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



சமாரா வீதிகளில் ஈராக்கியப் படையினர்

## பாகிஸ்தான் குண்டுவீச்சில் பாரிய உயிரிழப்புக்கள்

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் ஒன்றில் 28 பேர் கொல்லப்பட்டு, 50 பேர் காயமடைந்துள்ளனர். பாகிஸ்தானின் தென்கிழக்கு நகரமான சியால்கொட்டில் மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் இடம்பெற்றவேளை பள்ளிவாசலில் 700 முதல் 800 பேர்வரை பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் சம்பவம் நடைபெற்றது வெள்ளிக்கிழமை என்பதால் அதிகமான இஸ்லாமியர்கள் தொழுகையில் ஈடுபட வந்தனர் என்றும் அரச செய்தியொன்று தெரிவித்தது. இதேபோன்று தாக்குதல்கள் நாட்டில் பல பகுதிகளிலும் நடைபெறும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன என்றும் வேறு பல பள்ளிவாசல்களில் வெடிமருந்து நிரப்பப்பட்ட பயணப் பைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிசார் தெரிவித்தனர். இப் பள்ளிவாசல்கள் எல்லாமே சியாத் இன இஸ்லாமியர்களுக்கானவை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வாரம் அல்கைய்டா அமைப்பின் முக்கிய உறுப்பினர் எனக் கருதப்படும் அம்யத் குசைன் பாரூக்கி என்பவர் கடுமையான மோதல்களின் பின் கைது செய்யப்பட்டார். இவர் 2002ம் ஆண்டில் செய்தியாளர் ஒருவரின் கொலைக்கும், 2003ல் அதிபர் முசாரப்பை இரண்டுதரம் கொலை செய்ய முயன்ற தாக்குதல்களுக்கும் காரணமானவர் என பொலிசார் தெரிவித்தனர்.

இவரது கைதிற்குப் பின்னரேயே இத் தாக்குதல்கள் திட்டமிடப்பட்டுள்ளன என்றும் இதனைத் திட்டமிட்டவர்கள் நிச்சயமாக பாகிஸ்தானியர்களாகவே இருக்க முடியாதென்றும் அந்நாட்டின் செய்தித்துறை அமைச்சர் சேக் ரசீத் அகமது தெரிவித்தார்.



பள்ளிவாசல் காவலில் பொலிசார்

## காசாவின் வடபகுதிக்குள் இஸ்ரேல் ஊடுருவல், மோதல்கள் தொடர்கின்றன

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் இன்று அதிகாலை காசா பகுதியின் வடபகுதிக்குள் நுழைந்தன. நூற்றுக்கு மேற்பட்ட தாங்கிகள், உலங்குவானூர்திகள் சகிதம் ஐநாவின் பராமரிப்பிலுள்ள அகதிகள் முகாம்களான ஜவாலியா முகாம் பெய்ட் லகியா மற்றும் பெயிற் கனூன் போன்ற பகுதிகளுக்குள் நுழைந்தன. இங்கு பாலஸ்தீனப் போராளிகளுக்கும் இஸ்ரேலியப் போராளிகளுக்கும் இடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்றுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. காசா பகுதியில் கடந்த சில நாட்களாக எறிகணைத் தாக்குதல்கள மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அப் பகுதிகளில் யூதக் குடியிருப்புக்கள் மீது தாக்குதல்கள் விரைவுபடுத்தப்பட்டு வருவதனையும் அவதானித்த இஸ்ரேலிய உளவுத்துறை உடனடியாக இப்பகுதி மீது தாக்குதல்கள் நடத்தப்படவேண்டும் என்றும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகளின் பிரசன்னம் அங்கு இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாதுகாப்பு செயலகம் ஒருமித்த நிலையில் அதற்கு ஒப்புதல் வழங்கியது. அதனையடுத்து வியாழனன்று



காயமடைந்த பாலஸ்தீனர் அப்புறப்படுத்தப்படுகிறார்

பிரதமர் ஆரியல் சரோன் இப்பகுதியின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கப்படுவதற்கான திட்டங்கள் பற்றி அறிவித்தார். இதன்பின்னரேயே இப்படை நடவடிக்கை ஆரம்பமாகி உள்ளதென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேலிய இராணுவம் உடனடியாக வட காசாவில் இருந்து வெளியேற வேண்டும் என பாலஸ்தீன அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் சர்வதேச சமூகம் இஸ்ரேலின் இந்நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது. பாலஸ்தீன அதிகாரசபையின் அதிபர் ஜாசீர் அரபாத்தின் ஆலோசகரான நபில் அபு ரூதேனியா இவ்விவகாரத்தில் ஐநாவின் பாதுகாப்புச் சபை உடனடியாகக் கூடி ஒரு அழுத்தத்தை இஸ்ரேலுக்கு எதிராகப் பிரயோகிக்க வேண்டும் என்றும் ஐக்கிய அமெரிக்கா காசாவில் இஸ்ரேலியப் படைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகளைத் தடுத்துநிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.




Experienced Tamil Jeweller in London

வெஸ்டன் ஜுவல்லர்ஸ்

western Jewellers

230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445

Opening hours, Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்



# நாட்டிற்கு வெளியே பதில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ரஷ்யா தயார்!

ரஷ்யாவின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக தீவிரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனை அந் நாட்டின் படைகள் முடிந்தளவிற்கு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளபோதிலும் செச்சினிய தீவிர வாதிகளின் நடவடிக்கைகள் எங்கோ ஒரு பகுதியில் அடிக்கடி இடம் பெறுவது தவிர்க்கமுடியாததாகியுள்ளது. இந்நிலையில் அதிகரித்து வரும் பொதுமக்களின் அழுத்தங்களுக்கு பதில் சொல்லவேண்டிய நிலையில் ரஷ்ய அதிபர்- விளாடிமீர்புடீன் நாட்டிற்கு வெளியே அதாவது ரஷ்யக் கூட்டமைப்பின் வெளியே அமைந்துள்ள நாடுகளில் அமைந்திருக்கக்கூடிய தீவிரவாத முகாம்கள்மீது தாக்குதல்களை நடாத்த ரஷ்யா தயாராக உள்ளது எனக் கூறியுள்ளார். கடந்தவாரம் இவரது அறிவித்தல் வெளியாகிய தன்பின் அவரது பாதுகாப்பு ஆலோசகர்கள் உடனடியாக ஜோர்ஜியா மீது தாக்குதல்களை ரஷ்யா நடாத்த வேண்டுமென கூறியுள்ளனர். தென்பகுதி ரஷ்யாவில் செச்சினியாவின் 75 கிலோமீற்றர் எல்லையைக் கொண்டு அமைந்துள்ள ஜோர்ஜியாவில் செச்சினியத் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் மிக அதிகமாக உள்ளதாகக் கூறும் பாதுகாப்பு ஆலோசகர்கள் உடனடியாக அப்படியானதோர் பகுதியின் மீதே தாக்குதல்கள் நடத்தப்படவேண்டும் எனக் கூறியுள்ளனர்.



ரஷ்ய அதிபர் புட்டீன்

ஐக்கியஅமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள ஜோர்ஜியா மீது உடனடியாகத் தாக்குதல்கள் நடாத்தப்படுவதால் ஏதாவது பின்விளைவுகள் ஏற்படலாம் என சில தரப்பினர் கேள்விகளை எழுப்பியுள்ளபோதிலும் பண்கிசி பகுதியின் மேலே தாக்குதல்கள் நடாத்தப்படும்போது இராஜதந்திர ரீதியான சில கேள்விகள் எழுப்பப்படலாம். இறைமையுள்ள ஒரு நாட்டின்மீது தாக்குதல்கள் நடாத்தப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்ற வாதம் முன்வைக்கப்படலாம். ஆனாலும், அமெரிக்காவின் எதிர்ப்புக்கள் எதுவும் கிளம்பாது எனத் தாம் நம்புவதாய் பாதுகாப்பு அதிகாரி மேலும் கூறினார். மக்களது யூகத்தின்படி தாக்குதல்கள் வெகுவிரைவில் ஆரம்பமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மன்மோகன் சிங்கிற்கு முஷாரப் வழங்கிய பிறந்தநாள் பரிசு !

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தொடரில் பங்குபற்றிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் பாகிஸ்தானிய அதிபர் பர்வேஷ் முஷராவ்வும் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். இதே வேளை, இச்சந்திப்பின்போது பாகிஸ்தானிய அதிபர் இந்தியப் பிரதமரின் பிறந்தநாள் பரிசாக தான் பாகிஸ்தானில் இருந்து கொண்டுவந்த பெறுமதிமிக்க பரிசொன்றை வழங்கியிருந்தார்.



இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே நாடாக இருந்தபோது காக் என்ற கிராமத்தில் மன்மோகன்சிங் பிறந்தார். இந்த கிராமம் தற்போது பாகிஸ்தானில் உள்ளது. முஷாரப் டெல்லியில் பிறந்தவர். சந்திப்பின்போது மன்மோகன்சிங்கின் சிறுவயது நண்பர்களின் நிழற்படங்களை முஷாரப் அவரிடம் வழங்கி அவரை ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். மன்மோகன் சிங்கின் சிறு வயது நண்பர்கள் காக் கிராமத்தில் இருக்கிறார்கள். சிறுவயதில் அவர்கள் எடுத்துக் கொண்ட நிழற்படங்கள் மன்மோகன் சிங் படித்த ஆரம்ப பாடசாலையில் அவர் தேர்ச்சி பெற்றது பற்றிய தேர்வு முடிவு பட்டியல், 2 ஓவியங்கள் ஆகியவற்றை அவரிடம் முஷாரப் வழங்கினார். அதில் ஒன்று அவரது கிராமத்தை சித்தரிக்கும் ஓவியம் ஆகும். இளமைக்கால நினைவுகளில் மூழ்கியபடி அவற்றை பெற்றுக் கொண்ட மன்மோகன்சிங் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். "நீங்கள் அளித்த இந்த பரிசுகள் என்னை பொறுத்தவரை அரிய பொக்கிஷங்கள் ஆகும். எங்கள் இதயங்களை நீங்கள் வென்று விட்டீர்கள்" என்று கூறி முஷாரப்புக்கு நன்றி தெரிவித்தார்.

# தமிழ் மொழியை பாதுகாக்க தொடர் போராட்டம் !

### சினிமாக்களில் தமிழ் சீரழிவை கண்டித்து நடிகர் சங்கம் முன்பு ஆர்ப்பாட்டம்

### - டாக்டர் ராமதாஸ் அறிவிப்பு

சின்னத்திரை மற்றும் வண்ணத் திரைகளில் தமிழ் சீரழிவை கண்டித்து டிசெம்பர் 20ம் திகதி தென்னிந்திய நடிகர் சங்கம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

டாக்டர் ராமதாஸ் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறியதாவது, தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தமிழ்மொழி செம்மொழி ஆக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபடுவோம்.

தமிழ் சினிமாவை மக்கள் அடியோடு ஒதுக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. சினிமா என்பது மக்களை எளிதாக சென்றடையும் ஒரு அறிய சாதனம். அதில் பண்பாட்டு சீரழிவுகளை அதிகமாக சொல்கிறார்கள் என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு. மக்களுக்கு நல்ல படங்களை கொடுங்கள். இப்போது தமிழ் படங்களுக்கு ஆங்கில பெயர் வைக்க மாட்டோம் என்று அறிவித்திருப்பதை வரவேற்கிறோம். தமிழ் சினிமாவில் ஆபாச வார்த்தைகள் கொண்ட பாடல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் சினிமாவில் உள்ள பண்பாட்டு சீர்குலைவுகளை கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து போராட வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து நாங்கள் போராடி கொண்டிருப்பதால் முழுக்க முழுக்க சினிமாவை நாங்கள் எடுத்துக் கொள்ள முடியாது.

தமிழ் மொழியை பாதுகாக்க தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தொடர் போராட்டங்களை நடத்த உள்ளோம். சென்னை நகரில் உள்ள கடைகளில் தமிழ் மொழியில் பெயர் பலகை வைக்ககோரி போராட்டம் நடத்தப்படும். தமிழ்மொழியில் பெயர் பலகை வைக்க அக்டோபர் 23ம் திகதி இறுதி எச்சரிக்கை விடப்படும். நவம்பர் மாதம் 2ம் திகதி சென்னை நகரில் உள்ள கடைகளுக்கு நேரில் சென்று துண்டு பிரசுரம் மற்றும் தமிழில் பெயர் பலகை வைக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் போடப்பட்ட அரசு ஆணை நகல் ஆகியவை கொடுக்கப்படும். பிறகு அவர்களுக்கு ஒரு மாத காலம் அவகாசம் அளிக்கப்படும். அதற்கு பிறகும் மாற்றவில்லை என்றால் ஒன்றிரண்டு கடைகளில் உள்ள ஆங்கில பெயர் பலகைகளை தார்பூசி அழிக்கும் அடையாள போராட்டம் நடத்தப்படும்.

கோவில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை செய்யகோரி பக்தர்கள், பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் ஏதாவது ஒரு கோவில் முன்பு நவம்பர் மாதம் 8ம் திகதி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அடுத்து திருமணங்களை தமிழ்முறைப்படி நடத்தக்கோரி ஏதாவது ஒரு திருமண மண்டபத்தின் முன்பு கோரிக்கை அட்டைகளை மட்டும் பிடித்துக் கொண்டு எந்த சத்தமும் போடாமல் அமைதியான முறையில் எதிர்ப்பை தெரிவிக்கும் போராட்டம் நவம்பர் 15ம் திகதி நடத்தப்படும். இந்த போராட்டத்திற்கு முன்பு திருமண வீட்டாரிடமும் தகவல் தெரிவித்து விட்டுதான் நடத்துவோம்.



நீதிமன்றங்களில் தமிழ் மொழியை பயன்படுத்த வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்றம் முன்பு நவம்பர் 29ம் திகதியும், தமிழை ஆட்சி மொழியாக ஆக்ககோரி சென்னை கோட்டை முன்பு டிசெம்பர் மாதம் 7ம் திகதியும் ஆர்ப்பாட்டம் நடைபெறும். வானொலி - தொலைக் காட்சிகளில் தமிழ் உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி டிசெம்பர் மாதம் 13ம் திகதி சென்னை தூர்தர்ஷன் அலுவலகம் முன்பு சின்னத்திரை மற்றும் வண்ணத்திரைகளில் தமிழ் சீரழிவை கண்டித்து டிசெம்பர் 20ம் திகதி தென்னிந்திய நடிகர் சங்கம் முன்பும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். தமிழை சரியாக உச்சரிக்காமல் சீரழிக்கும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு கடிதம் எழுதப்படும்.

சினிமாவில் உள்ள பண்பாட்டு சீரழிவை தடுக்க கோரி டிசெம்பர் 27ம் திகதி தணிக்கை குழு அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடத்தப்படும். இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார்.


IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 ஈரோ |

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports Tel: 0049 -24625557

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

# RHYTHM

விசேட விலைக் கழிவு !

விசேட விலைக் கழிவு !

விசேட விலைக் கழிவு !




- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette
- Telephone Cards
- Video Filming
- Photography
- Party Shop

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail : info@rhythmentertainments.com

Website :rhythmentertainment.com

கடல் உணவு வகைகளின் சுரங்கம்

# ஆராழி

## ARALI

உங்களுக்குத் தேவையான அனைத்து கடல் உணவு வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

தாயகக் கடலின் சுவையுணவு சுமந்து புலம் பெயர்ந்து வந்ததோ இந்த ஆராழி!

D.K.S.R. Asian Suppermarkt
Lostex Plad 8E
Svendborg
5700 Denmark
004562216773

Tiefkuhl Feinkost
Kanal Str 27
67655 Kaisers lautern
Germany
00496313609655
00491776035859
00491797157501

Norwood Mini Market
31.Station Road
South Norwood
London
SE.25.5AH
Tel. 00442087718585
Mobil 00447958529816 - 00447795386837



Asia Trade Center-Gmbh
Sumpf Str 24
6300 2UG (CH)
0041417404830
0041764183553 Aschok

தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமாய்...

# பூபாளம் பொத்தகசாலை

தாயக வெளியீடுகள், அரசியல், கவிதை, அறிவியல், சார்ந்த நூல்கள், தமிழக, கொழும்பு சஞ்சிகைகள், பத்திரிகைகள்........




## விற்பனையில்...

01) நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் (சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)
02) தமிழ்ப்பெயர்க் கையேடு (மக்கட்பெயர் - 46, 000)

இவற்றுடன் மலிவு விலையில் பல சஞ்சிகைகள் (1.00, 0.50)

22, Rue Perdonnet,
75010 Paris,
France.
Tél: 01 40 05 95 15



# சிறீலங்காவின் இன்றைய அவலம்!

- பு.சத்தியமூர்த்தி

சிறீலங்கா உண்மையிலேயே பரிதாபத்துக்குரிய நாடுதான். எவ்வாறெனில் அதன் மக்கள் மட்டுமன்றி, ஆட்சியாளர்களும் தம் முன்வினைப் பயனில் செம்மையாகச் சிக்கிக் கொண்டு தவிக்கும் போது, மீளும் வகையறியாது அவலப்படும் போது, வேறு எவ்வாறு தான் அதனை உருவகிக்க முடியும்.



சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக மக்களின் நிலை. ஆனால் மறுவளமாக மக்களை அடுப்புக்குள் தள்ளி விட்ட ஆட்சியாளர்களோ முஞ்சூறு விழுங்கிய சாரையாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் பொருண்மியமும், சமூக வாழ்வும் சீரழிந்து பாதாளத்துக்குப் பயணிக்கின்றன. 70 வருடங்களாகத் தொடரும் இனப்பிரச்சனைக்கான சமாதானப் பேச்சுக்களோ, சமாதான நடவடிக்கைகள் எனில் 'இழுத்தடிப்பும் நயவஞ்சகமும்' என்பது தான் அர்த்தம் என்பதாக விளங்கிக் கொண்டுவிடக்கூடிய திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் சிறீலங்காவினைப் பரிதாபத்துக்குரிய நாடு உவமிப்பதில் நிச்சயமாக தவறிருக்க முடியாது.

ஸ்திரமற்ற அரசியல் சூழல், பொருத்தமற்ற பொருண்மிய நடைமுறை, அதன் விளைவாக நாளும் பொழுதும் அதிகரித்துச் செல்லும் விலைவாசி, அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத மக்கள்... இதுவே இன்றைய சிறீலங்கா. ஆனால் இதற்கு மாறானதொரு சித்திரத்தை வலிந்து தீட்டமுனைகின்றனர் ஆட்சியாளர்கள். அவர்களது அறிக்கைகளையும், உளறல்களையும் தூக்கிப் பிடித்துப் பிரசுரித்தும் அதற்கு வியாக்கியானம் வழங்கியும் செயற்படும் அரச ஊடகங்களின் நிலையோ சொல்லுந்தரமன்று. "இரண்டும் மூன்றும் நான்கு தான்" என்று சாதிக்கின்றன அவை.

ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் விலைவாசி மிகவும் உயர்ந்துவிட்டது என்று வானத்துக்கும் பூமிக்குமாக குதித்து தொண்டை கிழியக் கத்திய இன்றைய ஆட்சியாளரின் காலத்தில் என்ன நிகழ்ந்திருக்கிறது என்று மக்கள் மனதில் கேள்விகள் எழ ஆரம்பித்துவிட்டன. மக்கள் நலனையே முன்னிறுத்துகின்றோம் என்று பீற்றிக் கொள்ளும் ஜே.வி.பி.னருக்கு மக்கள் முன் தலைகாட்ட முடியாது. துன்பம், வெட்கம் பரிசாகக் கிடைத்திருக்கிறது.

ஏனெனில் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து நான்கு மாதங்களுக்குள்ளாக அரிசியின் விலை 47 ரூபாவாக ஏறியிருக்கிறது. சீனி, பால்மா என்பவற்றின் விலைகள் 10 ரூபாவால் உயர்ந்திருக்கின்றன. எரிபொருட்களின் விலைகளும் ஏறக்குறைய அவ்வாறு தான். சமையல் எரிவாயுவின் விலை நூறு ரூபாவால் உயர்ந்திருக்கிறது. போக்குவரத்துக் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் சகலதுமே அதிகரிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் வாழும் வகையறியாது மக்கள் தவிக்கின்றனர். வாழ்க்கைச் செலவு பாறாங்கல்லாக அழுத்திக் கொண்டிருக்க விழிகள் பிதுங்கி ஆர்ப்பாட்டம் செய்யக் கூட தெம்பில்லாமல் கிடக்கிறார் சிறீமான் சிறீலங்காப் பொதுசனம். இவருக்கு ஏபரல் 2ம் திகதி வாக்களிக்கும் போது இருந்த மிடுக்கென்ன! இன்றோ தான் எடுத்த தீர்மானத்தின் பயனை நொந்தவாறே தவிக்கிறார் பொதுசனம் அவர்கள்! ஆனால் இதற்கு நேர் எதிராக ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார் சந்திரிகாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய அமைச்சரான மங்கள சமரவீர..! தனது அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளில் 70 வீதத்தை நிறைவேற்றி விட்டதாக அவர் முழங்கியிருக்கிறார். என்ன, தலை சுழல்கிறதா?

சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு மங்கள சமரவீரவின் கூற்றை தொடர்ந்தும் அனுபவியுங்கள்... உரத்துக்கான விலையைக் குறைத்திருக்கிறோம். நெல்லுக்கான உயர்ந்த விலையை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறோம். இது மங்களவின் பிரகடனம்.

இந்தப் பிரகடனத்தின் உண்மைத்தன்மை என்ன? உரத்தினதும் நெல்லினதும் விலை என்பதே விவசாயிகள் மத்தியில் ஐ.ம.சு முன்னணியின் பிரசாரமாக இருந்தது. அதிலுங் குறிப்பாக ஜே.வி.பி யின் பிரசார மூலமாக இருந்தது இதுவே. எனவே தான் ஆட்சிக்கு வந்தவுடனேயே உரத்தின், யூரியாவின் விலையை சந்திரிகாவின் அரசாங்கம் குறைத்திருந்தது. அதாவது உர உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கியது. ஆனால் இந்த மானியம் எவ்வளவு நாளைக்கு நீடிக்கப் போகிறது என்பது கேள்விக்குறியே. ஏனெனில் நிதியமைச்சர் சரத் அமுனுகம இதற்க ஏற்கனவே சிவப்புக்கொடி காட்டிவிட்டார். மானியங்கள் வழங்கும் நிலையில் திறைசேரி இல்லை என்பதை அவர் வெளிவெளியாப் போட்டு உடைத்து விட்டார். இவ்வாறு மானியங்களை வழங்கும் 5 பிரதான நிறுவனங்களைப் 'பஞ்ச பூதங்கள்' என வர்ணித்து அவை பொருண்மியத்தினை உறிஞ்சிக் குடிக்கின்றன எனவும் பிரகடனப்படுத்தி விட்டார். இதன் சாரம்சம் என்னவெனில் உரத்திற்கு அவசர அவசரமாக வழங்கப்பட்ட மானியங்கள் மீளப்பெறப்படுவது விரைவிலேயே நடைபெறத்தான் போகின்றது என்பதுவும், அதன் பின்னர் உரத்தின் விலை ஏப்ரல் 2ம் திகதிக்கு முன்னர் இருந்ததை விடவும் உயரத்தான் போகின்றது என்பதேயாகும்.

கிளிநொச்சி நெல்லின் விலைக்கு வருவோம். விவசாயிகளின் முகங்களில் இப்போது கவலை ரேகைகள் மறைந்து சற்றே மகிழ்ச்சி ததும்புகிறது. ஏனெனில் ஒலு கிலோ நெல்லுக்கு 18 ரூபாவுக்கும் மேலான விலை கிடைக்கிறது. நெல்லை விற்க முடிகிறது. இதனால் இலாபம் கிடைக்கிறது. ஆகவே விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

ஆனால் இதன் உடனடி விளைவு எப்படி இருக்கிறது? ஒரு கிலோ அரிசி 47 ரூபாவாக பொலநறுவையில் விற்பனை ஆகின்றது! இங்கே வர்ணிக்கப்பட வேண்டியது என்னவெனில் பொலநறுவை மாவட்ட மகாவலித் திட்டத்தின் கீழ் இலங்கையிலேயே அதிகம் நெல் விளையும் இடமாகும். அங்கே 47 ரூபாவுக்கு அரிசி விற்றால், சாதாரண மக்களின் நிலை என்னவாகும்.

ஐ.ம.சு.முன்னணி அரசின் நெல்லுக்கான உயர்ந்த விலையினை விவசாயிகளுக்கு வழங்கியதே தவிர, அதன் பின்விளைவிளை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அதனாலேயே இப்போது 25 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியினை இறக்குமதி செய்யும் நிர்ப்பந்தத்தில் இருக்கிறது. பொருளாதாரத் திட்டமிடல் என்பது அரசியல் மேடைகளில் பேசும் ஆவேசமான பேச்சுக்கள் அல்லவென்பது ஜே.வி.பிக்கு இப்போது புரியத் தொடங்கியிருக்கக்கூடும்.

மங்கள சமரவீர குறிப்பிட்ட பட்டதாரிகளுக்கான நியமன விடயத்தில் என்ன நடக்கிறது? விண்ணப்பித்த 56 ஆயிரம் பட்டதாரிகளில், ஏற்கனவே ஏதாவது வேலைவாய்ப்பு பெற்றிருப்பதை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டிருந்தவர்கள் (பட்டதாரிகளுக்குரிய வேலைகளாக அவை இல்லாதிருந்த போதும் புறமொதுக்கப்பட்டதன் பின்னர் 41 ஆயிரம் பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களில் முதற்தொகுதியினரான 17 ஆயிரம் பேருக்கு 3 மாதப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 6 ஆயரம் ரூபா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது இன்னமும் செலுத்தப்படவில்லை.

இந்தப் பயிற்சித்திட்டம் எவ்வாறுள்ளது? அவசர அவசரமாகத் திட்டமிடப்பட்டு, சரியான முற்தயாரிப்பு இன்றி அரைவேக்காட்டுத் தனமாக நடைபெறுகிறது அது. ஒரு சிறிய உதாரணம். பயிலுனர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்கவென மட்டக்களப்பிலும் பொலுநறுவையிலும் சில பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பயிலுனர்களுக்கும் அவர்களுக்குரிய நிலையங்கள் அறிவிக்கப்பட்டன. அங்கு சென்ற பயிலுனர்கள் உள்ளே அனுமதிக்கப்படாமல் திரும்பிச் சென்ற அவலம் முறையிடப்பட்டுள்ளது. காரணம் என்னவெனில் பாடசாலை அதிபர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்படவில்லை என்பதாகும்.

> ஸ்திரமற்ற அரசியல் சூழல், பொருத்தமற்ற பொருண்மிய நடைமுறை, அதன் விளைவாக நாளும் பொழுதும் அதிகரித்துச் செல்லும் விலைவாசி, அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத மக்கள்... இதுவே இன்றைய சிறீலங்கா.

இதை விட இன்றும் சில பட்டதாரிகள் இப்பயிற்சித் திட்டத்தினைப் பின்பற்றாது புறமொதுக்கி விட்டு தாம் ஏற்?கனவே செய்யும் தொழில்களைப் பற்றி படித்துக் கொண்டு இருக்கின்றனர். ஏனெனில் இப்பயிற்சி திட்டத்தை நம்பி ஏற்கனவே உள்ள தொழிலைக் கைவிட்டு விட்டால் 'அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட' அவலம் தமக்கு நேரக் கூடுமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர். அந்தளவுக்குத்தான் அரசின் மீதான பட்டதாரிகளின் நம்பிக்கை இருக்கிறது.

ஆக மக்கள் அவலத்தின் பிடியுட் சிக்கி அணியத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்க, ஆட்சியாளரோ அறிக்கை, அரசியல் நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இதைத்தான் சிங்களத்தில் 'தவ கிளினுத் பான்ட் ஏன்' என்பார்கள். மூழ்கின்ற கப்பலுள் பான்ட் வாத்தியம் வாசித்து மகிழ்கிறார்கள் ஆட்சியாளர்கள். ஆனால் மக்களோ தமது முன்வினைப் பயனை நொந்து கொண்டே தவிக்கிறார்கள். ஆக பரிதாபத்துக்குரிய நாடு என சிறீலங்காவை உருவகிப்பதில் தவறில்லைத்தானே.

# இந்திய மீனவர்களின் வருகையும் மன்னார் மீனவர்களின் பிரச்சனையும்

மன்னார் தமிழக (இலங்கை - இந்தியா) பிரதேசங்களுக்கு இடைப்பட்ட கடற்பகுதியில் இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில் இந்தியா மீனவர்கள் எல்லை தாண்டி மீறி மீன் பிடிப்பது வடமேற்கு இலங்கைத்தமிழ் மீனவர்களின் தொழிலைப் பாதிக்கின்றது.

மன்னார் மாவட்ட மக்களின் பிரதான தொழில் மீன்பிடித் தொழில் அதுவும் அன்றாட ஜீவனோபாய வாழ்க்கைக்கு தினம் தினம் கடலுக்குச் சென்று உழைத்து வாழும் கரையோர மீன்பிடித் தொழிலாளர்கள் சுகந்திரமாகத் தொழில் செய்வதில் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

சிங்கள கடற்படையின் கட்டுப்பாடுகள் அடக்குமுறைகள் தடைகள் ஒருபுறமும் இந்திய தமிழ் நாட்டு மீனவர்களின் அத்துமீறிய வருகை மறுபுறமும் காணப்படுகின்றது.

மன்னார் மீனவரின் மீன்பிடிப் பிரச்சனை இருவேறு தேசங்களின் அரசியல் காய் நகர்த்தலுக்குள் சிக்கித் தவிக்கின்றது. வயிற்றுப் பிழைப்புக்காக அன்றாடம் உழைக்கும் ஊழைத் தொழிலாளிகளின் வாழ்வில் இந்திய அரசியல்வாதிகளும் அரசியல் நடத்துகின்றனர்.

மன்னார் கடற்பிராந்தியத்தில் சிறிலங்கா-இந்திய அரசியல்வாதிகள் அரசியல் லாபம் தேட முற்படுகின்றார்கள். அதற்காக இரு தேசத்தவரும் ஈழத்தமிழ் மீனவரை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றனர்.

அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் மன்னார் மீனவரின் வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டுவதுடன் இப்பிரச்சனையில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சம்மந்தப்படுத்துவதாக உள்ளது.

தமிழக மீனவரின் வருகையினால் மன்னார் மீனவரின் தொழில் பாதிப்படைகின்றது. வள சுரண்டல், தொழில் வருவாய் இழப்பு, சொத்தழிவு, சொத்திழப்பு, இது தவிர இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலான மோதல்கள் என பல்வேறு பிரச்சனைகள் உருவாகின்றன.

இலங்கையின் வடகடல் வளத்தை தமிழக மீனவர்கள் சூறையாடுவது மட்டுமல்ல, தொழில் முறை காரணமாக ஈழத்து மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்படுகின்றது. குறிப்பாக வலைகள் சேதமாக்கப்படுகின்றது.

மன்னார் மக்களின் மீன்பிடி முறைக்கும், தமிழக மக்களின் மீன்பிடி முறைக்குமிடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு.

தமிழக மீனவர்கள் இழுவைப்படகு முறையினையும், மன்னார் மீனவர்கள் படுப்புவலை, வலிச்சல் முறையிலான தொழில் முறையினையும் கையாள்கின்றனர். இவ்விரு தொழில் முறைகளும் ஒரே கடற் பகுதியில் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியாது.

இரு தொழில் முறையும் வெவ்வேறு நேரத்தில் செய்ய வேண்டும். அல்லது ஒரே நேரத்திலாயின் வெவ்வேறு கடற்பகுதியில் தொழில்செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் மன்னார் மீனவர்களும் தமிழக மீனவர்களும் தொழில் செய்வதில்லை.

மாறாக ஒரே கடற்பகுதியில் ஒரே நேரத்தில் இரு தொழில் முறையும் மேற்கொள்ளப்படுமாயின் படுப்புவலை, வலிச்சல்வலை முறை பெரும் சேதங்களையும் அழிவுகளையும் சந்திக்க வேண்டி ஏற்படும்.

தமிழக மீனவர்களின் இலுவைப் படகு முறை பாரிய இயந்திர தொழில் முறையாகும். ஈழத்து மீனவர்களின் முறை சிறுகைத்தொழில் முறையாகும். அதனால் ஈழத்து மீனவர்களின் தொழில் முறை பாதிப்படைவதுடன் வலைகள் அழிக்கப்படுகின்றன. துண்டாடப்படுகின்றன. இதனால் இரு நாட்டு மீனவர்களுக்கும் மோதல்கள் ஏற்படுகின்றன. இது பலருக்குப் பசி தீர்க்கும் படலமாகவும் மாறுகின்றது.

இலங்கை வடபகுதிக் கடலில் தமிழக மீனவர்கள் காலம் காலமாக ஆக்கிரமிப்பு செய்து ஈழத் தமிழர்களின் மீன் வளத்தை சுரண்டுகின்றார்கள்.தற்போது நாளாந்தம் 300 தொடக்கம் 500 வரையிலான தமிழக இழுவைப் படகுகள் வட இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி தொழில் செய்வதாக மன்னர் மீன்பிடி தொழிலாளர் சங்கம் கூறுகின்றது.

வட இலங்கை கடல்வளத்தை குறையாமல் பாதுகாக்க சிறிய கண் வலைகள் மன்னாரில் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்திய இழுவைப் படகுகளின் மடி வலை சிறிய கண்களாக இருப்பதினால் சிறிய மீன் குஞ்சுகளும் பிடிக்கப்படுகின்றது. இது குறுகிய காலத்தில் கடல் வளம் அருகிப் போக வழிவகுக்கும்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களையும், வள சுரண்டல்களையும் எதிர்த்து இலங்கை வடபகுதி மீனவர்கள் கண்டன ஊர்வலங்களையும் பேரணிகளையும் நடாத்தினார்கள். இலங்கை அரசிற்கும் இந்திய அரசிற்கும் தமிழக அரசிற்கும் பல தடவைகள் பல முறைப்பாடுகளைச் செய்தார்கள். ஆனால் அவற்றால் எதுவிதபயனும் கிடைக்கவில்லை.

மாறாக சர்வதேச கடல் சட்ட விதிகளுக்கு முரணாக செயற்படும் தமிழக மீனவர்களுக்கு ஆதரவாக சிறிலங்கா அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள்.இது தமிழ் மக்களின் வாழ்வில் பேரிடியாக அமைந்திருக்கின்றது.சட்ட விரோதமாக அத்துமீறும் தமிழக மீனவர்களை இலங்கை அரசும் கண்டும், காணாமல் இருப்பதற்கும் காரணம் உண்டு.

பாதிக்கப்படுவது சிங்கள மீனவர் அல்ல. தமிழ் மீனவர்கள் தான். வடக்குக் கிழக்கில் தமிழரின் பொருளாதார வளத்தை சிதைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் வளத்தினையும் வலுவையும் குறைக்க முடியும் என்பதாகும். தமிழக மக்களையும் ஈழத் தமிழ் மக்களையும் மோதவிட்டு முரண்பாட்டை வளர்ப்பதினால் தமிழரின் உரிமைப் ரோராட்டத்திற்கு இந்திய தமிழக ஆதரவாளர்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்தலாம் என்பதே இலங்கை அரசின் திட்டமாகும்.

இதனாலேயே தமிழக மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த இலங்கை கடற்படை இதுவரை முழு நடவடிக்கை எதனையும் எடுக்கவிரும்பவில்லை. சட்ட நடவடிக்கை எடுப்பதும் தமிழக மீனவர்களின் வருகையினைக் கட்டுப்படுத்துவதும் இலங்கை கடற்படைக்குமுடியாத விடயம் அல்ல.

ஏனெனில் பாக்கு நீரிணையிலும் மன்னார் கடற்பிராந்தியத்திலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக அதிக எண்ணிக்கையிலானதும் வலுக் கூடியதுமான கடற்படைக் கலங்களும் ரோந்துக் கப்பல்களும், படகுகளும் பல்லாயிரக்கணக்கான கடற்படை வீரர்களும் கடற்படையிடம் உண்டு.

தமிழக மீனவர்களின் வருகையினை கட்டுப்படுத்தக் கூடிய வசதியும், வளமும் இலங்கைக் கடற்படையிடம் இருந்தும் இலங்கைத்தமிழ் மீனவர்களையும், தமிழக மீனவர்களையும் மோத வைத்து பகைமையுணர்வை வளர்த்து விடுவதே இலங்கை அரசின் திட்டமாகும். தமிழகத்தை ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக திசை திருப்பி விடுவதே இதன் பிரதான உள் நோக்கம் ஆகும்.

இலங்கை - இந்திய அரசுகள் நட்புறவை வளர்க்க ஈழத்தமிழ் மீனவர்களை தமக்குச் சாதகமாகவும் துரும்புச் சீட்டாகவும் பயன்படுத்துகின்றனர்.

ஈழத்தமிழருடன் தமிழகத் தமிழரை மோத வைக்கும் முயற்சியில் ஜெயலலிதாவும் கரிசணை காட்டி வருகின்றார். தமிழக மீனவர்களின் தொழிலுக்கு தடையாக இருப்பது விடுதலைப் புலிகள் தான் என்ற கருத்துருவாக்கத்தையும் பரப்பி தனது புலி எதிர்ப்புக் கொள்கைக்கு ஆதரவு தேட முனைகின்றார்.

மன்னார் மீனவர்கள் பல தமிழக மீனவர்களை கைது செய்து புலிகளிடம் ஒப்படைத்த போதும் இந்தியாவைப் பகைத்துக் கொள்ள விரும்பாததினால் மீனவரை விடுதலை செய்து விடுகின்றனர்.புலிகளின் நல்லெண்ணத்தினாலும் இந்தியா - தமிழக நட்புணர்வு தூர நோக்குச் சிந்தனையாலும், பாதிப்படைவது மீனவர்களே!

இவ்விடயம் புலிகளுக்கும் சங்கடமான விடயமாக மாறியிருக்கின்றது.

முரண்நிலையும் பிரச்சனையும் தொடருமானால் எதிர்காலத்தில் பல உயிர்கள் காவு கொள்ளப்படும். எனவே இந்தியா தமது மீனவரைக் கட்டுப்படுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம், ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தம் என எத்தனையோ ஒப்பந்தங்கள் நடக்கின்றது. இதற்கும் ஒரு ஒப்பந்தம் இடம் பெறுமா?.



**திரு.சோமசுந்தரம் வசீகரன் (வசந்தன்)**

திதி - 10.10.2004

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| காரைநகர்-தமிழீழம் | Meerbusch-Germany |
| 09.08.1977 | 22.09.2003 |

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

எம் வாழ்வில் வசந்தமென வந்துதித்த
அன்பு மகனே வசந்தா!
ஓராண்டு கடந்தும் உன் வதனமும்
எம்மனதை விட்டகலவில்லை
எம் அன்புத்தம்பி ஆசைத்தம்பியென
அன்பைப் பொழிந்த உன் அக்காவும் அண்ணாவும் கலங்காத
நாளில்லை
உன் மீது பாசம் கொண்ட அத்தானும் அண்ணியும்
உன் பிரிவால் துயருறா நாளில்லை
ஆசைமாமா அன்புச்சித்தப்பா என ஆசையுடன் அழைத்த உன்
அன்பு மருமகனும் ஆசைப்பெறாமகளும்
உன்னைத் தேடாத நாளில்லை
தமிழீழத்தில் வாழும் எம் உறவினர்கள் எல்லோரும் உன்னைப்
பிரிந்த துயரை எம்மோடு
பகிரிந்து கொள்ளாத நாளில்லை
உன் வசீகரச் சிரிப்பால் ஊராரைக் கவர்ந்திட்ட வசீகரா!
வருகின்றேன் என்று சொல்லிச்
சுற்றுலாச் சென்ற உன்னைக்
காலன் அழைத்ததை நீ சொல்லாமல் விட்டதேனோ!

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
வேண்டும்,

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா குடும்பத்தினர்

# அரியகுட்டியர் கார் பழகப்போகிறார்

பேய்க்குட்டி சொன்ன பதிலைக்கேட்டு திடுக்குற்றார் அரியகுட்டியர். வாடகை, மின்சார தொலைபேசி ஆகிய மூவகைக் கட்டணத் துண்டுகளுடன் வங்கி மேலதிகப் பற்றுக்கான கடிதமும் வந்து இடியைப் போட்டதுபோல் இருந்தது.

எவ்வளவு காலம்.... எத்தனை வருடம் நான் இந்த ஆசையைக் கொண்டிருந்தேன். அதைக்கூட எவ்வளவு தூரம் பொத்திப் பொத்தி வைச்சு இவனிடம் வெளியிட்டேன். பள்ளிக்கூடக் காலத்தில் பவளமணிமீது கொண்டிருந்த காதலைச் சொல்வதற்குக்கூட நான் இவ்வளவு தயங்கியவனில்லையே. என் ஆசை என்ன ஜோர்ஜ் புஷ்சின் ஆசைபோன்றதா? இல்லை ஹெலவுறுமயவின் ஆசை போன்றதா? அதுவுமில்லையே. பிறகேன் என்னை கோர்ட், கச்சேரி என்றெல்லாம் படியேறச் சொல்கிறாயே பாவி பேய்க்குட்டி. இது உனக்கே அடுக்குமா?

ஆனையிறவுத் தளத் தாக்குதலின்போது இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் பட்ட பாட்டைப்போல பரிதவித்தது அரிய குட்டியர் மனம்.

எதற்காக இந்தப் பரிதவிப்பு அவருக்கு, அப்படி அவர் வெளியிட்ட ஆசைதான் என்ன?

அஃது ஒன்றும் பேராசை அல்ல. வயது கொஞ்சம் இடித்தாலும் ஐம்பதிலும் வரக்கூடிய ஞாயமான ஆசைதான். பின்னே இருக்காதா? என்ன. அவருக்குத்தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் எல்லாம் பி.எம்.டபிள்யூ, போர்ட், ஒப்பல், ரெனோ என கடுகதியாகக் காரில் செல்லும்போது அரியகுட்டியர் மட்டும் கார் பழக ஆசைப்படக்கூடாது என்ற சட்டம் இருக்கிறதா என்ன? அவருக்கு ஒன்றும் சும்மா இந்த ஆசை வரவில்லை. அதற்குள்ளும் பல காரணங்கள் இருக்கின்றன. அதில் தன்மானம், பட்ட அவமானம், காலின் தேய்மானம், செரிமானம், பெறுமானம் போன்ற பல மானங்கள் வகை வகையாக அடங்கியிருக்கின்றன.

ஆகவே இவற்றையெல்லாம் நிவர்த்திக்கும் முகமாகத்தான் கார் ஓடிப்பழகும் தன் ஆசையை பேய்க்குட்டியிடம் வெளியிட்டார். ஆனால் அதற்கு பேய்க்குட்டி தந்த பதில்தான் நிலை குலைய வைத்தது.

`கார் பழக வேண்டுமெண்டால் முதலில கோர்ட்டுக்குப் போக வேண்டுமாம். பேய்க் குட்டி பேய்க்கதை கதைக்கிறான். குற்றம் செய்தால் தானே கோர்ட்டுப்படி ஏறவேணும். இதற்கேன் போக வேணும் கோர்ட்டுக்கு.'

சங்கிலியால் கட்டுண்டு வில்லி வசந்த சேனையைப் பார்த்து உறுமும் மனோகரா சிவாஜி போல, அவர் மனம் உறுமினாலும் கோர்ட் என்ற சொல்லைக் கேட்டவுடன் தமிழ்ப் படங்களில் வரும் நீதி மன்றக் காட்சிகளும் அவர்முன் வரத் தவறவில்லை.

`எனது கட்சிக்காரராகிய...' `தற்ஸ் ஓல் யுவர் ஆனர்' ....`இ.பி.கோ 304 ஆவது செக்சன்படி' போன்ற வசனங்களும் மரக்கூண்டு, தொந்திப் பொலிசார், கறுத்த அங்கி வழக்குரைஞர்கள், கைவிலங்கு எல்லாமே அவரைப் பயமுறுத்த இலேசாக அவர் மேனி வியர்க்கத் தொடங்கியது.

அவர் ஆற்றாமையின் கோபம் இந்தப் புகலிட நாடுகளின் மீதும் திரும்பத் தவற வில்லை.

`வெள்ளியரும் நீரோ.... வையின் வளநாடும் உமதோ கார் பழக வேணுமெண்டா ஏன் போட்டீர் இந்தக் கடுஞ் சட்டம்.'

என மனதிற்குள் அறம் வேறு போடத்தொடங்கினார். பேய்க்குட்டிக்கு ஒன்றுமே விளங்க வில்லை. தான் அப்படி என்ன சொல்லி விட்டேன். ஏன் இவர் போய் பேச்சு மூச்சு இல்லாமல் இருக்கிறார் என்பதும் புரியவில்லை. வழமையாக கார் பழக வேணுமெண்டால் சித்தி பெறவேண்டிய வீதி ஒழுங்கு விதிமுறைகள் எனப்படும் கோட் சோதினை பற்றித்தானே சொன்னேன். அதற்கேன் இவர் இந்த முழுசு முழுசுகிறார் என்பது தெரியாமல் அவனுக்கு முழுசாட்டம் ஏற்பட்டது.

எப்படியென்றாலும் அரியகுட்டியை ஆறுதல் படுத்தாமல் அவனால் இருக்கமுடிய வில்லை. தான் ஆடாவிட்டாலும் தன் கிளாஸ் ஆடும் அல்லவா? `அண்ணை நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதேங்கோ மனம் வைச்சால் கோட்டை வலு சுகமாக பாஸ்பண்ணலாம். அதை முடிச்சா பிறகென்ன (கார்) ஓட்டந் தானே. அதுக்கு நான் இருக்கிறனெல்லே.'

பேய்க்குட்டி சொல்லச்சொல்ல அரியகுட்டி யருக்கு நெஞ்சில் `அல்டி' கடை பால்வார்த்தது போல் இருந்து. அட இவன் சொன்னது இந்தக் கோட் பற்றித்தான் என்பதில் மகிழ்வும் கொண்டதுடன், இதைப் புரியாமல் தான் கோர்ட்டை விட்டதில் வெக்கமும் அடைந்தார்.

கார் பழகவேண்டுமென்பது அரியகுட்டியரின் ஆசை மட்டுமல்ல, ஒரு ஆவேசமும் கூட. எங்காவது விழாக்களுக்குப் போனால் அவருக்குத் தெரிந்தவர்கள் கார்ச் சாவியை கையில் சுழற்றியபடி `இந்த இடத்தில பாக்கிங் எடுக்கிறது பெரிய கஸ்ரம்' எனச் சொல்லி தமது குடும்பம் காரில் வந்தது என்பதை தம்பட்டமடிப்பதும், அந்தத் தம்பட்டத்தைக் கேட்டு மாருதப்புரவீக சுந்தரி அவரைப் பார்த்து பொருமுவதும் — இறுமுவதும். இப்படியாக எத்தனைதரம் குறுகிப்போயிருக்கிறார். 'பாக்கிங்' சுகமாக எடுத்தவன்கூட தானும் பாக்கிங்குக்குக் கஸ்ரப்பட்டதாக பொய் சொல்லி தன்னைப் பெரியவனாகக் காட்டிக்கொள்ளும்போது அவர் துடித்தும்போயிருக்கிறார்.

இது மட்டுமா? இல்லையே. மலிவு விலைக்கடைக்குப் போய் பால், தண்ணிக் கேஸ்களை அடுக்கி இழுத்துக்கொண்டு வரும்போது அருகே கூடவரும் மாருதப்புர —வீகசுந்தரி சாட்டுக்கு நாலைந்து சிப்ஸ் பைக்கற்றுக்கள் அடங்கிய பையைக் காவி வரவும் அதில் ஒன்றை உடைத்து றோட்டு றோட்டாகச் சாப்பிட்டு வீடு வரமுன்னரே அதை முடித்தாலும் கூட, அவர் தன் காவு விதியை நொந்தது கிடையாது. ஆனால் அப்போது யாராவதுதெரிந்தவன் காரில் போகும் பொழுது பீம்... பீம் என கோண் அடித்து விட்டுச் செல்கையில் அந்த ஒலி அவர் காதுகளில் நாராசமாக அல்லது நாய் இராகமாகப் பாய்ந்து அவரை நார் நாராய் எத்தனை முறை கிழித்திருக்கிறது.

இவ்வாறாக அவர் பட்ட துன்பங்களுடன் அவ்வப்போது மாருதப்புவீகசுந்தரியும் தன் பங்கிற்கு `உங்களைக் கட்டி என்ன சுகத்தைக் கண்டேன்' என மெகாசீரியல் நாடக தொடரில் வரும் பாத்திரம்போல அடுக்கும் வசனங்களும் சேர்ந்தமைதான் அவரை கார் பழகியே தீரவேண்டும் என்ற முடிவினை எடுக்கவைத்தது.



பிரேம்

000000

`அகர முதல கோட் எல்லாம் பேய்க்குட்டி முதற்றே உலகு' என்ற புதுக்குறளை மனனம் செய்தபடி பேய்க்குட்டி முன்செல்ல தமிழர்களால் தமிழர்களுக்கென நடாத்தப்படும் `கோவிந்த நாமம் சாரதிகள் பயிற்சி நிலையத்திற்குள் நுழைந்தார் அரியகுட்டியர். யானையைப் பிடிச்சு பானைக்குள் அடைத்தது போல அங்கே அமர்ந்திருந்தார் நிலைய உரிமையாளர் கோதண்ட இராமன். ஒரு அனுபவப்பட்ட சாரதிக்கே உரிய பக்குவத்துடன் பேய்க்குட்டி எல்லாவற்றையும் கதைத்தான். ஒரே தடவையில் காசுகட்டினால் கொஞ்சம் கழிவு கிடைக்குமென கோதண்ட இராமன் சொன்னதைக் கேட்டு இருவருமே ஆனந்தப்பட்டனர்.

`காசு குடுக்கேக்க கடவுளை மனதில் நினைச்சுக்கொண்டு குடுங்கோ' என மாருதப் புரவீகசுந்தரி சொல்லி அனுப்பியதும் அவர் நினைவுக்கு வந்தது. `கோவிந்தா ... கோவிந்தா' (காசுக்கு?) என மனமுருகி ஈரோத் தாள்களை கண்ணிலொற்றிக் கையளித்தார் அரியகுட்டியர். பயிற்சி நிலையத்தை விட்டு இறங்கியதுமே பேய்க்குட்டி சொன்ன சூட்சுமத்தைக் கேட்டு அரியகுட்டியருக்கு உடம்பு புல்லாக புல்லரித்தது. நல்லவேளையாக சந்திரிகாவுக்கோ அல்லது ஜோர்ஜ்புஷ்சிற்கோ பேய்க்குட்டி அந்தரங்க ஆலோசகராகும் பாக்கியம் கிடைக்காததையிட்டு மகிழ்வு கொண்டார்.

முழுக்க முழுக்க பயிற்சி நிலையத்தை நம்பியிருந்தால் நல்லாப் பேய்க்காட்டி காசைக் கறப்பான்கள் என்பதனால் கோட் எனப்படும் கேள்விக் கொத்துப் பரீட்சைக்கு தயார் செய்ய பயிற்சி நிலையத்திற்கு வந்துபோகும் அதே நேரம், கார் ஓடிப்பழகுவதற்கு தானே உதவி செய்து கொடுப்பது என்பதுதான், பேய்க்குட்டியின் சூட்சுமம்.

கொஞ்சம் ஓடத்தெரிந்தால் மேலதிக மணித்தியாலங்களுக்கென கோதண்ட இராமனுக்கு தண்டமாக காசைக்கொட்டி அழவேண்டியதில்லை என்பதுதான் அவனது சூட்சுமத்தின் நோக்கம். என்னதான் கோதண்ட இராமன் இரண்டு கிழமையாக மொழியை பெயர்த்துத் தள்ளினாலும் கோட் எனப்படும் கேள்விக் கொத்துக்களில்வருபவை ஒன்றுமே, அரியகுட்டியருக்கு விளங்கவில்லை. தாச்சி விளையாட்டில் பூட்டிற்குள் அகப்பட்டுக் கொண்ட பழக்காய்போல அவர் கலக்கம் கொண்டார். ஆனால் ஒன்று மட்டும் அவருக்கு ஐயத்திற்கிட மில்லாமல் விளங்கிக் கொண்டது. அதாவது இந்தக் கேள்விகளை உருவாக்கியவன் நிச்சயமாக முற்பிறப்பில் விக்கிர மாதித்தனிடம் கேள்வி கேட்ட வேதாளமாகவே இருந்திருக்கவேண்டும் என்பதே அது.

விடிந்தும் விடியாத ஒரு ஞாயிற்றுக்கிழமைப்பொழுது. பெரிய சுப்பமாக்கற் ஒன்றின் பாக்கிங் பகுதியில் அரியகுட்டியரின் முதலாவது கார் ஓட்ட செய்முறைப் பயிற்சி மதிப்பிற்குரிய பேய்க்குட்டியினால் தொடக்கி வைக்கப்பட்டது. அரியகுட்டியரினால் சேதாரப்பட்டுக் கொள்வதற்கு மாந்தர்கள் எவரும் அங்கில்லை. மாறாக லாந்தர் கம்பங்களே அங்கு நின்றன. அரியகுட்டியர் இதற்கு முன்னரே கியர், கிளச்,அச்சிலேற்றர், பிறேக் என்பனவற்றை முன்னரே கண்டும் கேட்டும் இருந்தாலும் அவற்றில் இவ்வளவு கஸ்ரம் இருக்குமென இப்போதுதான் அனுபவ ரீதியாக அவர் உணரத் தலைப்ப(ட்)டார்.

நின்ற இடத்திலிருந்து அரைமீற்றர் தூரம் கார் அசைவதற்குள் ஜெயசிக்குறு போல பல தடவைகள் அது நின்றுவிட்டது. கிளச்சை அமத்த, கியரைப் போட்டு, சீற் பெல்ற்றைப் போட்டு, மூச்சைப் பிடித்து மெல்லக் கிளச்சை விட்டு, கான்ட்பிறேக்கை எடுத்து, அக்சிலேற்றரில் கால் வைத்து, ஸ்ரெயரிங்கில் கைவைத்து இன்னோரன்ன மூவகைக் கண்ணாடிகளைப் பார்த்து காரை எடுப்பதற்குள், சீ என்றது அரியகுட்டியருக்கு. அம்மாடியோ ஒரே நேரத்தில் எத்தனை விடயங்கள். அட இதையெல்லாவற்றையும் செய்தாலும், கார் மெல்லவாவது உருண்டால்தானே. அது ஜெயசிக்குறுவேதான்.

அக்சிலேற்றரில் கால் வைக்கும்போதெல்லாம் அரியகுட்டியருக்கு மாருதப்புரவீக சுந்தரி அடிக்கடி நினைவுக்கு வந்தாள். சின்னத்திரை நாடகம் பார்த்துக்கொண்டு இருக்கும் போது தெரியாத்தனமாக சாப்பாடு போட்டுத் தரச்சொல்லி, தான் அவளைக் கேட்கும் போதெல்லாம் எழும் உறுமல் சத்தம்போலவே அக்சிலேற்றரை அமத்த கார் எஞ்சினும் உறுமியது. பேசாமல் அக்சிலேற்றர் என்ற சொல்லை எடுத்துவிட்டு `அச்சலேற்றர்' என்பதாகப் பெயர் வைக்கலாமோ என்றுகூட அவருக்கு ஐடியா வந்தது.

ஒருவாறு முயற்சி செய்து அதன் திருவினையால் ஸ்ராட் பண்ணியது கார். இம்முறை நொக்கடிக்க விடாமல் ஓடியே தீருவதென முடிவெடுத்தார் அரியகுட்டியர். கியரை மாத்தி மெதுவாகக் கிளச்சை விட கார் உருளத் தொடங்கியது. அந்த உருளல் தந்த உற்சாகத்தில் அண்ணை அச்சிலேற்றரை அமத்துங்கோ அமத்துங்கோ என பேய்க்குட்டி கத்தினான். (பாவி மெதுவாக, மெதுவாக என்றும் சொல்லியிருக்கக்கூடாதா, அவன் கத்தல்

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

# தொடக்கமே தொடக்கத்தின் முடிபு



## என்னோடு நான்

**கந்தையா நவரேந்திரன்**

கண்களால் காணமுடியாத ஆன்மா பற்றி நாம் ஏன் இத்துணை முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற ஐயப்பாடு ஒருவருக்கு ஏற்படுவது நியாயமானதே. மரங்கள் எங்கள் கண்களுக்குத் தெரிகின்றன. வேர்களோ நிலத்தின் கீழே மறைந்திருக்கின்றன. அவை கண்களுக்குத் தெரியவில்லை என்பதால் அவற்றை முக்கியமற்றவையென ஒதுக்கி விடலாமா? கண்ணுக்குத் தெரிந்த மரம்,தனது இருப்புக்கு கண்ணுக்குத் தெரியாத வேர்களில்தானே தங்கியுள்ளது, நாம் மரத்தைப் பேணிக் காத்துக்கொண்டு வேர்களைக் கவனியாது விட்டவிடுவோமேயானால் அந்த மரம் விரைவாகப் பட்டுப் போவது நிச்சயம். அதன் பின்னர் அப்பட்டுப்போன மரம் பூக்களையும் கனிகளையும் தராது. ஏனெனின் அதன் உயிர் மூச்சு முற்று முழுதாக வேர்களிலேயே தங்கியிருந்தது. வாழ்க்கையின் விளைவு எதுவானாலும் அது காட்சியிலிருந்து மறைந்தே உள்ளது. வெளியே தோன்றுவது வெளிமூடியேயாகும். எது வெளியே தோன்றாது உள்ளதோ, அதுவே அகத்திலுறையும் ஆன்மாவாகும். எமது உடலாகத் தோன்றுவது வெளித்தோற்றமே. அவ்வுடலுக்குள் உள்ளது, கண்ணுக்குப் புலப்படாதது. கண்ணுக்குத் தெரியவில்லை என்பதனால் அதன் மகத்துவம் – உன்னதம்–ஒப்புவமையற்ற முக்கியத்துவம் எவ்விதத்திலும் குறைந்து போகாது. அது கண்களுக்குத் தெரியாமல் இருப்பதனாலேயே அது அதிமுக்கியத்துவம் பெறுகிறது. வெளிப் படையாகத் தோன்றும் உடலினூடாகவே வாழ்வையும் வாழ்வின் முடிவையும் நாம் காண்கின்றோம். வெளியே தெரியும் உலகை உண்மையென நாம் நம்புவதன் விளைவே இது. நிகழ்காலத்து கண இருப்பின் (Isness) உள்நோக்கின்மையே எம்மை இத்தகைய மாயையில் விட்டு விடுகிறது.

எங்களுக்குள், எண்ணத்தின் தொடர்ச்சியான அசைவு–நகர்வு நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. எங்களது மண்டை ஓடு திறக்கப்பட்டு நுணுக்கமாக ஆராயப்பட்டால் எண்ணத்தின் இருப்புக்கான எவ்வித அறிகுறியும் தெரியாது. அதற்குள் எண்ணத்தின் எந்தத் தடயமும் இருக்காது. ஆனால் நாம் எமது எண்ணத்தை உணர்கின்றோம். விஞ்ஞானிகள் எண்ணத்தைத் தாங்கள் காணவில்லையெனக் கூறுகின்றனர். எண்ணங்கள் இருந்ததையோ இருப்பதையோ விஞ்ஞானிகளால் தங்களது ஆய்வு கூடங்களில் நிரூபிக்க முடியவில்லை என்பதால் அவை இல்லையென்று கூறமுடியுமா? ஆரம்பத்தில் உபயோகிக்கப்பட்ட உபகரணங்கள் துல்லியமாக இருக்காத காரணத்தினால் நுட்பமான எண்ணத்தின் யதார்த்த உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் இத்துறையில் முன்னேற்றம் ஏற்படலாமென நாம் எதிர்பார்க்கலாம்.

அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்றில் இது சம்பந்தமாகப் பரிசோதனை ஒன்றைச் சிலர் அண்மைக்காலத்தில் மேற்கொண்டனர். அதி நவீன தொழில்நுட்பம் கொண்ட நிழற்படம் பிடிக்கும் கருவியைக்கொண்டு வியக்கத்தக்க படம் ஒன்றைப் பிடிப்பதில் அவர்கள் ஈற்றில் வெற்றி கண்டனர். ஒருவரை ஒரேயொரு பொருளியலில் மட்டும் தனது முழுக்கவனத்தையும் செலுத்தும்படி செய்துவிட்டு, அந்த நிழற்படக் கருவியினால் அவரது எண்ணத்தைப் படம்பிடிக்க முனைந்தனர். சில முறைகள் அம்முயற்சி தோல்வியுற்றன. கடைசியாக ஒருமுறை, மன அதிர்வலைகளின் உள்ளடக்கம் துல்லியமாகப் படம் பிடிக்கப்பட்டது. படத்தில் அம்மனிதனால் பார்க்கப்பட்ட பொருளாகிய கத்தியின் விம்பம் பதிந்திருந்தது. இத்துறையில் ரஷ்ய விஞ்ஞானிகளும் கணிசமான முன்னேற்றங் கண்டுள்ளனர். கண்ணுக்குத் தெரியாத எண்ணங்களின் உள்ளமையை 'Telepathy' 'ரெலிபதி' என்னும் மனத் தொடர்பு முறையைக் கையாண்டு நிரூபித்தனர். இதிலிருந்து ஆழ்தியானத்தின் மூலம் ஆன்மாவின் தரிசனம் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது என்பது புலனாகிறது.

நிலத்தின் அடியிலிருக்கும் மரத்தின் ஆதாரமான வேர்களை நிலத்தைத் தோண்டிப் பார்ப்பது போல் எமது அகத்திலுள்ள சுயத்தையும் எமது அகத்தைத் தோண்டிப்பார்க்கலாம்.

முற்றாக இளந்தேங்கா யின் சிரட்டையை இரண்டாக உடைக்கும்போது, அதன் உள்ளேயிருக்கும் முக்கியமான வெள்ளைப் பகுதி, சிரட்டையுடன் ஒட்டி இணைந்து இருப்பதனால் சிரட்டையுடன் சேர்ந்து இரண்டாகும். நன்றாக முற்றிக் காய்ந்த தேங்காயை மெதுவாக–நிதானத்துடன் இரண்டாகப் பிளக்கும்போது, வெளிக்கோதாகிய சிரட்டை மட்டுமே இரண்டாகப் பிளவுபடுமேயன்றி அதனுள்ளிருக்கும் வெள்ளைப் பகுதி பிளவுபடாமல்–ஊறுபடாமல் அப்படியே முழுமையாக இருக்கும். தேங்காயின் உட்பகுதியை எங்கள் தேவைக்கேற்றபடி எடுக்கும்வரை அதன் சிரட்டை மிகவும் உபயோகமாகவிருக்கும். ஆனால், அத்தியாவசியமான உட்பகுதியை நாங்கள் விரும்பிய பதத்தில் – பருவத்தில் எடுத்து பின்னர் உபயோகமற்ற சிரட்டையை வீசிவிடுகின்றோம். அதுபோலவே சரியான சுயதேடலின் பக்குவ நிலையில் ஆன்மாவையும் அதாவது எம்மகத்திலுள்ள சுயத்தையும் சிரட்டையென்ற உடலிலிருந்து பிரித்துப் பார்க்கலாம். சிரட்டையின் தொழிற்பாட்டையே எங்களது உடம்பும் செய்கிறது. சிரட்டை இல்லாமல் வெள்ளையான உட்பகுதி இராது. தேங்காயின் மிக மிக முக்கியமான பகுதி சிரட்டை. எனினும் அதன் அவசியம் ஓர் அளவுவரைதான். சிரட்டைக்குள் இருக்கும் வெள்ளையான உட்பகுதியைப் பேணிக்காக்கும் அளவுக்குத்தான் சிரட்டையின் உபயோகம் உள்ளது. தேங்காய் குரும்பையாக இருக்கும்போது அதன் சிரட்டை மென்மையாக இருக்கும். அதன் உட்பகுதி கட்டியாகாத திரவ நிலையையொத்த வெள்ளைப் பகுதியாக இருக்கும். சிரட்டை கடுமை ஆக அக உட்பகுதியும் உபயோகமான திண்மமாக ஆகிக்கொண்டே போகும். அதுபோலவே எங்களது உடம்பும், எமது உடல் நாங்கள் கருவாகத் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போது வெறும் கலங்களின் கட்டித் தொகுதியாக இருந்து, பின், நாளாந்தம் முதிர்வு பெற்று உருமாறுகிறது. உடம்பும் மாறிக்கொண்டே இருப்பதனால் உடலின் இறப்பும் இயல்பானதே.

நாம் எமது உடம்பை மட்டும் பாதுகாத்துக்கொள்வதில் அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். உடம்பானது நோய்வாய்ப்படாமல் இருக்கவும், நோயுற்றால் அதனைக் குணப்படுத்தி உடம்பைப்பேணவும் பல்வேறு மருத்துவதுறைகளில் பெரும் படிப்புகள் எல்லாம் படித்துப் பட்டங்கள் பல பெறும் மருத்துவ நிபுணர்களும் இருக்கின்றார்கள். உடம்பின் ஆரோக்கியம் பேணப்படுவது மிகவும் அவசியமானது. அதனாலேயே குறைவற்ற செல்வமாக நோயற்ற வாழ்வைப்போற்றுகின்றோம். உடல் ஆரோக்கியம் பேணப்பட்டாலேயே எதுவுமே சாத்தியமாகும். இது உண்மையென்றாலும், நாம் எமது புறத்தை மட்டும் பாதுகாத்து மெருகூட்டுவதிலேயே ஈடுபடுகின்றோமேயன்றி எமது அகத்தை நோயுற்று அழுகவிட்டுக் கொண்டிருக்கின்றோம். நாம் எண்ணிக்கொண்டிருப்பதுபோல் சடப்பொருள் (matter) என்று ஒன்றுமில்லை. அது வெறும் தோற்றமே– மாயையே. இதனை விஞ்ஞான பூர்வமாக விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். எங்கள் கட்புலனுக்குத் தோன்றுவது எப்படி மாயையாய் இருக்க முடியும் என்ற நியாயமான வினாவை ஒருவர் வினவலாம்.நாங்கள் காணும் நட்சத்திரங்கள் உண்மையில் நாங்கள் காண்பதுபோலிருப்பதில்லை. நட்சத்திரங்களில் ஒளிக் கதிர்கள் பூமியை வந்தடையக் கிட்டத்தட்ட 60 வருடங்கள் எடுப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அவை பூமியை வந்தடைந்த பின்னரே நட்சத்திரங்களை நாங்கள் காண்கின்றோம்.

நட்சத்திரத்தின் உண்மையான தோற்றத்தை எம்மால் காண இயலாது. அது போலவே நாம் காணும் உடம்பும் பல கோடானு கோடி அணுக்களின் தொகுப்பேயாகும். அணுவின் மூலக்கருவை (nucleus)ச் சூழவுள்ள சுற்றும்பாதையில் அவ்வணுவின் இலத்திரன் என்று அழைக்கப்படும் பாரமற்ற இலெக்ட்ரோன்(electron) துகள் வலம் வருவதன் வேகத்தினால் ஏற்படும் வன்மையால்– சக்தியாலேயே எங்களால் பொருட்களைக் காணக்கூடியதாயுள்ளது. இலெக்ட்ரோன் துகள்களின் வலம் வருதல் நின்றால் நாம் காணும் பொருள் மறைந்து போகும்.

தினந்தோறும் நாம் வீட்டைப் பெருக்கிக் குப்பையை அப்புறப்படுத்திவிடுகின்றோம். ஆனால் நாம் குப்பையைத் துறந்துவிட்டோமென நாம் கண்டவர் நின்றவர்களிடமெல்லாம் சொல்லித் திரிவதில்லை. குப்பை அப்புறத்தப்படவேண்டியதொன்றே. அதேவேளை ஒருவர் தான் தனது செல்வத்தை எல்லாம் அப்பால் எறிந்துவிட்டதாகக் கூறினால், இன்னும் செல்வம் அவருக்குப் பெறுமதி மிக்கதாகவே உள்ளது என்றே பொருட்படும். பொருளைப் பொருளாகக் கருதும் மனநிலையில் அவருக்கு அடிப்படை மாற்றம் ஏற்படவில்லை என்பதே உண்மை.

மனத்தை அச்சங் கௌவிக் கொள்ளும்போது மனிதன் சில சபதங்களை எடுக்கின்றான். உதாரணமாக, பொய் சொல்வதில்லை என ஒருவன் சபதம் செய்யும் போது, அவன் யாருக்கெதிராக சபதம் எடுக்கின்றான், அவன் செய்யும் சபதமானது அவனால் தனக்கெதிராக எடுக்கப்பட்ட தொன்றுதானே? அவன் தனது பொய் சொல்லும் மனத்திற்கு எதிராகத்தான் சபதம் செய்கிறான். துறத்தலின் தொடக்கமே முடிவு. தொடக்கம் மரத்திலிருந்து முற்றிப் பழுத்த இலை விழுந்துவிடும். இந்த உதிர்வை மரமும் அறியாது இலையும் அறியாது. காற்றும் அறியாது. இவ்வுதிர்வு அமைதியிலேயே நிகழ்கின்றது. பச்சை இலையை யாம் ஒடிக்கும் போது, இலையும் மரமும் அந்த வலியை–வேதனையை உணர்கின்றன. பச்சை இலையை மரத்திலிருந்து ஒடிக்கும்போது இரண்டிற்கும் காயம் ஏற்படுகின்றது. சுய கட்டுப்பாட்டை கடுமையாகக் கடைப்பிடிப்பவன் செய்யும் சபதம் பச்சை இலையைப் போன்று காயப்பட்டவனே. அவனும் ஒரு வடுவை விட்டே செல்வான். எங்களுள் இருக்கும் தீய குணங்களை நாம் பிற உந்தல் எதுவும் இல்லாமல் நாமாகவே உணர்ந்து –பூரணமாகப் புரிந்துகொள்ளும்போது, பழுத்த இலை மரத்திலிருந்து தானாகவே விழுவதுபோல் அத்தீய குணங்களும் எமது மனத்திலிருந்து தானாக, எமக்கு எவ்வித வேதனையும் தராமல் உதிர்ந்து, விழுந்துவிடும். பிறரது போதனைகளையும் வழிகாட்டல்களையும், எண்ணங்களையும் முற்றுமுழுதாக நம்பியிருப்பவர்களே நாடுவர். எண்ணமெனும் காலத்தின் பிடிக்குள் சிக்குண்டவர்களுக்கு கணத்துக்குக் கணம் வாழுதலும் கணத்துக்குக் கணம் மரணித்தலும் அந்நியமானவை. காலத்தின் பிடியிலிருந்து விடுபடுதலே பரிபக்குவ நிலையாகும். இந்த பரிபக்குவ நிலையிலேயே எங்களிடமுள்ள தீய குணங்கள் யாவும் உயிர்ப்பு இழந்த பழுத்த இலை போல் தானாக உதிர்ந்து விழும் தன்மையைப்பெறும். வன்முறையோடு போராடுவதன் மூலம் வன்முறையை நீக்கிவிட முடியாது. வன்முறை இல்லாது போக, முதலில் எமது மனத்திலிருந்து வன்முறை நீங்க வேண்டும். மனத்தில் வன்முறை இல்லாது போனால் செயலில் வன்முறை வராது. அகத்தில் வன்முறையுடைய மனிதனால் எவ்வளவு தான் அகிம்சை கடைப்பிடிக்கப்பட்டாலும் அவனிடமிருந்து வன்முறை நீங்கப் போவதில்லை. சொற்கள்எவரையும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு–ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குக் காவிச் செல்லாது. சாதாரணமாக எங்கள் எண்ணங்களைச் சுமக்கத்தான் சொற்கள் தேவை. நினைவுகளைச் சுமக்க, கருத்துக்களைச் சுமக்க, கொள்கைகள்–கோட்பாடுகள் ஆகியனவற்றைச் சுமக்கச் சொற்கள் தேவை. பகையைச் சுமக்க, பாசத்தைச் சுமக்க, பொறாமையைச் சுமக்க, காமத்தைச் சுமக்கச் சொற்கள் தேவை.



(தொடர்ச்சி 24ம் பக்கம்)



## மருத்துவர்களாகும் நாய்கள் !

கிட்னியில் ஏற்படும் புற்றுநோயை நாய்களின் மூலம் கண்டறியலாம் என பிரித்தானிய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். நோயாளியின் சிறுநீரை பயிற்சியளிக்கப்பட்ட நாய்கள் முகர்ந்து பார்த்து அந் நோயாளிக்கு புற்றுநோய் உள்ளதா இல்லையா என்று கண்டறிந்துவிடும். புற்றுநோயிலுள்ள திணுசுக்களில் இருந்து வெளிவரும் நெடியின் மூலம் நாய்கள் இந்நோயாளிகளை அடையாளம் கண்டுகொள்கின்றன என மருத்துவ வல்லுநர்கள் கூறியுள்ளனர். பயிற்றப்பட்ட நாய் ஒன்று பரிசோதனையில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## சீன நம்பிக்கை

2004ம் ஆண்டிற்கான அங்கவீனர்கள் ஒலிம்பிக்போட்டி கடந்த வாரம் ஏதென்சில் நிறைவடைந்தது. நிறைவு தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற கலைநிகழ்வில் சீனாவின் நடனக்குழுவினர் நடாத்திய கண்கவர் நடனக்காட்சியில் இருந்து ஒரு பதிவு.



## காதல் சின்னத்திற்கு 350 ஆண்டுகள்!



கடந்தவாரம் இடம்பெற்ற 350வது ஆண்டு நிகழ்வில் ஷாஜகான் – மும்தாஷ் போன்று வேடமணிந்து நடித்த நடிகர்கள் இருவர்



உலக அதிசயங்களில் ஒன்றாகவும் காதலர் சின்னமாகவும் கருதப்படும் தாஜ்மகால் கட்டப்பட்டு இந்த ஆண்டுடன் 350 வருடங்கள் நிறைவடைகின்றன. இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆக்ரா யமுனை நதிக்கரையில் அமைந்திருக்கும் இந்த அதிசயச் சின்னம் முகலாய மன்னர் ஷாஜகான் தனது ஆசை மனைவி மும்தாச்சிற்காக கட்டியது. சுமார் 10,000 கட்டக்கலைஞர்கள் 20 ஆண்டுகளாகப் பணிபுரிந்து, 27.09.1654ம் ஆண்டு அன்று தாஜ்மகால் கட்டிமுடிக்கப்பட்டது. அதன் நிறைவு விழா கடந்த 27ம் திகதி ஆரம்பமாகியது. இரண்டு வாரங்கள் நடைபெறும் இவ்விழாவில், பல்வேறு நாடுகளிலும் இருந்து கலைஞர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை வழங்குகின்றார்கள். அத்துடன் ஆக்ராவில் முகலாய பேரரசின் சாம்ராஜ்சியம் இடம்பெற்ற பதேபூர் பகுதியில் விசேட நிகழ்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, வருடம் ஒன்றிற்கு சுமார் எட்டு இலட்சம் வெளிநாட்டவர்கள் வந்து பார்வையிடும் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட உலக அதிசயங்களில் ஒன்றான இந்த தாஜ்மகால், சுற்றுப்புற சூழ்நிலையால் மெல்ல மெல்ல அழிந்துகொண்டிருப்பதாக பல்வேறு அமைப்புக்களாலும் கவலைகள் வெளியிடப்பட்டுள்ளன. வாகனங்களில் இருந்து வெளிவரும் புகையினாலும் சத்தங்களினாலும், தொழிற்சாலை புகைகளினாலும் இதன் அழிவு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பல வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பலதும் பத்தும்

## விளம்பரத்தில் பிரதமர் துணைவி !



விளம்பரத்தில் இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரின் துணைவி செரி பிளேயர் நடிப்பதாக ஆச்சரியப்படுகின்றீர்களா..? இது விளம்பரம் தான், ஆனால் விற்பனைக்கான பொருட்கள் தொடர்பானதல்ல. உலகில் மார்புப் புற்றுநோயால் பெருமளமான பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இந்நிலையில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்ச்சியை மக்களுக்கு ஏற்படுத்த இந்த மாதத்தை மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்ச்சி மாதமாக இங்கிலாந்து அறிவித்துள்ளது. இதுதொடர்பான விழிப்புணர்ச்சி விளம்பரங்கள் ஊடகங்களில் மற்றும் வீதிகளில் மக்களின் பார்வைக்கு விடப்பட்டுள்ளன. இவ்வாறான விழிப்புணர்ச்சி விளம்பரம் ஒன்றில் இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரின் துணைவி செரி பிளேயரும் பங்கேற்றுள்ளார்.
அவ் விளம்பரக் காட்சிகளில் ஒன்றே இது.

## உயிருடன் திரும்பினார் முதற் கணவர், விட்டுக்கொடுத்தார் 2வது கணவர்

சினிமாக்களில் வருவதுபோன்று சிலவேளைகளில் நிஜ வாழ்க்கையிலும் நடந்துவிடுவதுண்டு. இந்தப் பெண்ணுக்கும் அந்த நிலைதான். தனது முதற்கணவன் இறந்துவிட்டதாகக் கருதி இரண்டாவது திருமணம் செய்தார். திருமணம் செய்து குழந்தைக்கும் தாயாகும் நிலையில் அவர் முன்னால் முதற் கணவர் உயிருடன் வந்து நின்றால் எப்படியிருக்கும்...?

உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த இராணுவச் சிப்பாயான முகம்மது ஆரிப், குடியா என்ற பெண்ணை திருமணம் செய்தார். அந்தவேளையில்தான் இந்தியா - பாகிஸ்தானுக்கிடையிலான கார்கில் போரும் தொடங்கியது. மனைவியைவிட்டுப் பிரிந்து போருக்கு செல்ல வேண்டிய கட்டாய அழைப்பு. அதுவும் முன்னணி நிலைகளில் பணி. ஆசைக் கனவுகளை சுமந்தபடி முன்னணி அரணில் பணிபுரிந்த இவரது அணி, வழி தவறி பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்துவிட்டது. அதன் பின்னர் அவர்கள் பற்றிய எந்தவித தகவல்களும் இல்லை. காணாமல்ப் போனவர்களின் பட்டியலில் இவர்களின் பெயரும் இணைந்து கொண்டது.

ஐந்து ஆண்டுகள் பொறுமையோடு காத்திருந்த குடியாவின் பெற்றோருக்கு அவள் கணவன் உயிரோடு இருப்பான், திரும்பி வருவான் என்ற நம்பிக்கை முழுமையாகப் போய்விட்டது. இதனால் தபீக் என்பவரை குடியாவிற்கு இரண்டாவது திருமணம் செய்துவைத்தனர். வழிமாறி பாகிஸ்தானுக்குள் நுழைந்துவிட்ட ஆரிப் அணியினர் பாகிஸ்தான் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு ஆரிப், பாகிஸ்தான் சிறையில் இருந்து விடுதலையானார். ஆசைக் கனவுகளுடன், அன்பு மனைவியைக் காண சொந்த ஊருக்கு சென்றார். அவருக்கு பேரிடி காத்திருந்தது. தனது மனைவி வேறு ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டு, 8 மாதக் கர்ப்பிணியாக இருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார். இருந்தபோதிலும் பிரியமான மனைவியை பிரிய அவர் மனம் பிரியப்படவில்லை. இதனால் பஞ்சாயத்தாரை சந்தித்து மனைவியை மீண்டும் சேர்த்து வைக்கும்படி வேண்டினார். அவரது வேண்டுகோளை பஞ்சாயத்தார் விசாரித்தனர். ஆரிப் விவாகரத்து (`தலாக்') செய்யாத நிலையில், 2வது திருமணம் சட்ட விரோதமானது. இஸ்லாமிய ஷரீயத்திற்கு மாறானது என்று பஞ்சாயத்தார் கருதினார்கள். இதனால் குடியாவுடன் ஆரிப் சேர்ந்து வாழ பஞ்சாயத்தார் தீர்ப்பு அளித்தனர். குடியாவை ஏற்றுக்கொண்ட ஆரிப், அவரது வயிற்றில் வளரும் குழந்தையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ``என் மனைவி எனக்கு வேண்டும்; அவளை நான் விரும்புகிறேன். ஆனால் அந்த குழந்தையை நான் ஏற்க மாட்டேன்" என்று ஆரிப் உறுதியாக கூறினார். இதனால், குழந்தை பெற்ற பிறகு அதை பெற்றோருடன் விட்டு விட்டு குடியா ஆரிப்புடன் செல்லவேண்டும் என்று பஞ்சாயத்தார் உத்தரவிட்டனர். இந்த உத்தரவை ஏற்று குடியா ஆரிப்புடன் அவரது வீட்டுக்கு சென்றார். மனைவியை மீண்டும் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் திளைத்து இருந்த ஆரிப்புக்கு மீண்டும் சோதனை ஏற்பட்டது. குழந்தையை பெற்ற பிறகு அதை விட்டுவிட வேண்டும் என்று ஆரிப் கூறுவதை குடியாவால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இந்நிலையில் குடியாவின் 2வது கணவர் தவ்பீக்கின் பெற்றோர்கள் புதிதாக பஞ்சாயத்தை கூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். குடியாவின் சட்டபூர்வமான கணவர் என்



மகன் தவ்பீக் தான். அவளுடைய வயிற்றில் வளரும் குழந்தைக்கு தந்தையும் அவன் தான். எனவே அவளது பிரசவம் எங்கள் வீட்டிலேயே நடைபெற பஞ்சாயத்தார் உத்தரவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். இந்நிலையில், இந்த பிரச்சினையில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. குடியா வயிற்றில் வளரும் குழந்தையை ஏற்றுக்கொள்ளவும், அதை முழு மனதோடு பராமரிக்கவும் ஆரிப் ஒப்புக் கொண்டார். இதன் அடிப்படையிலும், இஸ்லாமிய `ஷரீயத்' சட்டத்தை ஏற்றும் ஆரிப்புடன் முழுமனதுடன் வாழ குடியா முடிவு செய்தார். இதை ஏற்றுக் கொள்வதாகவும் குழந்தையை வளர்க்க பணம் கொடுப்பதாகவும் 2வது கணவர் தவ்பீக் தெரிவித்தார். இதை ஏற்றுக்கொள்ள குடியா மறுத்து விட்டார். குழந்தை எங்களுடனேயே இருக்கும். அதற்குரிய செலவுகளை நாங்களே ஏற்றுக் கொள்வோம் என்று குடியா கூற அதை ஆரிப் ஆமோதித்தார். இப்போது குடியாவின் வாழ்க்கை மீண்டும் முதற்கணவருடன்...

# என் உள்ளக் குமுறலை எவர் அறிவார்..?

**பெண்களின் உள்ளக்குமுறலைக் கொட்டுவதற்கான ஒரு களம் ஈழமுரசில் கண்டேன். இதுவரை காலமும் யாரிடமும் சொல்லாமல் எனக்குள் புதைத்து வைத்திருந்தவற்றை இங்கே சொல்வதில் எனக்கு சிறிது மனப்பாரம் குறைகின்றது.**

எனக்கு பயமாக இருக்கின்றது. நான் விரைவில் இறந்துவிடுவேன் போல உள்ளது. நான் இறந்துவிட்டால் என் பிள்ளைகளின் வாழ்க்கை பாழாகிவிடுமே. என் கணவருக்கு பிள்ளைகளைப்பார்க்கத் தெரியாது. அவரோடு வாழ்ந்த இத்தனை காலங்களில் அவரை நன்றாகவே நான் படித்து வைத்திருக்கிறேன். எடுத்ததற்கெல்லாம் பிள்ளைகளை ஏசுவதுதான் அவருக்குத் தெரிந்த விடயம். பிள்ளைகளின் மனங்களைப் பார்க்கத் தெரிவதில்லை. அன்பாக பக்குவமாக பிள்ளைகளுடன் பேசமாட்டார்.

அவரால்த்தானே நான் இன்று ஓர் நோயாளியாக இருக்கின்றேன். நரம்புத் தளர்ச்சியுள்ளவளாக, எடுத்ததற்லெல்லாம் பயந்தவளாக வாழ்கின்றேன்.

அவர் கஸ்டப்பட்டுத்தான் உழைக்கின்றார். ஆனால் நாளாந்த குடித்தேவைக்கும், புகைத்தலுக்குமே குறிப்பிட்ட பணம் செலவாகின்றது. அதனையிட்டு கவலைப்படவில்லை. ஆனால் இவ்வளவு பணத்தைக்கொடுத்து தன் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதை நினைக்க வேதனையாகவும் பயமாகவும் உள்ளது.

அளவுக்கதிகமான குடியால் ஏற்படப்போகும் நோய்களை நினைக்க நெஞ்சம் நடுங்குகின்றது. புகைத்தலால் உண்டாகும் பாதிப்புக்களை எண்ணி எண்ணி பயப்படுகின்றேன். என் கண்ணால் பல மரணங்களைப்பார்த்துள்ளேன். அந்த மரணங்களுக்கு வேறு நோய்களைக் காரணம் காட்டினாலும், அவர்களின் அளவுக்கு மிஞ்சிய குடிதான் அதற்குக் காரணம் என்பது தான் உண்மை.

என் கணவரின் குடியும் புகைத்தலும் என்னை மெல்ல மெல்ல முடக்குகின்றது. அளவுக்கு மிஞ்சியயோசனையால் மறதி, மிகவும் குறைந்த வேகத்தில் வேலை செய்வது என மிகவும் மந்தப்போக்கில் செயற்படுகின் றேன். தயவு செய்து குடிப்பதைக் குறையுங்கள் என்று கெஞ்சிக்கேட்டால் எனது உடல் நிலையைப்பற்றி எனக்குத் தெரியும், நீ புத்தி சொல்ல வேண்டாம் என அதட்டிப் பேசி அடக்கிவிடுவார்.

உறவினர் நண்பர்களின் பிறந்தநாள், திருமணம் போன்ற விசேட வைபவங்களுக்குச் சென்றால் அங்கு நடக்கும் குடியும் கூத்தும் அவர் இல்லாமல் நடக்காது. அந்தக்கூட்டத்துள் நுழைந்தால்

வழக்கத்தை மிஞ்சிய குடி மட்டுமல்லாமல் தேவையில்லாத கதையெல்லாம் பேசத் தொடங்கி எல்லோரும் வேடிக்கை பார்த்துச் சிரிக்கும் அளவுக்குத் தன்நிலையை ஆக்கிவிடுவார்.

எல்லோருக்கும் முன்னால் அவர் வேடிக்கைப்பொருளாக நிற்கும்போது, எனக்குள் நான் கூனிக்குறுகிப் போய்விடுவேன். ஆனால் எனது வேதனையைப் பற்றி யாருக்கென்ன கவலை. அதனால் என்னை மீறி வெளிப்படத்துடிக்கும் கண்ணீரை அடக்கி இயல்பாக இருக்க முயற்சி செய்வேன்.

நான் மட்டுமல்லாமல் எனது பிள்ளைகளும் மிகவும் கூசிப்போய் நிற்பார்கள். மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டு நின்றாலும்,அவர்களால் அதனுள் ஒன்றித்துப் போகமுடியாமல் தவிப்பார்கள். வீட்டுக்கு வந்தவுடன் அம்மா இனி எங்களை இங்கெல்லாம் கூட்டிப்போகாதீர்கள் எனச் சொல்லி வருந்துவார்கள்.

நாங்கள் வெளியிலை போகும்போது உங்களுக்கென்ன வீட்டிலை வேலை? யாரும் வீட்டிலை நிற்கமுடியாது. எங்களோடு வரவேண்டுமென்றால்




வரவேண்டும் தான், என்று ஏசி பிள்ளைகளையும் எம்முடன் அழைத்து வருவார். அப்பா உங்களாலைதான் எம்மால் வெளியில் வரமுடியவில்லை என்ற சொல்ல பிள்ளைகளுக்கும்

தைரியமில்லை. எனக்கும் சொல்லத் துணிவில்லை. வெளியில் வந்து வீடு திரும்பும் போது இந்த மனநிலையில் தான் வருவோம்.

தமது அப்பாவின் செய்கையால் பிள்ளைகளின் மனங்கள் மெல்ல மெல்ல பாதிக்கப்பட்டுக் கொண்டுவருகின்றன என்பதை உணரும் என்னால் என் வேதனைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த மனப் பாதிப்புகளால்த்தான் படிப்பிலும் அவர்களின் நிலை குறைந்து வருகின்றது என்பது தெரிகின்றது. யாரிடம் இந்த வேதனைகளைப் பகிர்ந்து கொள்ளமுடியும்?

என்னிடம் எதுவும் சொல்லாமலே தனது நண்பர்களை குடும்பத்தோடு வீட்டுக்கு விருந்துக்கு அழைப்பார். அவர்களிடம் சொல்லிவிட்டுத்தான் அவர்களை அழைத்த விபரத்தை எனக்குச் சொல்லுவார். எனது உடல் நிலை சரியில்லை என்றாலும் அதனைச் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் அதனைக்காதிலேயே எடுத்துக் கொள்ளமாட்டார். சமையலில் எந்த உதவியும் செய்யமாட்டார். அவர்கள் வந்தவுடன் ஆண்கள் எல்லோரும் குடியும், பாட்டும், கதையும் என்று தொடங்கிவிடுவார்கள். பிள்ளைகள் ஒருபுறம் விளையாட பெண்கள் ஒரு பக்கம் கதை பேச நேரம் நள்ளிரவைத் தாண்டிவிடும். ஆண்கள் சாப்பிடவரும்போது அவர்களுக்கு பசியுமிருக்காது, தங்கள் நிலையிலும் எவரும் இருக்கமாட்டார்கள். எனது பதினைந்து வருட வாழ்க்கையில் பெரும்பாலான நாட்கள் இப்படிக் கழிபவைதான். எல்லோரும் சென்றபின் பாத்திரங்கள் கழுவிவைத்து நித்திரைக்குச் செல்ல சாமம் இரண்டு மணியாகிவிடும். மறுநாள் அதிகாலையிலே எழுந்து பிள்ளைகளுக்கும் அவருக்கும் சாப்பாடு தயாரித்து வைத்துவிட்டு அவர்கள் பாடசாலைக்கு போவதற்கான உடைகளை எல்லாம் எடுத்து வைத்து விட்டு அவருக்கு உரிய உடுப்புக்கள் உட்பட்ட எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு துப்பரவு வேலைக்கு போய் திரும்பி வந்த பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்து அனுப்பிய பின் கொஞ்சம் நிமிருவேன். நான் வரும்போது அவர் வேலைக்கு போய்விடுவார். மதியச் சமையல் தொடங்கும் முன் வீட்டைத் துப்பரவாக்கி, உடுப்புக்களைத் தோய்க்கப் போட்டு, ஏற்கெனவே தோய்த்த உடைகளை அயன் பண்ணி முடித்துவிடுவேன்.

நான் சமையல் முடிக்கவும் பிள்ளைகள் வரவும் சரியாக இருக்கும். அவர்களுக்கு சாப்பாடு கொடுத்து, அவர்களை பாடசாலை வீட்டு வேலைகளை ஓரிடத்தில் இருந்து செய்யவைப்பதற்கிடையில் நான் படாதபாடுபட வேண்டும். அந்த வேலைகள் செய்ய விட்டுவிட்டு கொஞ்சம் தள்ளிப் போனால் மூன்று பேரும் மாறிமாறிக் கத்துவார்கள். அவர்களின் சண்டைகளைத் தீர்க்க வேண்டும். அவர் வீட்டுக்கு வரவும் நான் அடுத்த துப்பரவு வேலைக்கு போக சரியாக இருக்கும். அந்த வேலை முடிந்து வர இரவு ஏழரை மணியாகிவிடும்.

வீட்டுக்கு வந்தால் அவர் ரிவிக்கு முன்னால் இருப்பார். பிள்ளைகள் தமது அறைக்குள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். என்னைக் கண்டவுடன் ஒவ்வொரு முறைப்பாடுகளுடன் வந்து நிற்பார்கள். அம்மா அப்பா அடித்து விட்டார் என்று மூத்த மகன் சொல்வான். அப்பா ரீ



போட்டுத் தரமாட்டன் என்று சொல்லி விட்டார் என மகள் சொல்லுவாள். தமிழ்ப்பாடத்திலை சந்தேகம் கேட்க அப்பா தலையிலை குட்டிவிட்டார் என்று இளைய மகன் மெல்ல எனக்கருகில் வந்து சிணுங்குவான். இவ்வளவுக்கும் அவர் திரும்பிப்பார்க்க மாட்டார். ரிவிக்கு முன்னால் இருந்து கொண்டே, “அங்கே என்ன சத்தம்? இவ்வளவு நேரமும் பிள்ளைகள் எவ்வளவு அமைதியாய் இருந்தார்கள். நீ வந்தவுடன் தான் இவ்வளவு சத்தம். நீ கொடுக்கிற செல்லம் தான் இதற்குக் காரணம்” என்று கத்துவார்.

நான் அதற்கு ஏதாவது சொன்னால் “மறுத்துக் கதைக்கிறது எனக்குப் பிடிக்காது என்று தெரியும்தானே” என்று கடுமையாகக் கத்துவார் என்று தெரியும். அதனால் எதுவுமே சொல்லாமல் நான் சமையலறைக்குள் போய்விடுவேன். அதன் பின் இரவுச்சமையல் செய்து பிள்ளைகளுக்கு கொடுத்து அவர்களை சிறிது நேரம் ரிவி பார்க்க விட்டு படுக்கைக்கு அனுப்பிவிடுவேன். ஆனால் அவர் குடித்து முடித்து சாப்பிட இரவு 11.00 மணியாகி விடும். அதன் பின் நான் சாப்பிட்டு பாத்திரங்கள் கழுவி வைத்து படுக்கைக்கு போக 12.00 மணியாகிவிடும்.

அவரின் கத்தல்கள், ஏச்சுக்கள் எல்லாவற்றையும் பழக்கப்படுத்தி வாழப்பழகிவிட்டேன். எனக்கென்று எந்த விருப்பங்களும் இல்லை. உடை விடயத்தில்கூட எனது விருப்பப்படி அணிவதில்லை. நான் வேலைக்குப் போவதுகூட அவரின் குடும்பத்தவருக்காகத்தான். ஊரில் எனது அம்மா, அப்பா சகோதரங்கள் கஸ்டப்படுகின்றார்கள். ஆனால் அப்படி அவர்களுக்கு உதவமாட்டேன் என்ற முன் நிபந்தனையுடன்தான் எமது திருமணம் நடந்தது. மூத்த பெண் கரைசேர்ந்தால் போதும் என்ற நிலையில் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டுதான் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். எனக்கென்று தனியாக எந்த விருப்பமுமில்லாமல்த்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எமது பிள்ளைகள் நல்ல நிலைக்கு உயரவேண்டும் என்ற நோக்கம் மட்டும்தான் எனக்குள் நிறைந்து உள்ளது. அவர் என்னதான் என் மனநிலையை உணரவில்லையென்றாலும், அவர் நலமாக நீண்ட காலம் வாழவேண்டும் என்பதுதான் எனது விருப்பம். அவர் ஏசும்போது, மனதை நோகடிக்கும்போது வேதனை தாங்காமல் அழுகின்றேன். ஆனால்,அவருக்கு சிறிது உடல்நலம் சரியில்லையென்றாலும் மனம் தவித்துப்போகின்றேன். அவர் தன் உடல்நலத்தைக் கெடுக்கும்விதத்தில் அதிகமாகக் குடிப்பதும் அதிகமாக சிகரெட் புகைப்பதும் என்னை மிகவும் பாதிக்கின்றது. அவருக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சம் அதிகமாக அதிகமாக நான் ஒரு நோயாளியாக மாறிக் கொண்டு இருக்கின்றேன். ஒவ்வொரு வருத்தத்துக்கும் வைத்தியரிடம் போகும் போதும் அவர் “வருத்தம் உடலில் இல்லையென்றும் மனதில்த்தான்” என்றும் கூறுகின்றார். என்ன செய்வது என்று தெரியவில்லை. எனக்கு ஏதாவது நடந்தால் பிள்ளைகளை பார்க்க அவரால் முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்த் தான் அதிகமாகப் பயப்படுகின்றேன்.

**– கமலி –**
**(யேர்மனி)**

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் 2ம் லெப் மாலதி நினைவு நாளும்




இந்திய இராணுவத்துடன யாழ் கோப்பாய் பகுதியில் இடம் பெற்ற சமரின் போது 2ம் லெப்.மாலதி வீரச்சாவடைந்தார்.தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதன் முதல் வீரச்சாவடைந்த பெண் புலி இவராவார். 1987ம் ஒக்டோபர் 10ம் நாள் வீரச்சாவடைந்த மாலதியின் நினைவு நாள் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகதமிழீழ மெங்கும் கொண்டாடப்படுகிறது. மனித குலத்தின் சரிபாதி சனத்தொகையினை கொண்ட பெண்களின் சமநீதியும், உரிமையும் கேட்கும் புரட்சி நாள்.

தமிழீழப் பெண் விடுதலையினையும் அதன் அவசியத்தினையும் மாலதி நினைவு நாள் குறித்து நிற்கின்றது. பெண்கள் விழிப்புற வேண்டும். எழுச்சி கொள்ள வேண்டும். தமது சொந்த விடுதலைக்காகப் போராடவேண்டும் என்பதனை உணர்த்தி நிற்கின்றது. பழைமை வாதத்திலும், மூட நம்பிக்கையிலும் பிற்போக்குச் சிந்தனையிலும் ஊறிப் போய் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வருகின்ற நிலை மாற வேண்டும்.ஆணாதிக்கம், சீதனப்பிரச்சினை, குடும்பச்சுமைகள் போன்றன பெண்களின் வாழ்க்கையினை சிதைத்து வருகின்றன. இந்தஅவலநிலை மாற வேண்டும்.

காலம் காலமாக அடுப்பங்கரையில் அகப்பையுடன் அடங்கியிருந்த பெண்ணினம் வெளியில் வர வேண்டும். தூங்கிக் கிடக்கும் பெண்ணினம் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளில் விழிப்படைய வேண்டும். 2ம் லெப் மாலதியின் கனவு நிறைவேற வேண்டும். பெண்கள் விடுதலையடைய வேண்டுமானால் எங்கள் மத்தியிலிருக்கும் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப் படவேண்டும். சமூக முரண்பாடுகள் அநீதிகள் நீக்கப்பட வேண்டும். பெண் என்ற பாரபட்சம் அகற்றப்பட வேண்டும்.

பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில் அவர்களது சமூக பொருளாதார வாழ்வு மேம்பட வேண்டியது அவசியம். பெண் விடுதலை என்பது இன்று பல்வேறு முறைகளில் போராடிப் பெற வேண்டிய ஒன்றாக வேமாறி விட்டது. இது காலத்திற்கு காலம்வெவ்வேறு மாற்றங்களுடனும் கோலங்களுடனும் உருவாகின்றது. தமிழர் சமூகத்தில் நிலவி வரும் பெண்கள் மீதான ஒடுக்கு முறையும் நீண்ட காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்து விட்ட மூடநம்பிக்கைகளும் சம்பிரதாயங்களும் தமிழ் பெண்களின் வாழ்க்கையினை சீரழிக்கும் நிலை காணப்படுகின்றது. இந்த முட்டாள் தனமான எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும்.

ஆணாதிக்க அடக்கமுறையில் முதன்மை பெறுவது பாலியல் வன்முறையும், சீதனக் கொடுமையுமாகும். இவற்றால் பெண் இனம் விபரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றது.பெண்கள் இந்த சீரழிவு வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் முதலில் பெண் இனம் தனது இழிவு நிலை பற்றிச் சிந்திக்க வேண்டும். தலை விதி என்றும், கர்ம வினை என்றும் தனக்குத்தானே ஒரு வேலியைப் போட்டுக் கொண்டு இருளில் மூழ்கியிருந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

தமிழர் தாயகத்தில் தமிழீழ மண்ணில் இளம் பெண் புலிகள் மண் விடுதலைக்காகப் போராடுவதுடன், பெண் விடுதலைக்காகவும் போராடுகின்றார்கள். பெண் விடுதலை என்ற அரசியல் குறிக்கோளை அடைவதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் தெளிவான பார்வையில் உள்ளது. அந்த இலக்கைஎட்டிய வண்ணம் உள்ளது.

மண் விடுதலைக்காகப் பெண்களும் போராடுவதால் நிச்சயம் பெண் விடுதலையினையும் வென்றெடுக்க முடியும் தமிழீழ மீட்புப் போரில் தமிழீழ பெண்கள் ஆயுதம் ஏந்தி நிற்பதுடன் உலகமே வியக்குமளவுக்கு அபாரமான அர்ப்பணிப்புக்களையும் சாதனைகளையும் நிகழ்த்தியிருக்கின்றார்கள். இது தமிழீழ பெண் இனத்தின் போராட்ட வரலாற்றின்ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. பல தடைக்கற்களை அகற்றியுள்ளது.

உலகிலே எங்குமே எப்போதுமே பெண்கள் சாதிக்காத சாதனைகளைப் தமிழீழ பெண்கள் சாதித்துள்ளனர். கடற் கரும்புலி கப்டன் அங்கயக்கண்ணி தொடக்கி வைத்த பெண் கரும்புலிகள் சகாப்தத்தை உலகம் மறக்குமா? மட்டு நகரில் தமிழீழம் விடுதலை பெறவேண்டும் என்று உண்ணா நோன்பிருந்து வீரச்சாவடைந்த அன்னை பூபதியைப்போல் உலகில் எங்காவது உள்ளனரா? இல்லையே!

நான்கு சுவரே உலகம் என்று நம்பி நின்ற பெண்களை புதிய உலகம் படைக்க வைத்தவர்கள் தமிழீழ புலிப்படைப் பெண்கள். இல்லத்தரசிகளாய் வீட்டிற்குள் இருந்தவர்களை வீரத்தரசிகளாக்கி போருலகில் வருவதற்கு முதல் வரியாய் முகவரி கொடுத்தாள் 2ம் லெப் மாலதி. பெண் விடுதலைக்கு விலங்கொடித்து முதல் வித்தான விதை. இவள் தமிழீழப் பெண்களுக்கு புது வழிகாட்டி. ஒருசிலருடன் காட்டுப்புற கெரில்லா வாழ்க்கையினை ஆரம்பித்த பெண்புலிகள் இன்று பெரும் படையணியாகி நவீன மரபுவழிச் சமர்களில் பங்கு பற்றி வியத்தகு சாதனைகளைப் படைக்குமளவுக்கு பெண் புலிகள் படைப்பிரிவு படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்திருக்கின்றது.

தமிழீழப் பெண் போராளிகள் போர்க்களத்திலும் ஆயுதக் கலையிலும் பெற்ற அனுபவங்களும், அவர்களுடைய அற்பணிப்பும் இன்று ஆய்வுக்குரிய பரிசோதனைக் களங்களாக மாறியிருக்கின்றன. சமுதாயச் சட்டங்களும், சம்பிரதாயங்களும் பெண்களை அடிமைப்படுத்தும் நிலை மாற வேண்டுமானால் பெண்கள் தம்மைத் தாமே சிறுமைப்படுத்துவதை விட்டொழிக்க வேண்டும்.

ஆணுக்கு பெண் எந்த வகையிலும் சளைத்தவள் அல்ல, ஆனால் எமது பண்பாடு விழுமியங்களில் ஆனைவிட பெண்ணுக்கே இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பழங்கால சமூகக் கோட்பாடுகள் களைக்கப்பட வேண்டும், பெண்களிடமும் எவ்வளவோ திறமைகள் இருக்கின்றன. கடலில் பெண் புலிகள் ஈட்டிய வெற்றிகளும், சாதித்த சாதனைகளும் ஏராளம்.





பெண் போராளிகளின் வியத்தகு சாதனைகளை சிறிலங்காப் படையே பாராட்டும் அவர்கள் துணிகர தாக்குதல்களை நடாத்தியிருக்கின்றார்கள். வெற்றிகளைக்குவிக்கின்றார்கள். தமிழீழப் பெண் புலிகள் படைப் பிரிவுகளில் கேணல் துர்க்கா, கேணல் விதுசா போன்றவர்கள் இன்று வழிகாட்டியாக கடமை புரிகின்றார்கள்.

பெண்புலிகள் இராணுவத்துறை, அரசியல் துறை,புலனாய்வுத்துறை, காவல்துறை, நீதித்துறை, நிதித்துறை என அனைத்துத் துறைகளிலும் வியாபித்து முன்னேறுகின்றனர். வீரத்திலும், தியாகத்திலும் விடுதலையுணர்விலும் தமிழீழ பெண் புலிகள் எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர், புதுமைப் பெண்களை புரட்சிப் பெண்களாக விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக்கியிருக்கின்றது. இவ்புரட்சி கரமான புதுமைப் பெண்கள் மென்மேலும் வளர வேண்டும் ஓரணியில் திரளவேண்டும், போராட்டங்கள் மூலம் பெண்ணினம் விடுதலை பெற வேண்டும்.

தமிழீழத்திற்காகப் போராடும் பெண் புலிகளின் முயற்சியினால் தான் தமிழீழப் பெண்கள் சமூகம் படிப்படியாக விடுதலை பெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழர் தாயகத்தில் விடுதலைப் போர் புயலாக வீசிக் கொண்டிருப்பதால் எமது மண்ணில் காலம் காலமாக நிலைத்திருந்தபழைமை வாத விருட்சங்கள் வேரோடு பிடுங்கியெறியப்பட்டு வருகின்றன. மண்ணின் விடிவுக்காகவும், பெண்ணின் விமோசனத்திற்காக வும் தமிழீழப் பெண்கள் புலிகளாக மாறிப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அகப்பை பிடித்த கரங்கள் இன்று ஆட்டிலறி இயக்குகின்றார்கள். இருட்டு என்றால் வெளியே வராமல் வீட்டுக்குள் அடங்கி விடும் பெண்கள் இன்று காரிருளில் கந்தக வெடி சுமந்து பகைவரைத் தேடித் தனியே செல்கின்றார்கள்.

பெண்கள் கடலுக்குச் செல்லக் கூடாது என்பது தமிழருடைய மூடநம்பிக்கை. ஆனால் இன்று பெண்புலிகள் நடுக்கடலில் பகை கூட்டம் கதி கலங்கி வெற்றி வாகை சூடி வருகின்றார்கள். ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துக் கலைகளிலும் இன்ற வளர்ந்து வருகின்றார்கள். முன்னேறி வருகின்றார்கள். ஆணும், பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும், சமத்துவத்தையும் மதித்து நடக்க வேண்டும். குடும்ப வாழ்வில் பொறுப்புக்களை பகிர்ந்து பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் பற்றுக் கொண்ட வாழ வேண்டும்.

பெண்கள் என்பது ஆணின் மோகப் பொருள் என்ற நிலை முற்றாக வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டும். ஆண், பெண் சரி நிகர் சமத்துவம். ஆண், பெண் அன்புணர்வின் ஆழமான அர்த்தத்தையும் ஆடவரும் புரிந்து வாழ்வதே இல்லறத்திற்குச் சிறப்பு, அதனால் பெண்கள் சம உரிமை பெற்று சமத்துவத்துடன் சகல அடக்கு முறைகளிலிருந்தும் விடுதலையடைவார்கள் என்பது நிச்சயம்.

**– ச.சங்கரன் –**

NALLUR TRADERS
நல்லூர் ரேடர்ஸ்
CASH & CARRY
இலங்கை - இந்திய - மளிகைப் பொருட்கள்
193, Rue Fbg. St. Denis, 75010 Paris
Tél : 01 46 07 68 17
M° - RER : Gare du Nord / La Chapelle
Bus : 350, 302, 65, 48




# அறிஞர் வாழ்வில்

## மைக்கலாஞ்சலோ (கி.பி. 1475-1564)



`ஓவியம், சிற்பம், கட்டிட வடிவமைப்பு, கவிதை ஆகிய நான்கு ஆன்மாக்களைக் கொண்டவர்' என்று வர்ணிக்கப்பட்டவர் மைக்கலாஞ்சலோ. இத்தாலிய மறுமலர்ச்சித் தோட்டத்தில் பூத்த கவின்மிகு மலர் அவர்.

தன் தூரிகையைக் கையாண்ட இலாவகத்துடனேயே பேனாவையும் கையாண்டவர். `நான் எப்போதும் கற்றுக்கொண்டே இருக்கிறேன்' என்று தன்னடக்கத்துடன் சொல்லிக் கொண்டவர். ரோம் நகரில் சிஸ்டின் தேவாலயத்தில் உள்ள மைக்கலாஞ்சலோவின் ஓவியங்கள் உலகின் கவனத்தைக் கவர்ந்தவை. பிரம்மாண்டமான மனித வடிவங்களில் பைபிள் தத்துவங்களை வெளிப்படுத்தும் வியப்புக்குரிய ஓவியங்கள் அவை. பைட்டா, டேவிட், மோசஸ், ஹிரோயிக் கேப்டிவ், டையிங் கேப்டிவ் போன்றவை மைக்கலாஞ்சலோவின் மகத்தான சிற்பங்கள். இவற்றில் முகத்தில் கவலையுடன் கூடிய அன்னை மேரியின் கரங்களில் இயேசுவின் உடல் இருப்பது மாதிரியானது பைட்டா சிற்பம்.

புனித பீட்டர் தேவாலயம். சர்ச் ஆஃப் சான்டா மரியா, மெடிஸியில் லவ்ரேஷியன் லைப்ரரி ஆகியவை மைக்கலாஞ்சலோ என்ற கட்டிடக் கலை நிபுணரின் நிறமையை அடையாளம் காட்டிக்கொண்டிருப்பவை.

நண்பர் ஒருமுறை கேட்டார்: `ஏன் நீங்கள் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை?'

அதற்கு மைக்கலாஞ்சலோ சொன்ன பதில், `இந்த என்னுடைய கலையிலேயே நான் ஒரு மனைவியைக் காண்கிறேன். என்னை எப்போதும் போராடிக்கொண்டே இருக்கச் செய்கிறாள் `அவள்' நான் எனக்குப் பின்னால் விட்டுச் செல்லும் என் படைப்புகளே என் குழந்தைகள்.'

ஓவியம், சிற்பம் -இந்த இரண்டு கலைத் துறைகளிலும் மைக்கலாஞ்சலோவைப் போல சாதனையின் சிகரங்களை வேறு யாரும் தொட்டதில்லை. மனித மனதின் மென்மையான உணர்வுகளுக்கு கவிதை வடிவம் தந்து, படிப்பவர்களை மகிழ்வித்தார்.

அழகிய எதுவுமே மனிதனின் நியாயமான ஆசைகளை பூமியில் இருந்து இறைவன் அளவுக்கு உயர்த்துவதாக அவர் மனதார நம்பினார். அவரது படைப்புகள் அந்த நம்பிக்கையின் சான்றுகள்.

# கதை முற்றம்

## குருவி மற்றும் குரங்கின் கதை

ஓர் உயரமான `வன்னி' மரத்தில் இரண்டு குருவிகள் கூடுகட்டி வாழ்ந்தன. பெண்



குருவி அக்கூட்டில் முட்டைகள் இட்டு அவற்றை அடைகாத்து வந்தது.

ஒருநாள் பலத்த மழை பெய்யத்தொடங்கியது. பெண் குருவி தன்மீது மழைநீர்



படாமல், கதகதப்பாக தனது கூட்டினுள் இருந்துகொண்டிருந்தது. அப்போது எங்கிருந்தோ குரங்கு ஒன்று ஓடி வந்து மழைக்காக அந்த மரத்தின் கீழ் ஒதுங்கியது. பலத்த காற்று வீசியதால் அதன் உடல் குளிரால் நடுங்கியது. பற்கள் கடகட வென்று அடித்துக் கொண்டன.

குரங்கின் இந்தப் பரிதாப நிலையைக் கண்ட பெண் குருவி அதனிடம், `உனக்கு மனிதனைப்போல் கைகளும், கால்களும் இருக்கின்றன. நீ ஏன் அவற்றைப் பயன்படுத்தி உனக்குப் பாதுகாப்பான ஒரு வீடு கட்டிக்கொள்ளக் கூடாது? அப்போது நீ சுகமாக இருக்கலாம் இல்லையா? என்று கேட்டது.

அதைக் கேட்டு குரங்கிங்கு ஆத்திரம் தலைக்கேறியது.

`வாயை மூடு!' என்று கத்தியது.

`நான் எதுவும் கேட்காதபோது, இந்த அற்பக் குருவி என்ன தைரியமிருந்தால் எனக்கு புத்திமதி கூறும்?' என்று குரங்கு நினைத்தது. அது ஒருகணம் கூட தாமதிக்காமல் மரத்தின் மீதேறி குருவிக்கூட்டைப்பிய்த்தெறிந்தது.

தேவையில்லாதவனுக்கு அறிவுரை கூறக்கூடாது என்று குருவி அப்போது பாடம் கற்றுக்கொண்டது.



# தகவல் முற்றம்

## வெள்ளை மாளிகை



அமெரிக்க ஜனாதிபதியின் அரசாங்க மாளிகையான வெள்ளை மாளிகை வொஷிங்டன் நகரில் அமைந்துள்ளது. இந்த மாளிகை கட்டப்பட்டபோது இது வெள்ளையாக இருக்கவில்லை. வெள்ளை மாளிகை என்று அழைக்கப்படவுமில்லை. இந்த மாளிகையின் வரைபடத்தைத் தயாரித்தவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கட்டிடக்கலை வல்லுனரான `ஜேம்ஸ் ஹே பான்' என்பவர். இம்மாளிகைக்கான அடிக்கல் 1792ம் ஆண்டு ஒக்டோபர் 13ம் திகதி நாட்டப்பட்டு 1800ம் ஆண்டு பூர்த்தியடைந்தது. இந்த மாளிகையை முதலில் சாம்பல் நிறக் கற்களால் கட்டினார்கள். அன்றிலிருந்து இந்த மாளிகைதான் அமெரிக்க ஜனாதிபதியின் அரசாங்க மாளிகையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

போர்க்காலத்தில், 1814ம் ஆண்டு ஓகஸ்ட் 24ம் திகதி பிரிட்டிஷ் துருப்புகள் இம்மாளிகைக்குத் தீ வைத்தபோது இம்மாளிகையின் ஒரு பகுதி மாத்திரமே தீக்கிரையாகாமல் எஞ்சியது.

மீண்டும் ஜேம்ஸ் ஹேபனின் மேற்பார்வையில் கட்டிடவேலைகள் தொடங்கி 1817 இல் பூர்த்தியாயிற்று. தீ எரித்த அடையாளங்களை மறைக்கும் நோக்குடன் பளபளவென்ற வெள்ளைப் `பெயின்ற்' அடித்தனர். ஆகவே இது வெள்ளை மாளிகை ஆயிற்று. ஆனாலும் 1912ல் ஜனாதிபதி `தியோடோர் ரூஸ்வெல்ட்' `வைற் ஹவுஸ்' என்று பெயர் சூட்டிய பின்னர்தான் அதிகாரபூர்வமாக இப்பெயர் வழங்கலாயிற்று.

வெள்ளை மாளிகை 100 அறைகளைக்கொண்ட 3 மாடிக் கட்டிடம் ஆகும்.ஒவ்வொரு அறையும் தனித்தனி நிறப்பூச்சுடன் திகழ்கிறது. நீள்வட்ட வடிவமான நீல அறை ஜனாதிபதி மற்றும் அவரது துணைவியாரின்வரவேற்பு அறையாகப் பயன்படுகிறது. மேல் மாடியில் உள்ள இளஞ்சிவப்பு நிற அறையில்தான் ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் வாழ்கின்றனர்.

-பிரான்ஸ்-

# பழமொழி முற்றம்

*பொன், பெண், ஆடை இவைகளைப் பகல் வெளிச்சத்தில் தேர்ந்தெடு.
*நட்சத்திரங்கள் கூச்சல் இடுவதில்லை.
*நண்பன் இல்லாதபோது உன் கைத்தடியுடன் கலந்து ஆலோசனை செய்.
*நீ உன் தாய்க்குக் கீழ்ப்படியாவிட்டால், உன் மாற்றாந் தாய்க்குக் கீழ்ப்படிவாய்.
*நெருப்பு நெருப்பை அணைக்காது.
*மிகப் பெரிய உதவியும் உதவியே. மிகச் சிறிய உதவியும் உதவியே.
*நீதிபதியை விட காலம்தான் உண்மையை வெளிக்கொணர்கிறது.
*நாணச் சிவப்பு நல்ல குணங்களின் வண்ணம்.
*ஆந்தைகூட தன் குஞ்சைப் பருந்தாகத்தான் எண்ணுகிறது.
*ஒவ்வொருவரும் தங்களை அறிவாளி என்று எண்ணிக்கொள்கிறார்கள். அதனால்தான் மிகப்பலர் முட்டாள்களாக இருக்கிறார்கள்.
*அறிவாளி பொன்னான நாட்களையே கணக்கிடுகிறான்.
*ஆண்டவன் ஒரு கையால் நம்மை அடிக்கிறான். மற்ற கரங்களால் அணைக்கிறான்.
*செத்த சிங்கத்தை கழுதைகூட உதைக்கும்.
*உன் கௌரவம் உனது நாக்கின் நுனியில் உள்ளது.

# கவிதை முற்றம்

## விந்தை



வெள்ளைப் பூவே, வெள்ளைப் –
பூவே
எப்படி விரிகிறாய்?
என்னைப் போல நீயும் சிரிக்க
எப்படிக் கற்றாயோ?

சின்னக் குருவி, சின்னக் குருவி
எப்படிப் பறக்கின்றாய்?
உன்னைப் போல நானும் பறக்க
உபாயம் சொல்வாயோ?

பூனைக்குட்டி, பூனைக்குட்டி
எப்படிப் பாய்கின்றாய்
காலைத் தூக்கி நானும் பாயக்
கற்றுத் தருவாயோ?

ஆமைத் தம்பி, ஆமைத் தம்பி
எப்படி நீந்துகிறாய்?
நீருக்குள்ளே மூச்சை நிறுத்தும்
நிலையை விளக்காயோ?

சாமியாரே சாமியாரே
எங்கே அலைகின்றீர்?
சாமிப் பெரியோன் உனக்குள்
இருப்பதை
காட்டித் தரவோ நான்?

– மு.போ.

# விடுகதை முற்றம்

**கடந்தவார விடைகள்**

1. நெல்லிக்காய்.
2. கண்கள்.
3. அதன் தலையில்.
4. நெல்.
5. வருடம், மாதம், நாள்.
6. வாழை.
7. முதலை, உடும்பு, பல்லி.
8. புத்தகம்.
9. தோணி.
10. மூச்சுக்காற்று

Chien dog perro

| | | |
|---|---|---|
| chien | = | french |
| dog | = | english |
| perro | = | spagnol |
| hund | = | dutch |
| cão | = | portugal |
| cane | = | italian |
| balla | = | singalam |

வன்வாழ்வில் இணைந்த உறவால் வனத்தைவிட்டு மனிதனுடன் அண்டி வாழும் உயிரினத்தில் நாய் முக்கியமானது. நாய் என்ற பெயர்ச்சொல் எப்படி வந்ததென்பது எனக்குத் தெரியாது. ஆனால் இதில் இடம் பெற்றுள்ள முதல் எழுத்தை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. ஆம் 'நா' இந்த 'நா'வைப் பற்றிய விபரணம் இங்கே தேவையில்லை. 'ஆறாதே நாவினால் சுட்ட வடு...' என்றார்

# நாய்களும்

திருவள்ளுவர். நரம்பில்லா அவையம், சுவையை இனங்காணும் தன்மையைக் கொண்டிருந்த போதும் ஒலி எழும்பலைத் தரும் பண்பிலேயே அதிகம் பிரசன்னமாகியது.

'குரைக்கிற நாய் கடிக்காது'

'நாய்படாப் பட்ட வாழ்வாய்ப் போய்ச்சு'

'நாய் வாலை நிமிர்த்த முடியாது'

'நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத்தண்ணி' இப்படியாகப் பல முதுமொழி வாக்கியங்களை பல்வேறு மொழிகளிலும் கொண்டது நாயின் இருப்பு. உவமைக் கதைகளிலும் நாய் தாராளமாகவே இடம்பெற்றிருக்கிறது.

'உஞ்சு' என எம்மால் அழைக்கப்படும் பொதுச் விழிப்புச்சொல் நம் மண்ணின் தனித்தன்மையைக் காட்டும். இந்த 'உஞ்சு' என் வாழ்வில் ஒரு சுவை அனுபவத்தைத் தந்திருக்கிறது.



நான் கலியாணம் செய்த வருடம், கொழும்பின் புறநகர் தெகிவளையில் எங்களைப் போல் திருமணம் புரிந்த இளம் தம்பதியுடன் தங்கியிருந்தோம். பொழுது போக்காக கரம் விளையாட்டு அமைந்திருந்தது. நண்பனின் மனைவியின் தம்பியும் எங்களுடன் தங்கியிருந்து படித்துவந்தான். கரம் விளையாட்டில் ஒரு கை குறையும் போதெல்லாம் அவன்தான் சுண்டுவான். இரு தம்பதியினருக்குள்ளான அழைப்புச் சொல் அவனுக்குக் குழப்பமாக இருந்திருக்கிறது. ஒரு நாள் கேட்டேவிட்டான், 'என்ன நீங்கள் உஞ்சு.. உஞ்சு...' என அழைத்துக் கொண்டிருக்கிறீர்கள், திகைத்தோம்... பின் சுதாகரித்தவாறு நமட்டுச் சிரிப்போடு விளக்கமளித்தோம் 'தம்பி அது உஞ்சு அல்ல குஞ்சு என்று.' உஞ்சையும், குஞ்சையும் அவன் ஒரே மாதிரி எவ்விதம் யதார்த்தமாகப் பார்த்திருக்கிறான் என்பதை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகிறது, அந்த வேளையில் நாளாந்த அழைப்புச் சொல்லாகத் திகழ்ந்த அந்த 'குஞ்சு' இப்போது மெல் மெல்ல அருகி எப்போதாவது புல்லரிப்புக்காகப் பயன்படுவது வேறுகதை.

வீமன், அர்ச்சுனன், அன்ரன், றெக்சி, றோய், பப்பி, சிங்கன், ரைகர்... இவ்வாறு பல பெயர்களை நாம் அதற்கு இட்டு அழைத்திருக்கிறோம். நம்மூர் நாய் என்றவுடன் 'அடீக்' என்ற சொல் ஞாபகத்துக்கு வராமல்விடாது.

ஊர் நாய்களில் எத்தனை வகையிருந்தாலும் பொதுப் பெயர் பறைநாய்தான். இந்தப் பெயர் ஏன் வந்ததென்பது எனக்கு இன்றுவரை தெரியாது.

நம்மவருக்குள் சாதி, ஊர், வட்டாரப் பிரிவுகளாகக் கூறுகண்டது மாதிரி நாய்களுக்கும் இருந்திருக்குமோ தெரியாது. ஆனால் ஒருவரது வட்டாரத்தில் வேறு நாய்கள் வரவே முடியாது. தப்பித்தவறி வேறு நாய் வந்ததென்றால் வாலை மடக்கிக் கொண்டு அரக்கப் பரக்க விழித்துக் கொண்டே செல்ல... ஊர் நாய்கள் முழுவதும் கூடி நின்று முழங்கி விரட்டும் காட்சியை நம்மில் பலரும் பார்த்திருப்போம். வேட்டை நாய், கடிநாய், ஊர் நாய் என சிறுபிரிவுகள் பற்றியே நாம் அறிந்திருந்தோம். அந்நியத்திலிருந்து வந்த அல்செசன், பொமேனியன், கட்டைநாய், புல் டோக்... என்பவை வசதிபடைத்தவர்கள் மூலமும், கனவுலகக் காட்சிகள் மூலமும் வந்தேறின. இவை பற்றிய கதைகளை வாயைப் பிளந்தவாறு கேட்டதை என்னால் மறக்கவே முடியாது. இவ்வகை நாய்களும்தான் எமக்குள் ஐரோப்பியக் கனவை விதைத்தன என்றால் சிலருக்கு வியப்பாக இருக்கலாம்.

எழுபதுகளின் தொடக்கத்தில் நான் மகாஜனாக் கல்லூரி விடுதியில் தங்கிப் படித்த காலத்திற்தான், அல்சேசனை முழுமையாகக் கண்டிருந்தேன். எமது விடுதிப் பொறுப்பாளரது செல்லப் பிராணி அது. அவருக்கு பிள்ளைகள் இல்லாத குறையை அதுதான் போக்கியது என்பார்கள். ஆனால் அது கடித்து அவர் மரித்ததால் எனக்கு ஏற்பட்ட தாக்கம் இன்று வரை தொடர்கிறது. அவருக்கு சலரோகம் இருந்ததால் புண் மாறாமல் அவர் இறந்ததாக அப்போது சிலர் சொன்னாலும் நான் சமாதானமாகவில்லை. அப்போதிருந்தே அல்சேசன் எனக்கு அந்நியமாகிவிட்டது.

'சிறிமா' என்ற பெயரில் என் வீட்டில் ஒரு பெண் நாய் எழுபதுகளின் கடைசியில் இருந்தது. இந்தப் பெயர்த் தெரிவு எனது அப்பாவுடையது. அது கட்டை நாய். இதனுடன் கலப்பு செய்து பிறக்கும் குட்டிகளுக்கு எப்போதுமே பெரிய வரவேற்பு. அப்பாவின் இந்தப் பெயர்த் தெரிவு என்னை இன்று வரை ஆச்சரியமூட்டத் தவறுவதில்லை. நாங்கள் வைத்திருந்த 'அன்ரன்' என்ற நாயை அப்பாவின் நண்பர் விரும்பிக் கேட்டதால் அப்பாவும் கொடுத்து விட்டிருந்தார். சுமார் மூன்று வருடங்களின் பின் ஒருநாள் அது தானாக எம் வீட்டுக்குத் திரும்பிவிட்டிருந்தது. எங்களுக்கு அது ஏன் எனப் புரியவில்லை. உரியவருக்கு தகவல் சொல்லி அனுப்பப்பட்டது. ஆனால்

# நாங்களும்

அடுத்த நாள் அது இறந்துபோனது. இந்தப் புதிரை இன்றும் என்னால் அவிழ்க்க முடியவில்லை.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் தீவகத்தில் ஏற்பட்ட படை நகர்வு எங்களது குடும்பத்தை முதற்தடவையாக மண்ணைவிட்டு வெளியேற்றியது. இது தற்காலிகமானதென்றே அப்பா நினைத்திருக்கக்கூடும். வழமையாக அப்பாவுடன் செல்லும் 'வீமன்' அன்று செல்லவில்லை. பக்கத்து வீட்டு பெரியதம்பி ஐயாவும், அம்மாவும் வயதான தங்களை சிறீலங்கா நேவிக்காரரனால் என்னதான் செய்யமுடியும்? என்ற நம்பிக்கையில் வெளியேற மறுத்து விட்டனர். அடுத்த நாள், கட்டிய மாட்டை அவிழ்த்தாவது விடவேண்டும் என்ற மனவுந்துதலால் தங்கையின் மறுப்பையும் உதாசீனப்படுத்திப் புறப்பட்ட அப்பாவுக்குத் துணையாகச் சென்றவர் சபா மாஸ்டர்தான். வெறிச்சோடிக்கிடந்த கிராமத்தினூாக வீட்டுக்கு வந்தபோது உற்சாக வரவேற்பைக் கொடுத்தது வீமன்தான். ஒருநாள் உணவும் இல்லாமல் அதனால் எப்படி, ஏன், எதற்காக எமது வீட்டை காவல் செய்ய முடிந்தது.

மாட்டை அவிழ்த்து விட்ட அப்பா, மீண்டும் ஊரைவிட்டுக் கிளம்ப வீமனை அழைத்தபோது அது மூர்க்கமாக மறுக்கிறது. அப்பாவையும் போகவிடவில்லை. பக்கத்து வீட்டைப்பார்த்து குரைக்கிறது. வழமைக்கு மாறான அதனது செய்கையின் மொழி அப்பாவுக்குப் புரிந்திருக்கவேண்டும். பக்கத்து வீட்டு ஐயாவை விழிக்கிறார். எந்த அசமந்தத்தையும் காணோம்.

ஒருவேளை இவர்களும் வெளியேறியிருக்கலாம் என சபா மாஸ்டர் சொன்ன ஊகம் சரியெனப்பட்டதால் மேலும் விசாரிக்காமல் அப்பா புறப்பட முனைந்தபோது வீமன் விடவில்லை. வேட்டியை பிடித்து இழுக்கத் தொடங்கியது. என்னவோ நடந்து விட்டது என்பதைப் புரிந்த அப்பாவும், சபா மாஸ்டரும் பக்கத்து வீட்டினுள் நுழைகின்றனர். வீடு திறந்தபடி இருந்தது. ஆள் அரவம் ஏதுமில்லை. பலவித மனக்கிலேசத்துடன் அங்குமிங்கும் சென்றவாறு அழைக்கிறார்கள். நாயைப் பார்க்கிறார்கள் அது வாலை மடித்தவாறு வீட்டுப் பின் பக்கம் நோக்கிச் செல்வதும் வருவதுமாக இருக்கிறது.

மன இறுக்கத்துடன் இருவரும் மலகூடம் நோக்கிச் செல்கிறார்கள். தூரத்தில் பெரியம்மாவின் சேலைத்துணி மலகூடத்தின் நிலவறை மூடியில் தொங்கியிருப்பதைக் கண்டு பதைபதைப்புடன் நெருங்கினார்கள். கொங்கிறீற் மூடி திறபட்டதாலான மணம் குமட்டியெடுக்க மூக்கைத் துவாயால் மூடியவாறு கிடைத்த பெருந்தடியின் உதவியுடன் விலக்கிப் பார்க்கிறார்கள். பெரிய்யாவும் கூடவே அம்மாவும் மலக்குழியில்...!

ஊரில் ஆளில்லாத சுமையுடன் இருவரும் பெரியய்யா, அம்மாவின் கடைசிப்பணியை முடித்த பின் நாயுடன் திரும்பிய கதையை அப்பா அடிக்கடி நினைவுகூறுவார். இந்தச் சம்பவத்தை அடியொட்டி இளையவன் ஒரு சிறுகதையை எழுதியிருந்தார்.

நான் ஐரோப்பாவுக்கு வந்த பின்தான் வகை வகையான நாய்களைப் பார்த்தேன். பூனை மாதிரி, முயல் மாதிரி, பன்றி மாதிரி... என்ன மாதிரியிலும் படைக்கும் தன்மையை உயிரியல் விஞ்ஞானம் தந்துவிட்டதல்லவா. பரிசோதனை முயற்சிகள் முதலில் விலங்கினத்திலும் பின் வில்லங்கமில்லாத விலங்குகளிலும்தானே செய்வது வழக்கம். நாயை ஒத்த ஓநாய்கள் பற்றிய அறிதலும் விரிவாக இங்கேதான் எனக்குக் கிடைத்தது.

பாரீஸ் என்றதும் முதலில் நினைவில் தட்டுவது ஈபிள் கோபுரம் என்பார்கள். அடுத்தது.... வாசனைத் திரவியங்கள், வைன், பைக்கத் (தடிபோன்ற பாண்), குறோசான் (காலை உணவுக்காகத் தயாரிக்கப்படும் உள்ளே ஏதுமில்லாத குண்டுப் பணிஸ்)... என்றவாறு அடுக்கலாம்.

ஆனால் நான் அடித்துச் சொல்லுவேன் 'நாய்ப் பீ'!! அண்ணாந்து பார்த்த காலத்தை நாமெல்லோரும் இழந்துவிட்டிருக்கிறோம். கவனத்தோடு நடக்க வேண்டுமென்றால் குனிந்த தலை நிமிரக் கூடாது. தவறினால் 'சதக்' பிறகென்ன சீச்...சீ... அருவெருப்புடன் சப்பாத்தைத் தேய்க்க வேண்டியதுதான். ஆனால் உணர்வு சப்பாத்தைத் துளைத்தவாறு உள்ளங்காலால் உச்சிக்குச் சென்றுவிடும். இந்த நாய்க் 'கக்கா' பற்றிய செய்திகளும், விவாதங்களும் மிக மிக நீண்ட தொடர் கதைகள். 'கக்கா' என்ற சொல் எம்மவருக்குப் புதியதல்ல. போர்த்துக்கேயரின் கடந்தகால காலனி இருப்பின் சுவடாக எம்மவர் தலைக்குள் ஏறிய சொல்.

நான் இவ்விடம் வந்தபோது எனக்குக் கிடைத்த முதல் வேலை பூனை பராமரிப்பு. அந்தச் சீமாட்டி வளர்த்த மூன்று பூனைகளைப் பராமரிப்பதுவே எனது வேலை. இதற்குக் கூட நேர்காணல் செய்துதான் தெரிவாக்கப்பட்டிருந்தேன். பூனை என்னை ஏற்றுக் கொண்டதாலேயே



எனக்கு அந்த வேலை கிடைத்தது. பூனை பற்றி ஏதாகிலும் அறிந்துள்ளீரா? என வினவினார் சீமாட்டி. 'ஓ !! எனக்கு நல்ல பழக்கம். எனது வீட்டில் புனைகளும், நாய்களும் இருந்தன.' எனது பதில் அவருக்குத் திருப்தியைத் தராவிட்டாலும் எனக்கான வேலை உறுதியானது.

வேலைக்கு அழைத்துச் சென்ற நண்பன் என்னைச் செல்லமாகக் கடிந்து கொண்டான். 'மூன்றாம் உலகிலிருந்து வந்த நாம் இவற்றை அறிந்துள்ளோம் எனச் சொன்னால் இவர்களுக்குப் பிடிக்காது. இவர்களுக்கான பெருமதிப்புக்குரிய தன்மையே இவ்வகை விலங்குகளை வளர்ப்பதுதானே! எங்களை மாதிரி பிச்சக்காறரெல்லாம் இதை வளர்த்தால்...?' நண்பனின் அறிவுரை என் உச்சியில் ஓங்கிக் குட்டிய இடம் வீங்கிக் கண்டியுள்ளதாக நினைவு.

ஆயினும், இவர்கள் மூலம் விலங்கின உளவியலின்படி பலவிபரங்களை அறிய முடிந்தது. புத்தகங்களாகச் சேகரித்து வைத்துள்ளார்கள். அவர்கள் சொன்னபடி சிலரைக் கண்டால் பூனை ஓடி ஒளிப்பதையும் கண்டு வியந்திருக்கிறேன்.

"இவ்வளவு பூனை வளர்க்கின்றீர்களே ஏன் நாய் வளர்க்கவில்லை?" என ஒருநாள் நான் கேட்டேன். பூனை துப்பரவானது. பிரச்சனைகள் குறைவு. ஆனால் நாய்களால் தொல்லை அதிகம். சற்றே பிந்தி வந்தால் கூட வீட்டை அசிங்கப்படுத்திவிடும். இருக்கிற வேலையை அதிகப்படுத்திவிடும். நான் எதுவுமே பேசவில்லை.

எங்களது வீட்டு நாய்கள் பாம்பு பிடித்த சம்பவங்களை கதையாக என் பிள்ளைகளுக்கு சொல்லும்போது எவ்வளவு ஆர்வமாகக் கேட்கிறார்கள். எங்கள் வீமன் பாம்பிலிருந்து எத்தனை தடவை காப்பாற்றியிருக்கிறது. கீரி பாம்பைப் பிடித்ததை நான் பார்க்கவில்லை. ஆனால் எங்கள் நாய் பாம்பைப் பிடித்த காட்சி என் மனதில் பசுமையாக இருக்கிறது. சும்மா பாம்பில்லை. நாக பாம்பு அதன் துள்ளலும் மூர்க்கமான கண்களும் பாம்பைக் கௌவியபின் அங்குமிங்கும் ஆட்டிவிட்டு கிடாசி எறியும். யாருமே கிட்டே போக முடியாது. பாம்பு செத்த பின்தான் சாதுவாகும். இதன் பின் பார்த்தால், இந்த நாயா இப்படியான வீரத்தைக் காட்டியது? ஆச்சரியமாக இருக்கும்.

யுத்த பூமியான பின்பு ஆயுதங்களுடனான பயணங்கள் தொடங்கியபின், நம்மூர் நாய்களின் சேவைகளை கல்வெட்டாகத்தான் பொறிக்க வேண்டும். இந்தியப் படையின் மறைவும் தேடலாகட்டும், சிறீலங்கா இராணுவ நகர்வாகட்டும் முதலில் இனங்காட்டியவை இவைதான். இவை குரைக்கும் திசைகளுக்கு எதிர்த் திசைகளில் நகரும் எமது மறைவுகள். ஏன் இவை எம்மைப் பார்த்துக் குரைக்கவில்லை ?

நம்மண்ணின் நேசிப்பில் அதிக பற்றைக் கொண்ட விலங்கு நம் நாய்தான். விடுதலைப் போரின் வெற்றி நினைவாக ஒரு நாட்டில் நாய்க்குச் சிலை வைத்துள்ளதாக நண்பன் சொன்னான். நாங்கள் காத்தல் கடவுளான வைரவருடன் நாயையும் வைத்துள்ள பாரம்பரியமுடையவர்கள்.

அண்மையில் தாயக மண்ணைத் தரிசித்து வந்த நண்பனும் கவிஞனுமாகிய சுபாஸ் நினைவு கூர்ந்த விடயமொன்று ஞாபகப் பொறியிலிருந்து...



இராணுவக் காப்பரண்களிலும் வீட்டுச் சுவர்களிலும்
சிங்கள இராணுவத்தினர் கரிக்கட்டிகொண்டு
கவிதைகள் எழுதியிருக்கிறார்கள்.
ஏராளமான கவிதைகள் காணப்படுகின்றன
அவற்றில் ஒன்று பின் வரும் பொருளில்
எழுதப்பட்டிருக்கிறது.
'வட பகுதியில் இராணுவமாக நின்று கடமை புரிவதிலும் பார்க்க
தாயகத்தில் நாயாகப் பிறந்து வீட்டைக் காத்திருக்கலாம்'
ஐரோப்பிய- அமெரிக்க- அவுஸ்திரேலியப் புலப்பெயர்விலுள்ள எமக்கு,
குற்றவுணர்வுடன் நான்,
நாங்கள் ?.

– முகிலன்

# தமிழக அரசின் திரைப்பட விருது

கடந்த மூன்று ஆண்டுகளாக அறிவிக்காமல் இடைநிறுத்தி வைத்திருந்த தமிழக அரசு திரைப்பட விருதுகள் இவ்வருடம் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ் விருதுகளுக்கான பட்டியலை தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டு வைத்தார். 2000, 2001, 2002ம் ஆண்டுகளுக்கான விருதுகள் ஒரே பார்வையில்...

## 2000ம் ஆண்டு

1வது சிறந்த படம் – வானத்தைபோல
2வது சிறந்த படம் – வானவில்
3வது சிறந்த படம் – வெற்றிக்கொடி கட்டு

2000–ம் ஆண்டு விருது



முரளி தேவயானி ஜெயராம் விக்ரமன்

சிறந்தபடம் (சிறப்புப்பரிசு) – பாரதி
பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் (சிறப்பு பரிசு) – இனிய உதயம்.
அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதி பலிக்கின்ற திரைப்படம் – பட்ஜெட் பத்மநாபன்.
சிறந்த நடிகர் – முரளி (கடல் பூக்கள்)
சிறந்த நடிகை – தேவயானி (பாரதி)
சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) ஜெயராம் (தெனாலி)
சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) – ஷாலினி (அலை பாயுதே)
சிறந்த வில்லன் நடிகர் – பிரகாஷ்ராஜ் (வானவில், அப்பு)
சிறந்த நகைச்சுவை நடிகர் – வடிவேலு (வெற்றிக்கொடிகட்டு)
சிறந்த இயக்குநர் – விக்ரமன் (வானத்தைப் போல)
சிறந்த கதாசிரியர் – மனோஜ் குமார் (வானவில்)
சிறந்த உரையாடலாசிரியர் – சேரன் (வெற்றிக்கொடிகட்டு)
சிறந்த இசையமைப்பாளர் – தேவா (குஷி, உயிரிலே கலந்தது, சந்தித்த வேளை)
சிறந்த பாடலாசிரியர் – தாமரை (தெனாலி)

சிறந்த பின்னணிப்பாடகர் –ஹரிஷ் ராகவேந்திரா (பாரதி)
சிறந்த பின்னணிப் பாடகி – பவதாரணி (பாரதி)
சிறந்த ஒளிப்பதிவாளர் –ஆனந்தகுட்டன் (கண்ணுக்குள் நிலவு)
சிறந்த ஒலிப்பதிவாளர் – சிவக்குமார் (ரிதம்)

## 2001ம் ஆண்டு

1வது சிறந்த படம் – விரும்புகிறேன்
2வது சிறந்த படம் – பாண்டவர் பூமி
3வது சிறந்த படம் – ஆனந்தம்

2002–ம் ஆண்டு



மாதவன் மீனா பிரபு மணிரத்னம்

சிறந்த படம் (சிறப்பு பரிசு) – நந்தா
பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் (சிறப்புப் பரிசு) – ஜமிலா
அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம் – சொன்னால்தான் காதலா
சிறந்த நடிகர் – சூர்யா (நந்தா)
சிறந்த நடிகை – சினேகா (விரும்புகிறேன், ஆனந்தம், புன்னகைதேசம்)
சிறந்த நடிகர் (சிறப்பு பரிசு) – அஜீத் (பூவெல்லாம் உன் வாசம்)
சிறந்த நடிகை (சிறப்பு பரிசு)–சுவலெட்சுமி (ஜமீலா)
சிறந்த வில்லன் நடிகர் – அலெக்ஸ் (மிட்டா மிராசு)
சிறந்த நகைச்சுவை நடிகர் – வடிவேல் (தவசி)
சிறந்த இயக்குநர் – சுசி கணேசன் (விரும்புகிறேன்)
சிறந்த கதாசிரியர் – சாரா அபுபக்கர் (ஜமீலா)
சிறந்த இசையமைப்பாளர் – வித்யாசாகர் (தில், தவசி, பூவெல்லாம் உன் வாசம்)
சிறந்த பாடலாசிரியர் – சினேகன் (பாண்டவர் பூமி)
சிறந்த பின்னணிப் பாடகர் – உன்னி கிருஷ்ணன் (தில்)
சிறந்த பின்னணிப் பாடகி – சுஜாதா (தில்)
சிறந்த ஒளிப்பதிவாளர் – ரத்னவேலு (நந்தா)
சிறந்த ஒலிப்பதிவாளர் – சத்யா (சாக்லெட்)
2001ம் ஆண்டு முதல் முறையாக சிறந்த குணசித்திர நடிகர்–நடிகை மற்றும் சிறந்த நகைச்சுவை நடிகைக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
சிறந்த குணசித்திர நடிகர் – ராஜ்கிரண் (பாண்டவர் பூமி, நந்தா)
சிறந்த குணசித்திர நடிகை – ஈஸ்வரி ராவ் (விரும்புகிறேன்)
சிறந்த நகைச்சுவை நடிகை – கோவை சரளா (பூவெல்லாம் உன் வாசம்)

## 2002ம் ஆண்டு

1வது சிறந்த படம் – ரமணா,
2வது சிறந்த படம் – கன்னத்தில் முத்தமிட்டால்
3வது சிறந்த படம் – உன்னை நினைத்து,

2001–ம் ஆண்டு



சூர்யா சினேகா அஜித் சசி கணேசன்

(சிறந்த படம்) சிறப்பு பரிசு– கிங்.
பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் _ குருவம்மா.
சிறந்த நடிகர் _ மாதவன். (ரன், அன்பே சிவம், கன்னத்தில் முத்தமிட்டால்)
சிறந்த நடிகை _ மீனா, (இவன்)
சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு) – பிரபு (சார்லி சாப்ளின்)
சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) நந்திதா தாஸ் (கன்னத்தில் முத்தமிட்டால்)
சிறந்த வில்லன் நடிகர் – நாசர் (தமிழ்).
சிறந்த நகைச்சுவை நடிகர் – விவேக் (ரன்)
சிறந்த இயக்குனர் – மணிரத்தினம் (கன்னத்தில் முத்தமிட்டால்)
சிறந்த கதாசிரியர் – சுசி கணேசன் (பைவ் ஸ்டார்)
சிறந்த உரையாடல் ஆசிரியர் – ஏ.ஆர்.முருகதாஸ் (ரமணா)
சிறந்த இசை அமைப்பாளர் – சிற்பி (உன்னை நினைத்து)
சிறந்த பாடல் ஆசிரியர் – ரவிசங்கர் (உன்னை நினைத்து, வருஷமெல்லாம் வசந்தம்).
சிறந்த பின்னணிப் பாடகர் – உன்னிமேனன் (உன்னை நினைத்து, வருஷமெல்லாம் வசந்தம்)
சிறந்த பின்னணி பாடகி – சின்மயி (கன்னத்தில் முத்தமிட்டால்)
சிறந்த ஒளிப்பதிவாளர் – அர்ஜுன் ஜனா (காதல் வைரஸ்)
சிறந்த ஒலிப்பதிவாளர் – கணேசன். (ரமணா)
சிறந்த குணசித்திர நடிகர் – ஜனகராஜ் (கிங்)
சிறந்த குணசித்திர நடிகை – அனுஹாசன் (ரன்).

# மருவியது எப்படி ?

பழமொழிகள் திருக்குறளைப் போல, ஒற்றைவரியில் வாழ்வைச் சொல்பவை. வாய்மொழியாக வந்த பழமொழிகள் பல வழக்கொழிந்துபோய்விட்டன. எஞ்சியுள்ளவையும் காலத்துக்கு காலம் மருவி புதிய புதிய அர்த்தங்களை கொண்டுவருகின்றன. அவ்வாறு கால மாற்றத்தில் மருவி புதிய கருத்துக்களை உருவாக்கிவிட்ட விடயங்களை இப்பகுதியூடாக தொடர்ந்து பார்ப்போம். நீங்கள் அறிந்ததையும் இந்தப்பகுதிக்கு எழுதி அனுப்பிவைக்கலாம்.

## 'கண்டு அஃது கற்க பண்டிதனாவாய்'

'கண்டு அஃது கற்க பண்டிதனாவாய்' ஒரு விடயத்தை பார்த்து, அதை ஆராய்ந்து கற்றால் சிறந்த அறிவாளியாக முடியும். கண்டு அதனைக் கற்றால்...கண்டு அது கற்க... ஆனால் இன்று, கண்டதைக் கற்றால் பண்டிதனாவாய் என்றாகிவிட்டது.

(இது குறித்த மாற்றுக் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.)

- விவேகன்

# அரியகுட்டியர் கார் படிகப்போகிறார்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டு ஒரே மிதியாக அக்சிலேற்றரை மிதித்து விட்டார் அரியகுட்டியர். சாமான்கள் காவும் தள்ளுவண்டில்கள் நின்ற கொட்டகையை நோக்கி காதல் கொண்டோடியது கார். வரப்போகும் நிலைமை பேய்க்குட்டிக்குப் புரிந்ததோ என்னவோ வெட்டுங்கோ வெட்டுங்கோ என அப(ா)யக்குரல் எழுப்பினான். அரியகுட்டியருக்கோ இவன் வலப்பக்கத்தையா? அல்லது இடப்பக்கத்தையா? சொல்கிறான் என்பதில் குழப்பம். பேய்க்குட்டி பாய்ந்தெழும்பி ஸ்ரெயறிங்கைப் பிடித்து வெட்டுவதற்கிடையில் டமார் என்ற சத்தத்துடன் காரின் ஓட்டம் குலுக்கத்துடன் நின்றது. மணலாற்று இராணுவம்போல தள்ளு வண்டில்களை ஒரேயடியாகத் தள்ளிவிட்டு அந்த இடத்தில் நின்றது கார். சேத விபரங்கள் நன்றாகவே புலப்பட்டன. சிதறிய கண்ணாடிகள், ஆவெனப் பிளந்து நிற்கும் போனற். ஓடுவது தண்ணீரா அல்லது ஒயிலா எனப் புலப்படாத வகையில் வழிந்தோடும் திரவம். இதர.... இதர...

யார் கண்பட்டதோ என வெம்பியவாறு றைவர் சீற்றிலிருந்து கட்டுப்பணம் இழந்த தேர்தல் வேட்பாளர் போல இறங்கினார் அரியகுட்டியர். பேய்க்குட்டியை நினைக்க அவருக்குக் கவலை வந்தது.

நட்புக்குப் பங்கம் வராத வகையில் காரைத் திருத்திக்கொடுக்க வேண்டுமென்றால் எப்படியும் தனக்கு ஆயிரங்கள் போகும் என்பதையும் உணர்ந்துகொண்டார். ஆனால் பேய்க்குட்டியோ காரை ஏறெடுத்தும் பார்க்காமலே அவசர அவசரமாக யாருடனோ செல்லிடப்பேசியூடாகக் கதைத்தான். இடைக்கிடையே கெதியாய் வர முடியுமோ எனக் கெஞ்சியும் கொண்டான். யாராவது மெக்கானிக்குக்குக்கு



அடிக்கிறானாக்குமென நினைத்தார் அரியகுட்டியர். என்னடாப்பா இப்படியாப்போச்சு நீ எந்த மெக்கானிக்குக்கு அடிச்சனி. மூன்று நாள் காய்ச்சலில் கிடந்து உப்புக்கஞ்சிக்கு ஏங்கும் ஈனஸ்வரத்தில் முனகினார் அரியகுட்டியர். மெக்கானிக்கிக்குக்கு இல்லையண்ணை எங்கடை அல்வா அழகேசுக்குத்தான் அடித்தனான். அவனும் உடன வாறன் எண்டவன்.

அரியகுட்டியருக்கு மீண்டும் குழப்பம். அல்வா அழகேசுக்கு கார் திருத்துவது பற்றி ஒன்றும் தெரியாதே. அவனுக்குக் கார்ஓட மட்டும்தானே தெரியும். இப்ப அவனை ஏன் இவன் கூப்பிடுகிறான். அரியகுட்டியரின் மன எண்ணத்தை பேய்க்குட்டி புரிந்திருக்கவேணும். மெல்லக் கிட்ட வந்து கிசுகிசுத்தான்.

'அண்ணை இப்ப பொலிஸ் வந்தால் லைசென்சைக் கேட்பாங்கள். என்னட்டை இருக்கிறது கட்டைப்புத்தகமெல்லே (இலங்கை லைசென்ஸ்) ஆனால் அழகேசுவிட்டை இஞ்சத்தை லைசென்ஸ் இருக்குது அதுதான்' அவன் சொல்லி முடிக்கவில்லை அரியகுட்டியர் மனம் ஓலமிட்டது. அடப்பாவி நீயே கட்டைப் புத்தகம். நீ எனக்குக் கற்றுத்தரவந்து கட்டையில் போகவைக்கப் பார்த்தாயே!!!.



# காலம் ஆகி வந்த கதை 22

இரவி அருணாசலம்

## என் கண்ணல்லவா நீ – 5

(சென்ற வாரத்தொடர்ச்சி)

படம் பார்க்கிறதுக்கு சிவம் சொன்ன மற்றக் காரணத்தை கடைசி வந்தாலும் ஒருத்தரும் ஏற்காயினம். சிலவேளை விசி ஏற்பான், இல்லை, பரா, குலமும் ஏற்பினம். சிவம் இந்தமுறை சோதினை எடுக்காமல் மெடிக்கல் அனுப்பப் போறான். அப்ப, ஏன் இப்ப படிப்பான்? இதுதான் அடுத்த காரணம். `அடுத்த முறை மூசி மூசி கவனமாப் படிச்சு டொக்ரராக வேணும். இந்த முறை இனி ஏலாது' என்றான். `உது மூதேசி போனமுறையும் இப்பிடித்தான் சொல்லி மெடிக்கல் அனுப்பினது. உது திருந்தாது. பப்பாவையின்ரை காசை அழிச்சு வீணாக்குது' என்று அகிலன் என்னடியில் புறுபுறுத்தான்.

அப்ப, இப்போதைக்கு சிவம் டொக்ரராக மாட்டான். அங்கை விசியும் டொக்ரராக மாட்டான் என்று தெரிஞ்சிட்டுது. இஞ்சை சிவத்துக்கும் டொக்ரராகிற பிளான் இல்லை. சிவம் மெடிக்கல் அனுப்பப்போறன் என்று தீர்மானம் எடுத்தாப்பிறகு புத்தகத்தை சும்மா திறந்து வைச்சிருக்கிறதையும் விட்டிட்டான். ரியூசனுக்கு போறதையும் விட்டிட்டான். உளுத்தம்மா கரைத்துக் குடித்தான், அல்லது குழைத்துத் தின்றான். எதுவாயினும் எங்களுக்கும் தந்தான்.

போனவருசம் மனோகரா தியேட்டரடியில் அவனுக்கு அறை, இருந்தது. அப்ப மெடிக்கல் அனுப்பத் தீர்மானித்த பிறகு, மனோகரா தியேட்டரில் முதலாவது மணி அடிக்கிற சத்தம் கேட்டபிறகே, ஓடிப்போய் படம் பார்த்தான். அப்பிடியும் சொல்ல முடியாது. மனோகரா தியேட்டர் செக்கண்ட் ஷோவின் முதலாவது மணி அடிக்கிற சத்தம் கேட்டவுடன் படம் பார்க்க ஓடுகிற பழக்கம் வந்தாப்பிறகுதான், அவன் மெடிக்கல் அனுப்பத் தீர்மானித்தான். இப்பொழுது அப்படிச் செய்யமுடிய வில்லை அறையில் நிற்காமல் அடிக்கடி சைக்கிள் எடுத்துக்கொண்டு கைலாசபிள்ளையார் கோயிலடியால் வெளியில் போனான்.

அப்பா இதைக் கேள்விப்பட்டால் சிவத்தில மிகக் கொதிப்படைவார். அப்பா என்னை அறை எடுத்துப் படிக்கவிட்டது சிவத்தை நம்பித்தான். சிவம் என்னைக் கவனமாகப் பார்ப்பான் என்று அப்பாவுக்குத் தெரியும். மற்றும் சிவம் டொக்ரராக வரப்போறான், அகிலன் இஞ்சினியர் ஆவான் என்றும் அப்பாவுக்குத் தெரியும். தமையனும் தம்பியும் என்று சிவமும் அகிலனும், அவர்களுக்கு இடைப்பட்ட வயதில் நானும் இருப்பது எல்லாவற்றுக்கும் வசதி என்றும் அப்பா எண்ணினார். மேலும் சிவமும், அகிலனும் அப்பாவின் சொந்தத் தங்கை மடத்தடி அத்தையினதும், அம்மாவின் சொந்த அண்ணன் மடத்தடி மாமாவினதும் மக்கள். இது ஒன்றே எனக்கு உயரிய பாதுகாப்பு. எனவே நான் கெட்டுச் சீரழிந்துபோக எந்தக் கூறும் இல்லை.

நான் அறையெடுத்துப் படிக்க வேண்டும் என்கின்ற என் ஆய்க்கினை தாளாமையும், அப்பாவின் இந்த நம்பிக்கைகளும்தான் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில், தியாகராஜா மாஸ்ரரின் வீட்டு வளவில் உள்ள இன்னொரு வீட்டில், அறையெடுத்துப் படிக்க வைத்தது. இன்னொரு அறையில் விஜயனும் உதயனும் இருந்தனர். மற்றொரு சின்ன அறையில் நேசம் அம்மா சின்னச் சின்னக் கிண்ணங்களில் மரக்கறி வைத்து சமைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தா. சீலிங் போட்ட பெரிய அறையில் ஏ.ஜி.ஏ.புவனேந்திரண்ணை இருந்து அயர்ன் பண்ணின சேர்ட், போட்டு ஸ்கூட்டரில் வேலைக்குப் போனார். விறாந்தையில் வாங்கு, மேசை அடுக்கி கரும்பலகை வைத்து சனி ஞாயிறில் மாத்திரம் தியாகராசா மாஸ்ரர் சின்னப் பிள்ளைகளுக்கு ரியூசன் கொடுத்தார். சனி ஞாயிறு முழுநாட்களும் மற்றைய சில பின்னேர நாட்களிலும் நாங்கள் ரியூசனாக இருந்தோம்.

காலையிலிருந்து மத்தியானத்திற்குச் சற்றுப் பின்வரையும் பண்ணைக் கடல் காற்று குபுகுபுவெனப் புகுந்து வீசுகின்ற அந்தப் பெருவெண் மண்டபத்தில் பெரிய தேக்குமர மேசையின் முன் இருந்தேன். கண் அயர்வதாக ஒரு போதும் இல்லை. அப்படி அயர்ந்தால் மேசையில் கைவைத்து உடன் முகம் சரிவேன். பண்ணைக் கடல்காற்றுக்கு அதுவும் சொகுசு. என் சைக்கிள் பப்ளிக் லைபிறறியின் உள் இறங்குகையில் கையில் வீணை வைத்து, அந்த வெண்பெண் சரஸ்வதியைக் கண்டு உடன் குதிப்பேன். வேம்பின் கீழ் கொண்டுபோய் சைக்கிளை அதன் இடத்தில் சாத்திய பிறகு, அவ்வெண்பெரும் மாளிகையில் என் சிறுபாதம் பதியும். சஞ்சிகை, பத்திரிகை பகுதியில் ஒரு மணித்தியாலமும் அல்ல. பிறகு இரண்டாம் மாடியில் என் கால் தரிக்கும்.

அவ்வெண்மண்டபத்தில் காற்று கடுமையாய்க் காணவில்லை என்றால், பார்ப்பேன். மழை தூறிக்கொண்டிருக்கும். மழை சடசடத்தாலும் சத்தம் ஒன்றும் கேளாது. மழை சீறுகிற இனிய இசை விட்டு விட்டுப் பெயரும். எனக்கு இன்னோர் மடிபோல் அந்த அன்னை இருந்தாள். வெய்யிலில் நான் வெந்ததில்லை. மழையில் நனைந்ததில்லை. சோளகம் கூட மண்ணள்ளி, கண்ணப்பி நிரப்பியதில்லை. ஒன்றே ஒன்று குளிரக் குளிர வந்தது. பண்ணைக் கடல் காற்று அது.

நான் சாமம் சாமமாய் அறையில் படித்தேன். சனி ஞாயிறில் ரியூற்றரியில் படித்தேன். ஆனால் பகல், பகலாய் வெண்மகளின் மடியில் கிடந்தேன். அதுதான் நெஞ்செல்லாம்,

மூளையெல்லாம் சுவறிய படிப்பு. `பப்ளிக் லைபிறறிக்கு வந்து பார். ஆசையாப் படிக்கலாம்' என்று நான் அகிலனிடம் சொன்னேன். `நீயும் சின்னண்ணை மாதிரிக் கதைக்கிறாய். படிக்கிற ஆக்கள் எங்கையும், எப்பிடியும் படிக்கலாம்' என்றான். இவன் தெருவிளக்கில் புத்தகம் விரித்துப் படிக்கக் கூடிய 'ஏப்பிரகாம் லிங்கோல்ன்' சாதி. அகிலன் என்றல்ல, உதயன், விஜயன் கூட அப்பிடிப் படிக்க விரும்பேல்லை.

உதயனும், விஜயனும் படிக்க வேணும் என்பதில்கூட அவ்வளவு அக்கறை காட்டவில்லை. நான் இரவில் படித்துக் களைக்கிற நேரம் எழும்பி உலாத்துப்போடுவேன். அகிலன் அதுவும் இல்லை. அவனுக்குப் படிப்பில் களைப்பு இல்லை. எனக்கென்றால் படிக்கக் குந்தினால் கையுளைகிறது. நூரி பிடிக்கிறது. மண்டை குத்துகிறது. குண்டி நோகிறது. கால் வலிக்கிறது. ஆக மிஞ்சினால் தண்ணி விடாய்க்கிறது. மூத்திரம் முட்டுகிறது. கக்கூஸ் கூட வருகிறது. ஒரு பத்து நிமிச உலாத்து இதற்குப் பரிகாரம். தென்னை மரத்தின் மேல் நிலவு நின்றிருந்தால், கிணற்றுக்கட்டிலில் இன்னும்கூட பத்து நிமிசம் கிடப்பேன்.

அன்றிரவுக்கு நிலவு இல்லை. உதயன் வெளியில் போய்விட்டிருந்தான். உதயன் வெளியில் போபவனாகவே எப்போதும் இருக்கிறான். அவனுக்கு அறையென்றானது படிக்கிறேன் என்பதற்கு ஓர் அடையாளம். இரவில் றோட்டிலோ, கோயில் திண்ணையிலோ படுக்க முடியாது என்பதற்கான ஓர் உத்தரவாதம் அந்த அறை!

விஜயன் கதவு பூட்டி மிகக் கவனமாகப் படிக்கிறான். அப்படித்தான் நான் நினைத்தேன். என்ன படிக்கிறான் என்றறிய வாழைமரம் தாண்டி யன்னலைத் திறந்தேன். அவன் திறந்திருந்த கொப்பிக்கு முன்னே நித்திரை தூங்கி வழிந்து கொண்டிருந்தான். நான் பெலத்த சத்தத்துடன் யன்னல் கதவை அடித்து `டோம்' என்று கத்தினேன். அவன் `திடும்'என்று திடுக்கிட்டுப் போய் கதிரையிலிருந்து விழுந்தான். எழும்பி வழியச் சிரித்தான்.

என் பலத்த சிரிப்பொலிகேட்டு அகிலனுக்கும் விளங்கிவிட்டது. அவன் அறைக்கு வெளியில் வந்து கெக்கட்டமிட்டுச் சிரித்தான். விஜயனும் வெளியில் வந்து `இண்டைக்கு ஒரே அலுப்பா இருக்கு. ரதி வந்தவள்' என்று கண்சிமிட்டிச் சிரித்தான். அவன் சிரிப்பு அழகு. அவன் அழகன். அவன் பெட்டைகளை மயக்கக் கூடியவாறு 'சொப்பர்' சைக்கிள் வைத்து நளினமாக ஓடுவான். காற்றினால் குழப்பிவிடமுடியாத தன் சுருண்ட மயிரைத் தடவித் தடவி பற்களுக்கிடையே சொற்களை மடித்து வைத்து பெட்டைகளுடன் இரகசியம்போல் கதைப்பான். கௌரியின் வெட்கம் கலந்த சிரிப்பு கண்டு அவன் என்ன கதைத்திருப்பான் என்று ஊகிக்க முடியும். `இப்பிடிக் கதையாதையெடா பெட்டைகள் உன்னைப் பற்றி என்ன நினைக்குங்கள்? என்று சொன்னேன். `நல்லாத்தான் நைக்குதுகள்' என்று பிறகும் கண் சிமிட்டினான்.

விஜயனது வெள்ளிக்கிழமை முழுக்கு சனி ஞாயிறு ரியூசனுக்கும் அங்கு வரும் பெட்டைகளுடன் சல்லாபிப்பதற்கும் மிகப் போதுமாக இருந்தது. வியாழன் இரவு ஒரு முட்டை வாங்கி வருவான். ஆதை உடைத்து மஞ்சள் கருவை தெரிந்தெடுத்து விழுங்குவான். வழுக்க, வழுக்க வெள்ளைக் கருவின் வெடுக்கை எடுத்து அறைக்குத் தூரே எறிந்து வாழைப்பாத்திக்குள் விழ விடுவான். தலைக்கு நல்லெண்ணெய் வைத்துத் தேய்ப்பான். தலைகணியில் படுக்க மாட்டான்.

காலை எழுந்து வெந்தயக் கிண்ணத்தில் வைத்திருந்த வெள்ளைக் கருவை தலையில் தேய்த்து ஊறவிடுவான். மயிர் காய்ந்து கருவாடாகப் போனபின், தலையில் தண்ணீர் ஊற்றி தேய்த்துத் தேய்த்து கழுவுவான். பெரும் முழுக்குப் போடுவான். சந்தன சோப்பின் வாசம் வேப்பமரம் தடவி, யன்னல் கம்பி தாண்டி, எங்கள் அறைவரை வரும். கிணற்று வேலிக்கு மேலால் பார்த்தால், துலா தாழ்வதும், உயர்வதும், அடித்துலா நிலத்தில் அடிபடுவதுமாய், அரைமணித்தியாலம் அந்த விளையாட்டு நடக்கும்.

'சொப்பர்' சைக்கிள் ஓடுகிற நளினத்துடன் அவன் தலையைத் துவட்டுவான். ஒரு மயிர் கூடப் புடுங்குப்படக்கூடாது. துவாயைப் பார்ப்பான். ஒரு மயிர் இல்லை. முழுகிச் சிவந்த கண்களால் சிரிப்பான்.

நல்லூர் கந்தசாமி கோயில் பத்து மணிப் பூசைக்கு மணி அடிக்கிற நேரம் விஜயனின் 'சொப்பர்' சைக்கிள் குதித்தோடி, கோயிலடியின் தேர் முட்டியருகே சாத்தி வைக்கப்பட்டிருக்கும். ஆரோகரா என்றும், கற்பூர ஒளியை கண்ணில் ஒற்றிய பிறகும், விபூதிக்குறி அவ்வளவு தெரியாமலும், சந்தனமும் துலங்காதபடியும் மலாயன் கபேக்கு போவான் விஜயன். சிலவேளை தாமோதர விலாஸாகவும் இருக்கும்.

மரக்கறிச் சாப்பாடு முடிந்து விஜயன் அறைக்கு வருகிறபோது, முழுகின மயிரின் வசீகரம் கண்டு நானே மயங்கியிருக்கிறேன். அப்பிடிக் கறுத்து, அப்பிடி 'ஷைன்' பண்ணி, அப்பிடி வழுக்கியதை, வேறு ஆண்களின் மயிர்களில் நான் காணவில்லை. அந்த மயிரின் வசீகரம் அடுத்து வரும் சனி ஞாயிறுக்கு மிகப் போதுமாக இருந்தது. அடுத்த வெள்ளிவரை கூடப்போதுமாக இருந்தது.

அவன் தலையைத் தடவி, தலையை அமத்தி, பெட்டைகளுடன் கதைத்தான். ஆனால் ஒரு பெண்ணுடனும் அவன் மயங்குவதாக இல்லை. ஏற்கனவே ரதியில் அவன் மயங்கிவிட்டிருந்தான். அப்படிச் சொல்லக்கூடாது. ரதிதான் இவனில் மயங்கியிருக்கிறாள். விஜயனை விட்டு விட்டுக் கலைத்து காதல் செய்திருக்கிறாள்.

போனமுறை ஏ.எல் சோதினை எடுக்க முன்னம் தட்டாதெருச் சந்திக்குக் கிட்ட அறையெடுத்துப் படித்தான் விஜயன். அப்போது நிறம் மாறாத பூக்கள் படம் வின்ஸர் தியேட்டரை பயங்கரமாக அழப்பண்ணிக் கொண்டிருந்தது. படம் முடிகிற நேரம் வின்ஸர் தியேட்டர் வெளித்தள்ளின பெண் சனங்களெல்லாம் பெரும்பாலும் அழுதுகொண்டு போனார்கள். அடுத்த காட்சிக்குக் கியூவில் நின்ற அனேகரும் பெண்களாகவே இருந்தார்கள்.

படம் முடிந்து கஸ்தூரியார் வீதியால் பஸ்ராண்டிற்குப் போகிற பாதையில் இரண்டு காட்சிகளைக் காணலாம். அழுதழுது கண் சிவந்த பெண்கள், அழுது முடித்து நிலம் பார்த்துப் போகிற பெண்கள், சூரிய வெளிச்சம் தாங்காது கண் பூஞ்சுகிற பெண்கள் என்று வரிசையாகப் போகிற ஒரு காட்சி. மற்றது கஸ்தூரியார் வீதியில் இருக்கிற தேத்தண்ணிக் கடைகள், கபேக்கள், கூல்பார்கள் யாவும் `ஆயிரம் மலர்களே மலருங்கள்' என்கின்ற பாட்டைப்பாடும். இந்தப் பாட்டு பெண்களின் கண்களில் இன்னும் கண்ணீரைப் பெருக்கிவிடும். அல்லது 'ஐஸ்கிறீம் குடிக்கவோ, தேநீர் அருந்தவோ அவர்களை அழைத்து விடும்.

அப்படிக் கண்ணீர் பெருக்கிய பெண்களில் ஒருத்தி ரதி! அப்படி அடிக்கடி போன பெண்களில் ஒருத்தியும் அவள். நிறம் மாறாத பூக்கள் படத்தின் பாத்திரங்களான ரதி, விஜயனுக்குக் கிடைக்கவில்லை. விஜயன், சுதாகர், ராதிகாவின் திருமணத்தை முடித்து வைத்து `ஆயிரம் மலர்களே மலருங்கள்...' என்கின்ற பாட்டை கசெற்றில் பாடவிட்டு, அப்படியே குளத்தில் மூழ்கிச் சாகிறான்.

இதனைப் பார்க்கிறபோது அழாமல் என்ன செய்ய முடியும்? அழாதவர்கள் மனிதரேயில்லை. அதுவும் பெண்ணாக இருந்து, அழாமல் விட்டால், அவள் மனிசியா? விம்மல் பொருமலுடன் வெடிக்கிறது அழுகை. இது தியேட்டர்! மற்றவர்கள் நாசூக்காக, லேஞ்சியால் வாய் பொத்தி அழுகிறார்கள். இந்த மகா துயருக்கு வெடித்து, விம்மி, விக்கி, குலுங்கி குலுங்கி அழவேணும். இதற்கு வீட்டின் அறைதான் சரி. ஆனால் வீட்டை போனால் அழுகை வரமாட்டேன் என்கிறது. திரும்ப நிறம் மாறாத பூக்கள் பார்க்கவேண்டும். அழழெண்டு அழவேண்டும்.

ரதி தன் வீட்டில் இருந்தாள். விஜயன் பக்கத்து வீட்டின் ஒரு அறையில் படித்தான். விஜயன் அழகனாய் இருக்கிறான். கொடுஞ்சிரிப்பொன்றை பற்களால் கடித்துத் துப்புகிறான். ரதியைக் கண்டு ஒவ்வொரு நாளும் கொடுஞ்சிரிப்பொன்று உதிர்கிறது. அடிக்கடி ரதியைக் காண்கிறான். ரதி விஜயனைக் காண்கிறாள். காதுகளை சுருண்ட மயிர் கொண்டு மூடி அது என்ன அழகு! சேர்ட் கொலரில் சுருண்ட மயிர் படர்ந்து கிடக்கிறது.

ஆள்தான் கறுப்பு. இல்லையென்றால் அவன் கமலகாசன்!.

# நத்தார் தினத்தை முன்னிட்டு

# Financial Consulting Gmbh & Sarah Star Thun



## இணைந்து வளங்கும் சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.எச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்

## Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்



Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

**சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்**

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.
அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Solo Movies GmbH
Ammu Travels
S.K.TRADING GMBH
Sri Sai Enterprise
சிகரம்
Mahes Jewellery & Textiles
Sakthy Jewellery
Textile & Jewellery
Ravi Jewellery
Suji Jewellery
AMBAL STORE அம்பாள் ஸ்ரோர்ஸ்

## அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**விமல் விநியோக நிலையம்**

**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.



## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:

**Photo Bala**
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77



**சிறிய விளம்பரங்கள் இப்பகுதியில் எதிர்பார்க்கப் படுகின்றன.**



## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073**

Pub-Fr-39



**RESTAURANT ROYAL TANDOURI**

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

**RESTAURANT ROYALTANDOURI**

100 பேருக்குட்பட்ட கொண்டாட்டங்களுக்கு குளிரூட்டப்பட்ட மண்டபம் ஒழுங்கு செய்து தரப்படும்
*Métro: Bellville*
தொடர்புகளுக்கு:
01 43 14 67 49
06 64 00 66 62
06 10 59 37 44



**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா ?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52

என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.



## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502


**தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக்கிளை**

நடாத்தும்



**விடுதலை**

# கானம்பாடி 2004

சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி

தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக்கிளை வருடாவருடம் நடாத்தும் ''விடுதலை கானம்பாடி ''சிறந்த பாடகர் தெரிவுப்போட்டியின் 2004ம்ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்

01 இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடற் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

02 மேற்பிரிவு பாடற் போட்டி மட்டும் ஆண்கள்/பெண்கள் என இருவகைப்போட்டிகளாக நடாத்தப்படும்.

03 14வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும். 14 வயதிற்கும் 9 வயதிற்கும் இடைப்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் வயதெல்லை நிர்ணயிக்கப்படும்.
மேற்பிரிவு :-ஆண்கள். பெண்கள் 31.12.1990 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.
கீழ்ப்பிரிவு :-01.01.1991 அன்றும் 31.12.1995 வரையிலும் பிறந்தவர்கள்.
பாலர் பிரிவு 01.01.1996 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்.

04 முதற்சுற்றுப்போட்டியில் தெரிவானபாடகர்களில் இருவர் இறுதிப்போட்டிக்கு அழைக்கப்படுவர்

05 இறுதிப்போட்டியிலே இவர்கள் இரண்டு முறைகள் சோதிக்கப்படுவார்கள்.
(1) ஒரு பாடலின் சரணம் இசையமைப்பாளரால் பாடப்படும். அந்தப்பாடலின் பல்லவியை இவர்கள் பாட வேண்டும். (2) முதலில் ஒரு பாடல் இசைத்தட்டில் இசைக்கப்படும். அதன் பின்பு மூன்று பாடல்கள் தொடர்ச்சியாக இசைக்கப்படும். அதில் முதலில் இசைத்தப்பாடலின் இராக சாயலில் எந்தப்பாடல் உள்ளது என்பதைக் கூறவேண்டும். இந்தப் போட்டிகளில் வெற்றி பெறுபவரே முதாலாம் இடத்தைப் பெறுவார்.

06 கீழ்ப்பிரிவிலும் இருவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் ஒரு பாடலின் சரணம் பாடப்படும். அதன் பல்லவியை அவர்கள் பாடவேண்டும்.

07 பாலர் பிரிவினருக்கு இந்த விதிமுறைகள் இல்லை

08 விண்ணப்பக்கட்டணமாக 40.00 Euro செலுத்தப்பட வேண்டும்.
T.R.O, Volks Bank Remscheid, Solingen eg
Konto:6617211 BLZ: 34060094 என்னும் காப்பக இலக்கத்திற்கு பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டுப் பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இனைத்து அனுப்புதல் வேண்டும்.

09. விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி 15.10.2004

10. பாடல், இசைக்காக தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசிஇலக்கம்:0226158533(S.கண்ணன்)

11. விண்ணப்பம் செய்யவேண்டிய முகவரி : T.R.O
Wartburgstr-15, 42285 Wuppertal
Tel:0202 /47829753

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்- யேர்மனிக்கிளை

**தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக்கிளை**

நடாத்தும்



**விடுதலை**

# கானம்பாடி 2004

**சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி**

**விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்: ______________________
2. பிறந்த திகதி: ______________________
3. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர்: ______________________
4. முகவரி (யேர்மன் மொழியில்) ______________________
5. தொலைபேசியிலக்கம்: ______________________
6. பங்குபற்றும் போட்டி: மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு / பாலர்பிரிவு
7. பாடவிரும்பும் பாடலின் பெயர்: ______________________
8. இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு ஒலிப்பேழையின் பெயர்: ______________________

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேனென்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

______________________ ______________________

தமிழர்புனர்வாழ்வுக்கழகம்-யேர்மனிக்கிளை

# வர்த்தகம் மூலதனம்

## ELECTRO LUX மந்தம்



உலகின் பெரியதொரு வீட்டு உபகரண உற்பத்தியாளர்களான சுவீடனின் `எலக்றோ லக்ஸ்' (Electro lux AB) நிறுவனம் சர்வதேச சந்தையில் உயரும் உருக்கு விலையின் காரணமாக தனது இலாபத்தின் ஒருபகுதியை இழந்து வருகிறது. பங்குச் சந்தையில் கடந்த ஒருவருடத்திற்கும் மேலாகவே `எலக்றோ லக்ஸ்' பங்குகளின் விலை பெரிதளவான ஏற்றம் எதனையும் கொண்டிருக்காமையும் இந் நிறுவனத்தை கவலையடைய வைத்துள்ளது.

## DIAGEO வும் தள்ளாடும்



பிரித்தானிய பவுண்ஸ் நாணய பெறுமதியின் திடமும், உயர் வரிகளும், ஐரோப்பிய வர்த்தகப் போட்டியும் தன்னைத் தள்ளாட வைக்கிறது எனப் பிரித்தானியாவின் டியாஜியோ நிறுவனம் DIAGEO) கவலை தெரிவித்துள்ளது. உலகில் ஆகக்கூடுதலாக விற்பனையாகும் சிமிர்னோப் (SMIRNOFF) வொட்கா மதுபானம் மற்றும் ஜொனிவோக்கர், J & B கினஸ் பியர் பல பிரபலமான மதுபானவகைகளை உற்பத்தி செய்யும் தாய் நிறுவனம்தான் டியாஜியோ. அதுமட்டுமல்ல பேகர் கிங் (BURGER KING) துரித உணவகங்களும் இந்த நிறுவனத்திற்கு உரிமையானவை தான். மதுபானம் அருந்தியவர்கள் தள்ளாடுவது வழமை, ஆனாலும் உற்பத்தியாளர்களும் தள்ளாடுவதை இங்கு காணமுடிகிறது.

## துண்டு விழுவது மிகக் கூட

ஈரோ நாணய வலைய நாடுகளின் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை தொடர்ந்தும் அதிகரித்தே வருகிறது. இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் மந்தமாகவும் பற்றாக்குறை நிதித்தொகை துரிதமாகவும் வளர்ந்துவருவது, அந்நாடுகளை கவலையடைய வைத்துள்ளதுடன், இதைத் தடுக்கும் வழிவகைகள் குறித்தான நடவடிக்கைகள் பற்றியும் அவை சிந்தித்து வருகின்றன. கீழே சில நாடுகளில் துண்டு விழும் தொகை பெருகுவதற்குரிய பிரதான காரணங்கள் தரப்பட்டுள்ளன.

ஜேர்மனி -உள்நாட்டில் அதிகரித்து வரும் தேவைக்காக அதன் ஏற்றுமதியில் ஏற்படும் பாதிப்பு வருமானத்தை இழக்க வைக்கிறது.

இத்தாலி - நிதிகாணும் வழியில் ஏற்பட்ட மந்தம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் குறுக்கம்

கிரேக்கம் - ஒலிம்பிக் போட்டிகள் கொடுத்த வரவு செலவுத்திட்ட பளு.

பிரான்ஸ் - சுகாதாரத்துறையின் பெரும் செலவீனம்

போத்துக்கல் - ஓய்வூதிய கொடுப்பனவு வரவு செலவுத் திட்டத்தில் கொடுக்கும் சுமை.

## INTEL இன் WI-MAX




இன்டெல் (INTEL) நிறுவனம் இணைப்பு இழை இல்லாத (WIRELESS - BRUAD BAND) இணைய வலைய தொழிநுட்பத்தை மிக சக்திவாய்ந்ததாக அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. WIMAX என அழைக்கப்படும் இத் தொழிநுட்பத்தினூடாக 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு இணைப்பு இழை இல்லாதவாறு இணைய வலையத் தொடர்பினைப் பேணமுடியும் எனவும் அறிவித்துள்ளது. (தற்போதுள்ள WI-FI தொழிநுட்பம் 100 மீற்றர் சுற்றளவிற்கே பயன்படுகிறது) 2006 ஆண்டில் தான் இப்புதிய தொழிநுட்பத்தைத் தரப்போவதாக குறிப்பிட்டுள்ள இன்டெல் நிறுவனம், இதனூடாக இணைய வலையத்தில் ஒரு பெரும் மாற்றம் நிகழும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## போயிங்குக்கு மாசு



அமெரிக்க `போயிங்' (Boeing co) நிறுவனத்தின் முன்னாள் முகாமையாளர் 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஏனைய போட்டி நிறுவனங்களின் ஆவணங்களைத்தான் இரகசியமாகப் பெற்றுக்கொண்ட குற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். குறிப்பாக `லொக்ஹிட் மாட்டின்' (Lockheed Martin Corp) நிறுவனத்தின் உந்துகணை (Rocket) தொடர்பான இரகசிய ஆவணங்களையே இம் முன்னாள் முகாமையாளர் சட்டவிரோதமாக பெற்றுள்ளமை தொடர்பாக, அமெரிக்க சட்டமா அதிபர் அலுவலகத்தாலும், `பென்ரகன்'(Pentagon) புலனாய்வாளர்களாலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## ALCATEL அமெரிக்காவை நோக்கி

ALCATEL

உலகின் ஆறாவது பெரிய தொலைத்தொடர்பு சாதன உற்பத்தி நிறுவனமான பிரான்சின் `அல்காதெல்' (Alcatel Sa) அமெரிக்காவின் `ஸ்பாசியல் வயர்லெஸ் '(Spatial wire less) செல்லிடப்பேசி நிறுவனத்தினை 200 மில்லியன் ஈரோக்களுக்கு கொள்வனவு செய்யவுள்ளது. இக் கொள்வனவு மூலமாக `அல்காதெல்' அமெரிக்காவிலும் தனது வர்த்தகத்தை விஸ்தரிக்க வாய்ப்பு உருவாகியுள்ளது. தற்போது `அல்காதெல்' அமெரிக்காவின் `சிஸ்கோ சிஸ்டம்'(Cisco Systems Inc) `மோட்டோ ரோலா' (Motorola Inc)) ஆகிய நிறுவனங்களுடனும் ஐரோப்பாவின் `நொக்கியா'(Nokia Corp), `டெலிபொன் -எரிக்சன்' (Telefon AB L.M Ericsson) ஆகிய நிறுவனங்களுடனும் வியாபாரப் போட்டி போட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: தருண்

# நூல் அறிமுகம்

## காலம் ஆகி வந்த கதை,




அ.இரவி,
அந்திவானம் பதிப்பகம்
புதுக்குடியிருப்பு,
தமிழீழம்.
முதற்பதிப்பு 2003.

"காலம் ஆகி வந்த கதைகள் எனும் இந்தப் படைப்பு 20ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதிகளில் ஈழத்து தமிழர்களுக்கு ஏற்பட்ட ஆழப்பதிந்த சமூக அரசியல், பண்பாட்டு அனுபவங்களை கலைப் படைப்புகளாக வெளிக் கொணரும் பிரக்ஞைபூர்வமான ஆக்க இலக்கியப் பயில்வில் ஒரு முக்கிய கட்ட எட்டுகையை குறிக்கிறது."

**– பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி,**

காலமாகி வந்த கதை எந்த விதமான இலக்கிய வடிவத்திற்குள்ளும் அடக்க முடியாத -வரையறுக்கப்பட முடியாத வித்தியாசமான - சுவாரசியமான இலக்கியப் பிரதியொன்று. ஈழத்தின் இலக்கியப்போராட்ட ஆவணப்படுத்தல் வரலாற்றில் மிக முக்கிமானதும் கூட.

ஈழமுரசில் தொடராக வந்த இக்கதைகள் தற்போது நூலுருப் பெற்றிருக்கிறது. அந்திவானம் பதிப்பகம் மிகக் கச்சிதமான முறையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது. பாராட்டப்படவேண்டிய முயற்சி. ஈழத்தின் தலைசிறந்த ஓவியர்கள் பலரின் சித்திரங்கள் நூலுக்கு சிறப்புச்சேர்க்கிறது.

ஈழத்துக்கிராமமொன்றில் சிறுபருவத்துக்கேயுரிய சுட்டித்தனங்களும் - குறும்புத்தனங்களும் நிறைந்த வாழ்க்கையை - போருக்கு முந்திய ஈழத்து வாழ்வியலைத் துல்லியமாக பேசும் இக்கதைகள் ஈழத்து இலக்கியப் பரப்பில் முக்கியமான இடத்தை தக்க வைத்துக் கொள்கிறது.

– கிருஸ்ணரஜனி

# தொடக்கமே தொடக்கத்தின் முடிபு

(14ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நிலையைக் கடக்க சொற்கள் தேவையில்லை. ஆன்மீகப் பயணத்தில் சொற்கள் எங்களைச் சுமந்து செல்வாது. சொற்கள் துணைவராத–துணை வரமுடியாத ஒரு தனி வழிப்பயணம் அது. பிறர் சொற்களையும், சொற்பொழிவுகளையும், பொன் மொழிகளையும், கதைகளையும், போதனைகளையும் கேட்பதனால் மட்டும் நாம் ஆன்மீகப்பயணத்தை மேற்கொள்ள இயலாது. கண்ணனையும், புத்தரையும், இயேசுவையும், முகமதுவையும் ஏனையோரையும் பின்பற்றியவர்களும், பின்பற்றுபவர்களும் வெறுமனே பின்பற்றலிலேயே இருந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் ஒருவராலும் தன்னைத் தானே வெற்றி கொள்ள முடியாது இருக்கிறது. சொற்களில் தொங்கிக்கொண்டிருப்பவர்களால் பின்பற்றிக்கொண்டுதான் இருக்கமுடியும். இது ஒரு விதமாயைப் பயணம். ஒவ்வொருவரும் உண்மையைத் தனக்காகத்தானே கண்டு கொள்ள வேண்டும். ஒருவராலும் இன்னொருவருக்காக உண்மையைக் காணவோ, காட்டவோ முடியாது. எங்களது உண்மை நோக்கிய அகப்பயணத்தில், நாம் எடுத்து வைக்கும் ஓர் அடிக்கு இணையாக, உலகிலுள்ள அனைத்துப் புனித நூல்களையும் மத நூல்களையும் நாம் ஒப்பிடவே முடியாது.

ஒரு சிறு விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு காரிருளில் ஒரு மலையின் உச்சியை அடைய விரும்பிய ஒருவன், தனது சிறு விளக்கு மூன்று அடி தூரத்திற்கு மட்டுமே ஒளி பாச்சுய்வதைக் கண்டான். அவன் நிற்கும் இடத்திலிருந்து மலை உச்சிவரையிலான தூரமோ பத்து மைல்களாகும். அந்தத் தூரத்தைக் கடந்து மலை உச்சியை அடைய எத்தனை அடிகளை அவன் எடுத்து வைக்க வேண்டும், மூன்றடி தூரத்தை நிதானமாகக் கடப்பதற்கு அவன் இரண்டு முறைகள் காலடி எடுத்து நடக்கவேண்டும். அந்த மொத்தத் தூரத்தையும் கடக்க அவன் கிட்டத்தட்ட 11,800 முறைகள் காலடியெடுத்து வைத்து நடக்க வேண்டும். இத்தனை முறைகள் இருளில் நடக்கவேண்டுமே என அஞ்சிய அவன் தனது நோக்கத்தைக் கைவிட்டுவிட்டு மறுநாள் சூரியோதயத்தை எதிர்பார்த்து அப்படியே அந்த மலை அடிவாரத்திலேயே அமர்ந்துவிட்டான். தனது கையிலிருக்கும் சிறு விளக்கிற்குப் பதிலாக சூரியன் வந்தால் முழுத்தூரமுமே வெளிச்சமாகிவிடும் என அவன் எண்ணினான். சிறிய விளக்கால் பெரிய இருளைக் கடக்க இயலாது என்பதால் அவனுடைய மனம் பெரிய வெளிச்சத்தை நாடியது. ஒரே தடவையில் மிகவும் சுலபமாக முழுத்தூரத்தையும் கடக்க விரும்பிய தாலேயே தனது கையிலிருந்த சிறு விளக்கின் வெளிச்சம் அவனுக்குப் போதாத வெளிச்சமாய்த் தோன்றியது.

முதல் அடியை எடுத்து வைக்க, எஞ்சிய தூரத்திலே மேலும் மூன்று அடிகளை அவனது விளக்கே வெளிச்சமாக்கும் என்ற யதார்த்தத்தை–உண்மையை ஏனோ அவனால் உணரமுடியவில்லை. அவன் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற முன்னேற அவனது பாதையும் வெளிச்சமாகிக் கொண்டே போகும். சிறிய விளக்கு வெளிச்சத்தின் உதவியோடு எந்த நீளமான அடர்த்தியான இருளையும் எவ்வித சிரமுமின்றி நிதானமாகக் கடக்கலாம். எமது அறியாமை என்ற இருளை நாமே எமது விழிப்புணர்வு என்ற அக ஒளியினால் கடக்க வேண்டும். இதற்குப் புறத்திலிருந்து வரும் ஒளி உதவப் போவதில்லை. புற ஒளி புறத்தை விளக்கும். அக ஒளியே அகத்திலிருக்கும் இருள் அகன்ற இடத்தைக் கௌவிப்பிடிக்கும். அங்கே தொடக்கமே தொடக்கத்தின் முடிவாகவும், அம்முடிவே அடுத்தத் தொடக்கத்தின் தொடக்கமாகவும் இருக்கும்.

## இலண்டனில் 'விம்பம்' நடாத்திய குறும்படத் தேர்வு

(03.10.04)

இலண்டனில் இயங்கிவரும் விம்பம் என்னும் திரைக்கலை ரசனை மன்றம், குறும்படங்களுக்கான ஒரு தெரிவுப்போட்டியை நேற்று சனிக்கிழமை நடாத்தியது. இப்போட்டியில் முதற்சுற்றுக்கு 28 படங்கள், புலம்பெயர் நாடுகளில் இருந்தும், இலங்கையில் இருந்தும் கலந்துகொண்டன. அதில் தெரிவு செய்யப்பட்ட 14 படங்கள் போட்டிக்கு அனுமதிக்கப்பட்டன. இப்படங்களைத் தெரிவு செய்வதற்கு இயக்குநர் தங்கர்பச்சான், திரு. யமுனா இராஜேந்திரன், மு.நித்தியானந்தன், விமல் சொக்கநாதன், மு.புஸ்பராஜன், ஜெயக்குமார் ஆகியோர் நடுவர்களாக செயற்பட்டனர். இதில் சிறந்த படம், சிறந்த இயக்குநர், சிறந்த நடிகருக்கான விருதிகள் கனடாவில் இருந்து போட்டியில் கலந்துகொண்ட 'அடிமை' (The Addict) என்னும் படத்துக்கும் அதன் இயக்குநரான சுதன் மகாலிங்கத்திற்கும் வழங்கப்பட்டன. சிறந்த நடிகையாக கனடாவில் இருந்து போட்டியில் கலந்துகொண்ட இன்னொரு குறும்படமான 'மனுஷி' இல் நடித்த சுமதி ரூபன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த ஒளிப்பதிவிற்கான விருதுக்கு, பிரான்சில் இருந்து கலந்துகொண்ட நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகத்தின் கலாச்சாரப்பிரிவு தயாரித்த, 'விலாசம்' படம் தெரிவு செய்யப்பட்டது. சிறந்த கதைக்கருவிற்கான விருது, இலங்கையில் இருந்து கலந்துகொண்ட ச.இராகவன் இயக்கிய 'மூக்குப்பேணி' படத்திற்கும் வழங்கப்பட்டது. சிறந்த தொகுப்பாளருக்கான (எடிற்றிங்) விருதினை கனடாவில் இருந்து போட்டியில் கலந்துகொண்ட 'கோப்பை' என்ற படத்தின் தொகுப்பாளர் ரூபன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த திரைப்பிரதிக்கான விருது மட்டக்களப்பில் இருந்து கலந்துகொண்ட 'சைக்கிள்' படத்திற்கு வழங்கப்பட்டது.

## தமிழ் திரைப்படங்களிற்கு கிடைத்த விமோசனம்!!!

### தமிழ் பெயர் கொண்ட திரைப்படங்கள் -படத் தயாரிப்பாளர்களின் முடிவு-

தமிழ் மொழியை அண்மையில் செம் மொழியாக இந்தியாவின் மத்திய அரசு அறிவித்தது பலருக்கு அதாவது உலகின் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை ஊட்டியது. இவ் அறிவிப்பு தமிழை புறக்கணித்த பெரும்பாலானவர்களை விழிப்புறச் செய்துள்ளது என்பது இன்னோர் செய்தி.

தென்னிந்தியாவில் வெளி வந்த தமிழ்த் திரைப்படங்கள் பல. இவற்றில் தமிழிற்கே உரிய பண்பாட்டில் சுத்த தமிழ்ப் பெயரில் படங்களிற்கு பெயர் சூட்டப்படுபவை அருகி, புரியாத தமிழிலும், தமிழை கொச்சைப்படுத்தும் வகையிலும், வேற்றுமொழியின் உருவாக்கம் ஓசைலும் புதுமை என்ற தோரணையில் தமிழையே கொச்சைப்படுத்தி திரைப்படங்களிற்கு பெயர்சூட்டி வந்தமை தமிழ்மொழி பற்றாளர்களை வேதனையடையச் செய்தது.

தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட பின் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் திரையுலக கலைஞர்களிற்கிடையேயான சந்திப்பு கலந்துரையாடலின்போது தமிழ்த் திரைப்படங்களிற்கு சரியான தமிழிலே பெயர்சூட்டுவது என திரையுலகத்தினர் ஏக மனதாக ஏற்றுக்கொண்ட முடிவு உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிற்கும் தென்னிந்திய தமிழ் திரைப்படப் பிரியர்களையும் மகிழ்ச்சி கொள்ளச் செய்துள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தின் காப்பாளர் டாக்டர் ராமதாஸ், தலைவர் தொல். திருமாவளவன், டாக்டர் சேதுராமன் ஆகியோருடன் திரையுலக பிரதிநிதிகள் நடிகர் சங்கம் சார்பாக சத்யராஜ், இயக்குநர் சேரன், தமிழ் திரைப்பட இயக்குநர் சங்க தலைவர் சந்திரசேகர் துணைத் தலைவர் இயக்குநர் துரை, தென்னிந்திய திரைப்பட, மற்றும் தொலைக்காட்சி இயக்குநர்கள் சங்கத் தலைவர் குகநாதன், தென்னிந்திய தயாரிப்பாளர்கள் (கில்ட் அமைப்பு) பொருளாளர் பிரகாஷ், தென்னிந்திய திரைப்பட நிர்வாகிகள், சங்க செயலாளர் சுவாமிநாதன், திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்தின் செயலாளர் கலைப்புலிசேகர், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்க துணைத் தலைவர் கே.ராஜன், செயலாளர் சித்ரா லட்சுமணன் தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர் சங்கம் சார்பாக இயக்குநர் சுந்தர்ராஜன், சீமான், புகழேந்தி, தமிழ்த்திரைத் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் செல்வமணி, வி. சேகர், சசிமோகன், மு.சுப்ரமணியன் போன்றோருடன், புலவர் இறைகுருவனார், முனைவர் தமிழப்பன், புலவர் பச்சையப்பன், முகம்மாமணி, பத்மநாபன், புலவர் அழகரசன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

கூட்டத்தில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1. தமிழ்ப் பெயரையே தலைப்பாகச் சூட்ட ஒப்புக்கொண்ட திரையுலகினரின் முடிவை வரவேற்கிறோம்.

2. தமிழ் பகைவர்களிற்கு இறுதியாக எச்சரிக்கை செய்ய பொதுக்கூட்டம் ஒன்றை 23.10.04 அன்று சென்னையில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

3. திருட்டு வி.சி.டி போன்ற திரையுலகினரின் சிக்கல்களுக்குத் தீர்வுகாண ஆதரவு அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

4. செம்மொழியாக தமிழை அறிவித்த மத்திய அரசுக்கும், அதற்கு நெடுங்காலமாக முயற்சி மேற்கொண்ட தமிழகத் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சோழன் நம்பியார் ஒருங்கிணைத்து நடத்தினார். இறுதியாக தமிழ் வேந்தன் நன்றியுரை வழங்கினார்.

# சமாதான முயற்சிகளில்...

*(01ம் பக்கத் தொடர்ச்சி)*

புலிகள் அதற்கான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்து, அமைதித் தீர்வில் உறுதியாக இருப்பது நம்பிக்கை தருகிறது என்றும் விதார் ஹெல்கிசன் குறிப்பிட்டார். நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலில் சுவிஸ் பல்கலைக்கழக பேராசிரியரும் சுவிஸ் கூட்டாட்சி விவகார நிபுணருமான பிலினரும் கலந்து கொண்டார்.

இதேவேளை, இலங்கையில் விடுதலைப் புலிகளின் பகுதிகளில் மனித உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகள் மேம்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் இயன் மார்ட்டின் தெரிவித்திருக்கிறார். விடுதலைப் புலிகளின் அரசியல் அமைப்புக் குழுவினருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்றும் நேற்று சுவிஸில் நடைபெற்றது. இக்கூட்டத்தை சுவிற்சர்லாந்து மனித உரிமைகள் அமைப்பின் அறிஞர் பாஸ்கெல் பரிஸ்வைல் ஆரம்பித்து வைத்து, விரிவான ஆய்வுரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

சுப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் இயன் மார்ட்டின், இந்த ஆணைக் குழுவின் சட்ட நிபுணர் கொலீன்

பார்க்கர் ஆகியோருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் அருட்திரு கருணாரத்தினம் அடிகளாரும் கலந்து கொண்டார். நீண்டகாலப் போரினால் பாதிப்படைந்த தமிழர் தாயகத்தின் தனிமனித உரிமைகள் பேணப்பட்டு மறுவாழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதன் அவசியம் குறித்தும், தனிமனித உரிமைகளை பேணிப்பாதுகாப்பது தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

### இடைக்கால நிர்வாக சபைக்கு சுவிஸ் ஆதரவு

சமாதானப் பேச்சுகளில் தீர்மானிக்கப்பட்டது போல், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட சாத்தியமான இடைக்கால நிர்வாக சபையொன்று வடக்கு, கிழக்கில் அமைக்கப்படலாமென சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது. சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட மாநாட்டை வரவேற்று சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சிறீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டி வருவதை வரவேற்கின்றோம். சமாதானப் பேச்சுகளை எந்தளவு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ அந்தளவுக்கு விரைவாக இரு தரப்பும் ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் போர்நிறுத்தமும் அமைதி முயற்சிகளும் பெரும் ஆபத்துக்குள் சிக்கியுள்ளன. இந்நிலையில் ஜெனீவாவில் விடுதலைப் புலிகள் நடத்தும் மாநாடு மூலம் எடுக்கப்படும் தீர்மானம் நல்லதொரு செய்தியைத் தரும் என நம்புவதாக சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் முதன்மை அதிகாரி ஏ.எம்.பி.இம்கோவ் தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்துக்கு வருகைதந்துள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்ட குழுவினர், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை கடந்த வெள்ளியன்று சந்தித்துக் கலந்துரையாடினர். சுவிஸ் அரசு வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு உதவி வழங்கி வருவதற்கும் உயர்மட்ட மாநாடு ஒன்றை அங்கு நடத்த உதவியதற்காகவும் அன்ரன் பாலசிங்கம் தமது இயக்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்தார். பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக தமது அமைப்பின் நிலைப்பாட்டை அவர் விளக்கிக் கூறினார். அதன் பின் அங்கு உரையாற்றிய சுவிஸ் முதன்மை அதிகாரி இம்தோவ், சர்வதேச அமைதிக்கான நகரமாக விளங்கும் இந்த நகரத்தில் கூடியிருக்கின்றீர்கள். தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுக்களை மீள ஆரம் பிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்படும் என நம்புகிறோம்.

இந்த மாநாடு சமாதான முயற்சிகளின் நல்லதொரு சமிக்ஞையாக அமையும் எனக் கருதுகிறோம். இந்த முடிவுகள் நோர்வே மற்றும் ஸ்ரீலங்கா அரசுகளுக்கு நல்ல செய்தியாக அமையும். இலங்கையில் நாளாந்தம் மோசமடையும் நிலைமையையிட்டு சுவிஸ் அரசு கவலையடைகின்றது. போர்நிறுத்தமும் பேச்சுக்களும் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளன. இதிலிருந்து விடுபட வேண்டும். சுவிஸ் அரசு சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கும் என்று தெரிவித்தார்.

### சுவிசில் இணைந்துகொண்ட விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு

முன்னதாக விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர், கடந்த 29ம் திகதி சுவிஸ், ஜெனீவா விமான நிலையத்தை வந்தடைந்தபோது, விமான நிலையத்தில் திரண்டிருந்த



புலம்பெயர் வாழ் சுவிஸ் தமிழீழ மக்கள் கைகளில் தமிழீழ தேசியக் கொடிகளையும், மலர்ச்செண்டுகளையும் தாங்கியவாறு விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரை வரவேற்றனர்.

தாயகத்திலிருந்து வருகைதந்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் வியாழனன்று இணைந்து கொண்டனர். இலண்டனிலிருந்து சென்ற அன்ரன் பாலசிங்கம் அவர்களை ஜெனீவா விமான நிலையத்தில் வைத்து அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா, சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளர் குலம் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்றனர். இதன்பின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்துரையாடலை நடத்தினர். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கருத்துக்கள், தகவல்களை சு.ப.தமிழ்ச்செல்வன், அன்ரன் பாலசிங்கம் அவர்களிடம் தெரிவித்தார். இதேவேளை, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமார் அவர்களும் ஜெனீவா சென்று தாயகத்திலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுடன் இணைந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில், இடைக்கால அரசு வரைபு பற்றியும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராயும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடல் கடந்த வெள்ளியன்று பிற்பகல் நடைபெற்றது. ஜெனீவா நகரில் உள்ள விடுதி மண்டபம் ஒன்றில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் படம் வைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நீண்ட விளக்கவுரையை நிகழ்த்தினார். இக் கலந்துரையாடலில் அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், க.வே.பாலகுமாரன், பா.நடேசன், பரா, கௌசல்யன், புலித்தேவன், தமிழ்விழி, செல்வி, திருமதி அடேல் பாலசிங்கம், வி.உருத்திரகுமாரன், அன்டன் பொன்ராசா, சாந்தன், பாஸ்கரன், நேரு குணரட்ணம், இரேனியஸ் செல்வின், ஜெ.மகேஸ்வரன், சட்ட நிபுணர்களான சிவா பசுபதி, போல் டொமினிக், விஸ்வேந்திரன் மற்றும் தம்பி அப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போது ஜெனீவாவில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை சுவிஸ் வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் சந்தித்துப் பேசியிருந்தனர். புலிகளின் இந்த உயர்மட்டச் சந்திப்பு எதிர்வரும் 7ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்திய மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், இத்திட்டத்தின் மூலம் இலங்கை குறிப்பாக தமிழர் தாயகம் பல்வேறு பாதிப்புக்களை எதிர் கொள்ளப்போவதாக ஆய்வுகள் எதிர்வுகூறிய வண்ணம் உள்ளன. இந்நிலையில் இது தொடர்பாக திண்ணை என்ற இணையத் தளத்தில் மதிவாணன் எழுதி வெளியிட்டு ஆய்வுக் கட்டுரையில் இருந்து சில பகுதிகளை இங்கே மீள்பதிப்பு செய்கின்றோம்.

# வாழ்வதற்காக சாகத் துணிந்த மீனவர்களும் சேது சமுத்திரமும்




*(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

சேது சமுத்திரம் கட்டப்படும் போது, உள்ள பணிகளின் காரணமாக பாரம்பரிய மீன்பிடிப் புத் தொழில் பாதிக்கப்படும் என்றும், அவர்களின் வருமானம் மேலும் சரியும் என்றும் நீரி அறிக்கை தெளிவாகச் சொல்கிறது. மேலும், கட்டுமானப் பணிகள் நடக்கும்போது அதன் காரணமாக மீனவ மக்கள் கடற்கரையோரத்தைப் பயன்படுத்துவதிலும் பிரச்சினை வரும் என்றும் நீரி அறிக்கை ஒப்புக் கொள்கிறது. தனுஷ்கோடி மீனவர்கள் நிரந்தரமாக இடம் பெயர வேண்டும் என்றும் சொல்கிறது. மேலும், கால்வாய் தோண்டப்பட்ட பின்னர் மீனவர்கள் கால்வாயை கடக்க நேரம் ஒதுக்கப்படும் என்று நீரி சொல்கிறது. அதாவது மீனவர்கள் கப்பல்களின் நடமாட்டத்தை ஒட்டி கடலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். வானிலை, நீரோட்டம், பருவ நிலை போன்ற பல்வேறு காரணிகளை ஒட்டி மாறும் மீன்பிடி நேரம் கப்பல்களின் நடமாட்டத்தால் மேலும் சுருக்கப்படும் என்பது தெளிவு.

ஆக, திட்டம் தொடங்கிய உடன் மீனவ மக்களின் வறுமை அதிகமாகும். திட்டம் அமுல்படுத்தப்பட்டவுடன் கடல் உயிரி இனங்களின் இடப்பெயர்ச்சி காரணமாக மீனவ மக்களின் வருமானம் தொடர்ந்து அடிவாங்கும். மீனவ மக்களை இடப்பெயர்ச்சி செய்வது அத்தனை எளிதான விடயம் இல்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால், கடற்கரை வளம் பற்றிய பாரம்பரிய உரிமைகளையும் நாம் மாற்ற வேண்டி வரும். அது புதிய மோதல்களைக் கொண்டுவரும்.

சேதுசமுத்திரத்தின் சமூக இழப்பு எவ்வளவு என்பதை நீரி கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. மனிதர்களின் துன்பங்களையும், இழப்புக்களையும் எந்த அளவைக் கொண்டு கணக்கிடுவது?

சூழல் பாதிப்பு பற்றி நீரி சொல்லும் விடயங்கள் மிகத் தெளிவற்ற வார்த்தைகளால் சொல்லப்படுகின்றன. `குறிப்பிடத்தக்கவை அல்ல', `துாரத்தில் இருக்கிறது', `அற்பமானது' என்ற வார்த்தைகளில் சூழல் பாதிப்புகளை ஒதுக்கிவிட முயல்கிறது. ஒருவேளை அது திட்டத்தை அமுல்படுத்துவதற்கான விருப்பத்திலிருந்து தொடங்கலாம். ஆனால், விஞ்ஞானபூர்வ ஆய்வில் விடயங்கள் `கறுப்பு வெள்ளையாக' தெள்ளத்தெளிவாக முன்வைக்கப்பட வேண்டும்.

மன்னார் வளைகுடாவை கடல் வாழ் உயிர் இனங்களின் சரணாலயமாக இந்திய அரசு அறிவித்துள்ளது. அதற்காக ஐக்கியநாடுகளிடமிருந்து நிதியும் பெற்றுள்ளது. இப்பகுதியைப் பாதுகாப்பதற்காக 140 கோடி ரூபாய் திட்டம் உள்ளது.

மன்னார் வளைகுடா கடல் வாழ் உயிரினங்கள் வளமாக நிறைந்துள்ள கடல். இது உலக முக்கியத்துவம் வாய்ந்தது. பிடிபடும் மீன் வகைகள் 441, அவற்றில் அழுக்கானவை மட்டும் 100. மன்னார் வளைகுடாவில் பிடிக்கப்படும் மீன் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் 20% ஆகும்.

இந்நிலையில், 10500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள பாதுகாக்கப்பட்ட கடல் பகுதிக்கு 20 கி.மீ. தொலைவுக்குள் கட்டுமானப்பணிகளைச் செய்வது அரிதான கடல் உயிரினங்களையும், நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும் மீன் செல்வத்தையும், அழிப்பதற்கே இட்டுச்செல்லும். ஆனால், வான் தீவுக்கும் கால்வாயுக்கும் இடைப்பட்ட தூரம் 6 கி.மீற்றர் மட்டுமே. கால்வாயின் மற்றொரு புறத்தில் இருக்கும் தீவுக்கும் கால்வாய்க்கும் இடைப்பட்ட தூரம் ஏறக்குறைய 20 கி.மீ. `கால்வாயை அமைக்க வேண்டிய முடிவில் இருந்து தொடங்கி வான் தீவுக்கு ஆபத்து இல்லை என்று சமாளிப்பு செய்யும் வேலையை நீரி அறிக்கை செய்கிறது.

***எல்லாம் முடிந்து, கால்வாய் கட்டப்பட்டுவிட்டால் என்ன ஆகும்?***

அ) கடல் உயிர் வாழ் மண்டலம் நாம் கண்டுணர முடியாத மாறுதல்களுக்கு ஆளாகும்.

ஆ) மீனவர்கள் கடும் பாதிப்புக்கு ஆளாவார்கள். அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படும்.

(இந்த இரண்டு விடயங்களையும் நீரி `ஒரு மாதிரியாக' ஒப்புக் கொள்கிறது)

இ) கடல்வாழ் உயிரின பாதுகாப்பு மண்டலம் மெல்ல மெல்ல சிதைய ஆரம்பிக்கும்.

ஈ) கடல் நீரோட்டத்தின் காரணமாக மணல் படிவு தொடர்கதையாகும். அதன் காரணமாக மண் அள்ளுவது தொடர்கதையாகும். அதற்கான நிதி செலவு என்ன என்பதை யாரும் சொல்லவில்லை.

***கால்வாயின் பயன்பாடு என்னவாக இருக்கும்?***

அ) தொடர்ந்து தூர்வார வேண்டியிருக்கும்.

ஆ) கால்வாயில் பயணம் செய்வது ஆழ்கடலில் பயணம் செய்வது போல் அல்ல. முன்னோடிக் கப்பல் ஒன்று வழிகாட்டிச் செல்லும் என்று நீரி அறிக்கையே கூறுகிறது. இந்தச் செலவினம், கால்வாயைப் பயன்படுத்துவதற்காக கப்பல் கம்பனி ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்வாக அலுவலக செலவினம், ஈழப்பிரச்சினையின் காரணமான பாதுகாப்புச் செலவினம் உள்ளிட்ட செலவுகளை கால்வாயைப் பயன்படுத்தும் கப்பல் செலுத்த வேண்டியிருக்கும். மேலும், கால்வாயைப் பயன்படுத்துவதற்கான கட்டணத்தையும், செலுத்த வேண்டியிருக்கும். கால்வாய் மூலதனத்தை குறிப்பிட்ட காலத்துக்குள் திரும்ப எடுக்க திட்டமிடப்பட்டிருப்பதால் அது நிச்சயம் அதிகமாகவே இருக்கும். இந்த செலவுகளையும் மற்றும் (கால்வாயில் நுழைய, எரிபொருள் மாற்ற, கால்வாயில் எதிர்வரும் கப்பலுக்காக, முன்னோடி கப்பல் கிடைப்பதற்காக இன்னும் இது போன்ற காரணங்களுக்காகக் காத்திருப்பது, மெதுவாகச் செல்ல வேண்டிய கட்டாயம் ஆகியவற்றால் ஏற்படும்) நேர விரயத்தையும் கணக்கிட்டால், மாற்றுப்பாதையான இலங்கையைச் சுற்றிப் போவதையே கப்பல் கம்பனிகள் விரும்பும். விளைவாக தூத்துக்குடி துறைமுகத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் கப்பல்களைத் தவிர வேறு கப்பல்கள் கால்வாயைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பில்லை.

இ) கால்வாய் வருவதால் வேலை வாய்ப்பு ஏற்படும் என்பது நம்பும்படியான கதை அல்ல. இன்றைய உலகமய பொருளாதாரத்தின் போக்கு `வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி' (Jobless growth) என்பதாகவே மதிப்பிடப்படுகிறது. இதுவரை தமிழகத்தில் அமைக்கப்பட்ட 'போர்டு கார் கம்பனி' போன்ற கம்பனிகள் அளித்துள்ள வேலை வாய்ப்பைக் கணக்கிட்டாலே அது புரியும். 'போர்டு கார் கம்பனி' அளித்துள்ள நேரடி வேலைவாய்ப்பு 1000 பேருக்கு குறைவு. கால்வாய் கட்டப்பட்டு அது இலாபமாக இயங்கி, தொழில் வளர்ச்சி கண்டால் கூட அது பெரிய அளவு வேலை வாய்ப்பை ஏற்படுத்தாது. அவ்வாறு ஏற்படுத்தினால் நமது நாட்டு பொருளாதாரம் உலகமய காலகட்டத்தில் ஜீவிக்க முடியாது. எனவே, வேலை வாய்ப்புகள் உருவாகாத அதேசமயம், கப்பல் கால்வாய் வருகையால் ஏற்கனவே கப்பல் கடல் தொழிலை நம்பியுள்ள பல இலட்சம் மக்கள் வாழ்க்கையை இழப்பார்கள்.

இந்த விபரங்களை அரசாங்கத்திடம் கேட்கும்போது தான் கலாட்டா நடக்கிறது. இதன் பின் உள்ள அரசியலை சற்றே ஊன்றி பார்க்க வேண்டியிருக்கிறது. இத்திட்டத்தால் முதலில் பாதிக்கப்படப் போகிறவர்கள் மீனவர்கள் தான். ஆனால், மீனவர்கள் தமிழகத்தில் ஒரு அரசியல் சக்தியாக இல்லை. அதற்கே உரிய பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்களை ஒரு வாக்கு வங்கியாகப் பார்க்கும் அரசியல் கட்சிகளுக்கு அவர்களை எவ்வாறு கையாள்வது என்பது தெரியும். அதனால் அவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. கடலோர மீனவர் தொகுதி என்ற கோரிக்கையை அவர்கள் காதால் கேட்பது கூட இல்லை.

இந்தத் திட்டத்தால் பலன் பெறப்போகிறவர்கள் தமிழர்கள் இல்லை. அதாவது என்னைப் போன்ற அன்றாடங்காய்ச்சி தமிழர்கள் இல்லை. மாறாக, தென்மாவட்ட முதலாளிகள், அதிலும், தூத்துக்குடி போன்ற துறைமுகங்கள் வளர்ச்சி பெற்றால் வளர, மேலும் முன்னேற வாய்ப்புள்ள முதலாளிகள் இதனால் பயன்பெறுவார்கள். சேதுசமுத்திரக் கால்வாய் வந்தால் வேலை வாய்ப்பு பெருகும் என்பதெல்லாம் காதில் பூச்சுற்றும் வேலை. நான் முன்னமேயே சொன்னபடி வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி என்பது இன்றைய உலகமயக் கொள்கையின் தாரகமந்திரம்.

*இந்தத் திட்டத்தால் பலன் பெறப்போகிறவர்கள் தமிழர்கள் இல்லை. அதாவது என்னைப் போன்ற அன்றாடங்காய்ச்சி தமிழர்கள் இல்லை. மாறாக, தென்மாவட்ட முதலாளிகள், அதிலும், தூத்துக்குடி போன்ற துறைமுகங்கள் வளர்ச்சி பெற்றால் வளர, மேலும் முன்னேற வாய்ப்புள்ள முதலாளிகள் இதனால் பயன்பெறுவார்கள். சேதுசமுத்திரக் கால்வாய் வந்தால் வேலை வாய்ப்பு பெருகும் என்பதெல்லாம் காதில் பூச்சுற்றும் வேலை. நான் முன்னமேயே சொன்னபடி வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி என்பது இன்றைய உலகமயக் கொள்கையின் தாரகமந்திரம்.*

சில கப்பல் கம்பனி முதலாளிகளுக்கு, அதாவது மத்திய அமைச்சரான ரி.ஆர்.பாலு போன்ற கப்பல் கம்பனி முதலாளிகளுக்கு ஆதாயம். மன்னார் வளைகுடா மீன்வளத்தை அள்ளத் துடிக்கும் பன்னாட்டு மீன்பிடி கம்பனிகளின் பெரிய மீன்பிடி படகுகள், கப்பல்கள் கால்வாய் வழியே உள்ளே வரும் என்பதால் அவர்களுக்கும் ஆதாயம்.

திட்டம் அமுல்படுத்தப்படும் போதும் பின்னர் தொடர்ந்தும் செய்ய வேண்டிய மண் அள்ளும் வேலையை குத்தகை எடுக்கும் பன்னாட்டு, இன்னாட்டு மண் அள்ளும் கப்பல் கம்பனி முதலாளிகளுக்கு ஆதாயம்.

திட்டத்தை அமுல்படுத்தும் தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழக தலைவர் ரகுபதி போன்ற அதிகார வர்க்கத்தினருக்கு ஆதாயம். (எப்படி என்று சொல்லவேண்டுமா என்ன?) இத்திட்டத்தைக் கொண்டுவரும் அரசியல்வாதிகளுக்கும் ஆதாயம். எதற்காக கப்பல் துறையை கேட்டு தி.மு.க. ஒற்றைக் காலில் நின்றது என்கிறீர்கள்? நான் சொல்வது புரியவில்லை என்றால், அருகே உள்ள TASMAC கடைக்குச் சென்று, எந்தக் கம்பனி சரக்குகள் அதிகமாக விற்பனை ஆகும்படி பார்த்துக்கொள்ளப்படுகிறது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். அந்தக் கம்பனிகள் யாருக்குச் சொந்தம் என்று, பத்திரிகைகள் எழுதின. இத்திட்டத்தை யார் கொண்டு வந்தது என்று உங்களுக்கே தெரியும். சாராயக் கடைக்கே இப்படியென்றால், 2000 கோடி (இப்போதைக்குச் சொல்லப்பட்டிருப்பது மட்டும்) திட்டத்தை ஏன் கொண்டு வருகிறார்கள் என்று மறுபடியும் சொல்ல வேண்டுமா என்ன?

***நட்டம் மீனவர்களுக்கு. உங்களுக்கு... எனக்கு!***

இவற்றை விட முக்கியமான வேறு சில செய்திகளையும் நாம் பார்க்க வேண்டும்.

இராமேஸ்வரத்தை கடற்படைத் தளமாக்குவது தேசபாது காப்புக்கு அவசியம் என்று சொல்கிறார்கள். தேசம் என்றால், அதில் உங்களுக்கும் எனக்கும் மீனவர்களுக்கும் பெரிய முக்கியத்துவம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பாதுகாத்தாக வேண்டும்.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

**–நன்றி: திண்ணை**

# உதைபந்தாட்டம்

## 205 வது நாடாக நியுகலிடோனியா

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் 205வது நாடாக அவுஸ்திரேலியப் பிராந்தியத்திலுள்ள நியுகலிடோனியா எனும் சின்னஞ்சிறிய நாடு இணைந்துள்ளது. 2,20,000 மக்கள் தொகையைக் கொண்ட இச்சிறிய நாடு தமக்கான உதைபந்தாட்டச் சம்மேளனத்தை 1928ம் ஆண்டு உருவாக்கியபோதும் பிரான்சின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தமையின் விளைவாக, அதனின்றும் விடுபடுவதற்கான அரசியல் போராட்டத்தின் எதிரொலியால் இதுகாலவரை சர்வதேசத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளமுடியாமல் போய்விட்டது. 1966ம் ஆண்டு அவுஸ்திரேலியப் பிராந்தியச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றிய இவர்கள் 1999ம் ஆண்டேஇப்பிராந்திய சம்மேளனத்தில் இணைந்து கொண்டனர்.

2000ம் ஆண்டு முதல் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கத்துவம் பெறுவதில் ஆர்வம் காட்டிய இவர்களிற்கு பிரெஞ்சு உதைபந்தாட்டச் சம்மேளனமும், சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன நிர்வாக உறுப்பினரான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முன்னாள் பிரபல உதைபந்தாட்ட வீரர் மிசெல் பிளற்றினியும் பின்புலமாக இருந்து உதவி புரிந்துள்ளனர். 8200 வீரர்களை தன்னகத்தே கொண்ட இந்நாட்டில் பதின்மூன்று முதல்பிரிவு அணிகள் உட்பட 125 தொழில் சாரா கழகங்களும் உள்ளன. இன்று உலக வரிசைப்படுத்தலில் 119 புள்ளிகளுடன் 186 வது இடத்தை வகிக்கும் இவர்களிற்கு நமது தாய்நிலம் எவ்வகையிலும் சளைப்பற்றபொழுதும், நமக்கு அந்த அந்தஸ்த்துகிடைக்கும் காலம் எப்போ?.






# தண்டிக்கப்பட்ட 'றோமா' அணி



2004-2005 கால ஆண்டிற்கான ஐரோப்பிய முதன்மைக் கழகச் சம்பியன் தொடரின் இறுதிக் குழுநிலை ஆட்டங்கள் கடந்த 14ம் 15ம் திகதிகளில் ஆரம்பமாகின. 15ம் திகதி இத்தாலியின் ஏ.சி.றோம் - உக்ரெய்னின் டியனமோ கியவ் அணிகளிடையேயான ஆட்டம் றோம் மைதானத்தில் நடைபெற்றது. ஆட்டத்தின் 29வது நிமிடம் டியனமோ கியவ் அணிவீரர் கவ்ரனிக் அடித்த கோலினால் முன்னணி வகிக்க -43வது நிமிடம் றோமா அணியின் பின்னிலை பாதுகாப்பு வீரர் பிலிப்மெக்சஸ் டியனாமோ கியவ் வீரரான லெற்றன் வெர்பகோவ்ஸ்கிஸ்சை காலால் உதைத்ததனையடுத்து அவர் உடனடியாக நடுவரால் சிவப்பு அட்டைத் தண்டனை பெற்று வெளியேறினார். இவ்விரு நிகழ்வுகளாலும் ஆத்திரமுற்றிருந்த ஆதரவாளர்கள் இடைவேளையின்போது உடைமாற்றும் இடத்திற்குச் செல்ல முனைந்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த நடுவர் அன்டேர்ஸ் பிறிஸ்க் என்பவரை நோக்கி தமது கைகளில் இருந்த பொருட்களால் எறிந்தனர். இவற்றில் முக்கியஸ்தர்கள் பகுதியில் (VIP galary)இருந்து வந்த நாணயக்குத்தி ஒன்று நடுவரின் நெற்றியை தாக்கியது. இதனால் இரத்தப் பெருக்கெடுக்க அவர் நிலத்தில் சாய்ந்தார்.

இதனை அடுத்து அந்நடுவர் பாதுகாப்புடன் மருத்துவர்களால் அழைத்துச் செல்லப்பட்டார். ஆட்டத்தை தொடர்ந்து நடாத்தக்கூடியநிலையில் தனது உடல் நிலை இல்லை எனக்கூறி ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார். இதுபற்றிய முறைப்பாடுகள் நடுவர், உதவிநடுவர், நான்காவது நடுவர், ஐரோப்பிய உதைபந்தாட்டச் சம்மேளனப் பிரதிநிதிகளிடம் இருந்து கோரப்பட்டது. இது பற்றிய விசாரணைகள் 22.09.2004 அன்று சுவிஸ் நாட்டின் நெயொன் நகரில் கூடிய ஐரோப்பிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஒழுங்குக் கட்டுப்பாட்டு குழு உன்னிப்பாக ஆராய்ந்த பின்னர் பின்வரும் முடிவுகளை உறுதிப்படுத்தியது.

1. றோமா அணியுடன் ஆட்டத்தில் ஈடுபட்ட டியனாமோ கியவ் அணிக்கு 3:0 எனும் நிலையில் வெற்றியை அளிப்பது.

2. இச் சுற்றுப்போட்டியில் அடுத்த இரு தமது கழக மைதான ஆட்டங்களை ஆதரவாளர்களற்ற நிலையில் நடத்தல்

3. டியனாமோ கியவ் வீரரை உதைத்த பிலிப்மெக்சஸ் இற்கு அடுத்த இரு ஆட்டங்களிற்கான தடைவிதிப்பு.

இதன் பிரகாரம் 03/09, 08/12 ஆகிய திகதிகளில் முறையே ஜேர்மனியின் வெயர் லிவர்குசன், ஸ்பெயினின் றியல் மட்றிட் ஆகிய அணிகளிற்கு எதிரான இரு முக்கிய ஆட்டங்களை தமது ஆதரவாளர்கள் அற்ற நிலையில் விளையாடும் போது ஏற்பட இருக்கும் பல இலட்சம் யூறோ நட்டத்துடன் வெற்றி வாய்ப்பு அற்ற பெறுபேறு ஏற்படும் போது, இன்னும் பல மடங்கு நிதி இழப்பு றோமா அணிக்கு ஏற்படும். போட்டிகள் வலுவானவையாக இருக்கவேண்டுமேயன்றி, வல்லாண்மை கொண்டவையாக இருந்தால் அது விளையாட்டின் மேன்மைக்கே இழுக்கை ஏற்படுத்தும்.

# சாதனைகளுடன் முற்றுப்பெற்ற ஒலிம்பிக்போட்டி

*304* உலக சாதனை
*448* அங்கவீனர் ஒலிம்பிக் சாதனை
*519* தங்கப்பதக்கம்
*517* வெள்ளிப்பதக்கம்
*532* வெண்கலப்பதக்கம்
*2763* வீரர்கள்
*1206* வீராங்கனைகள்
*8,00,000* பார்வையாளர்கள்
*3,000* ஊடகவியலாளர்கள்
*50* தொலைக்காட்சி நிறுவனங்கள்

இவ்வாறு பன்னிரண்டாவது அங்கவீனர் கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 28.09.2004 அன்று முடிவுற்றது. 17.09.2004 அன்று கோலாகலமாக தொடங்கிய இவ்விளையாட்டு விழாவானது 28.09.2004 அன்று இறுதி நாள் நிகழ்வினைப் பார்வையிடச் சென்ற கிரேக்க நாட்டு பள்ளி மாணவ, மாணவிகள் எழுவர் பேருந்து விபத்தில் இறந்ததால் வாணவேடிக்கை உட்பட பெரும்பாலான நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டு சோகத்துடன் முடிவுற்றது. எதேன்ஸ் மாநகர முதல்வர் டொரு வக்கோயணி 2008ம் ஆண்டு பதின்மூன்றாவது போட்டியினை நடத்தவுள்ள சீனாவின் வெய்ஜிங் மாநகர துணை முதல்வரிடம் அங்கவீனர் ஒலிம்பிக் கொடியினை கையளித்தார். அதனைத் தொடந்து பதினொரு நாட்களாக பிரதான மைதானத்தில் சுடர் ஒளி பரப்பிக் கொண்டிருந்த ஒலிம்பிக் தீபம் அணைக்கப்பட்டு நிகழ்வுகள் முற்றுப்பெற்றன.

| | உலக சாதனை | | அங்கவீனர் ஒலிம்பிக் சாதனை | |
|---|---|---|---|---|
| போட்டி | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| அம்பெய்தல் | 3 | 4 | 7 | 6 |
| தடகளம் | 85 | 59 | 140 | 70 |
| ஈருளி | 10 | 8 | 14 | 70 |
| பளுதூக்குதல் | 4 | 21 | 7 | 27 |
| குறிபார்த்து சுடுதல் | | 13 | | 13 |
| நீச்சல் | 59 | 38 | 99 | 56 |
| மொத்தம் | | 304 | | 448 |

இப் பன்னிரண்டாவது ஒலிம்பிக்கில் பத்தொன்பது வகையான விளையாட்டுக்கள் இருபது இடங்களில் நடைபெற்றன. இப் பத்தொன்பது விளையாட்டுக்களில் பதினைந்து விளையாட்டுக்கள் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் அடங்கும். இவ் விளையாட்டு விழாவின் போது அறுநூறு வீரர், வீராங்கனைகள் ஊக்கமருந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு போட்டியாளர்கள் ஊக்க மருந்து உட்கொண்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சீனா 63 தங்கப்பதக்கம், 46 வெள்ளிப் பதக்கம், 32 வெண்கலப்பதக்கம் பெற்று, முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. இப் போட்டித் தொடரில் எழுபத்தாறு நாடுகள் பதக்கம் பெற்றுள்ளன. இவற்றில் முதல் பத்து இடங்களைப் பெற்றுள்ள நாடுகள் வருமாறு,

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 63 | 46 | 32 | 141 |
| பிரித்தானியா | 35 | 30 | 29 | 94 |
| கனடா | 28 | 19 | 25 | 72 |
| ஐ-அமெரிக்கா | 27 | 22 | 39 | 88 |
| அவுஸ்ரேலியா | 26 | 38 | 36 | 100 |
| உக்ரெயின் | 24 | 12 | 19 | 55 |
| ஸ்பெயின் | 20 | 27 | 24 | 71 |
| ஜேர்மனி | 19 | 28 | 32 | 79 |
| பிரான்ஸ் | 18 | 26 | 30 | 74 |
| ஜப்பான் | 17 | 15 | 20 | 52 |

இம்முறை எதேன்சில் நடைபெற்ற இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் ஆசிய நாடுகளினது திறமை வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தனிக்காட்டு ராஜாக்களாக தம்மை நினைத்துக் கொள்பவர்களுக்கு, இவர்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.




S.A: Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

CREDIT வங்கிகடன் S.A.NATHAN

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# தீபாவளியை முன்னிட்டு
# Zurich மாநகரில் Basel SPT யின்
# மாபெரும் மலிவு விற்பனை

09.10.04 சனி - 10.10.04 ஞாயிறு - 11.10.04 திங்கள் மூன்று நாட்களும்
Volks Haus மண்டபம் - Stufecher Str 60 - Zurich



KOLAM சாறி ~~380~~ 220 Sfr
KOLAM சாறி ~~290~~ 160 Sfr
புதிய **Modern** பஞ்சாபிகள் 10Sfrல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நகைகள் உங்கள் எண்ணம் போல் பலதரப்பட்ட டிசைன்களில் மிக மிக மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



2005-ம் ஆண்டுக்குரிய அனைத்து விதமான புதிய (Model) அனைத்து ஆடைகளையும் வழமைபோல் மிக மிக மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

பாசல் ரவி கடை - *061/272 09 90 - 079/356 22 78*

# தீபாவளியை முன்னிட்டு
# Bern மாநகரில் Basel SPT யின்
# மாபெரும் மலிவு விற்பனை

02.10.04 சனி - 03.10.04 ஞாயிறு - **இரண்டு நாட்களும்**
Restaurent Mappamondo - Langasse Str 44 -3012 Bern

*Bern* புகையிரத நிலையத்தில் இருந்து *Langasse* நோக்கிச் செல்லும் 12-ம் இலக்க பஸ்சில் 3-வது தரிப்பிடம்.
காரில் வருபவர்கள் ***Bern Autobatan***-ல் ***Insel Ausfhrt*** எடுத்து ***Langasse*** நோக்கி வரவும்



KOLAM சாறி ~~380~~ 220 Sfr
KOLAM சாறி ~~290~~ 160 Sfr
புதிய **Modern** பஞ்சாபிகள் 10 Sfr இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நகைகள் உங்கள் எண்ணம் போல் பலதரப்பட்ட டிசைன்களில் மிக மிக மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

*2005-ம்* ஆண்டுக்குரிய அனைத்து விதமான புதிய *(Model)* அனைத்து ஆடைகளையும் வழமைபோல் மிக மிக மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

பாசல் ரவி கடை - *061/272 09 90 - 079/356 22 78*

# கொழும்பில் வலிமைமிக்க 28 பாதாள உலகக் குழுக்கள் !

## சில அரசியல்வாதிகள், பொலிஸ் உயரதிகாரிகள் இவர்களுக்கு உதவி

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் தற்போது மிகவும் சக்திமிக்க 28 பாதாள உலகக் கோஷ்டிகள் இயங்கிவருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. கொழும்பு மாநகரினுள்ளும் அதற்கு வெளியேயும் அண்மைக்காலமாக பாரிய குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதில் முக்கியமாக படுகொலைகள் முதலிடத்தை பெறுகின்றன. இந்நிலையில் கொழும்பு மாநகரினுள் இடம்பெறும் பாரிய குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக புதிய திட்டங்களைத் தயாரித்து வரும் சிறீலங்கா பொலிஸ் தலைமையகம் இது தொடர்பாக நடத்திய ஆய்வில், இந்த விபரம் தெரியவந்துள்ளது.

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள்ளிருந்து செயற்படும் 28 சக்திமிக்க பாதாள உலகக் குழுக்களில் 300ற்கும் மேற்பட்டோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களிடம் ரி-56 ரக துப்பாக்கிகள், தன்னியக்க துப்பாக்கிகள், தன்னியக்க பிஸ்ரல்கள், 9 மீ.மீற்றர் ரக பிஸ்ரல்கள், கைக்குண்டுகள் உட்பட பெருமளவு நவீன ஆயுதங்களும் வெடிபொருட்களும் இருப்பது தெரியவந்துள்ளது. அத்துடன், இந்த 28 பாதாள உலகக் குழுக்களும் கொழும்பு மாநகரை 28 குற்ற வலயங்களாக்கி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரதேசத்தில் தங்கள் பலத்தைப் பிரயோகித்து வருகின்றனர்.

கொந்தராத்துக் கொலைகள், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், கப்பம் அறவிடுதல் மற்றும் பாலியல் வல்லுறவென பல்வேறு மோசமான குற்றச்செயல்களுக்கும் இவர்கள் காரணமாயுள்ளனர். இந்தக் குழுக்களில் தங்களுக்கிடையில் பலப்பரீட்சையில் ஈடுபட்டு ஒருவர் மீது ஒருவர் தாக்குதல்களை நடத்தி வருகின்ற போதிலும், பல குழுக்கள் தங்களுக்கிடையே நல்ல தகவல் பரிமாற்றங்களை மேற்கொண்டு, குற்றச் செயல்களுக்கெதிராக பொலிசார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முறியடித்து அல்லது அதனை செயற்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

பெரும்பாலான பாதாள உலகக் குழுக்களில், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர். அத்துடன், இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் மூலமும் வேறு வகையிலும் இவர்களுக்கு ஆயுதங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இந்தப் பாதாள உலகக் கோஷ்டிகளில் பல, சக்திமிக்க அரசியல்வாதிகளினதும் சில உயர் பொலிஸ் அதிகாரிகளதும் ஆசியுடன் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இதே வேளை, மேற்படி சக்திமிக்க பாதாள உலகக் கோஷ்டிகளை விட சிறிய அளவிலும் பல பாதாள உலகக் கோஷ்டிகள் செயற்படுவதாகிறது.

## மிலிந்த மொரகொட தீக்ஷித்துடன் நீண்டநேரம் பேச்சு

(03.10.04)

இந்தியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொரகொட கடந்த வியாழக்கிழமை புதுடில்லியில் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.தீக்ஷித்தை சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத நடுப்பகுதியில் இந்தியாவிற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதால்



அதற்கான இறுதி ஒழுங்குகளைச் செய்யும் வகையில் இந்தியா சென்றிருந்தபோதே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் சமாதான செயற்பாடுகள் மற்றும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தீக்ஷித், மிலிந்த மொரகொடவிடம் விரிவாகக் கேட்டறிந்து கொண்டதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேபோல் சேது சமுத்திரம் அகழ்வு தொடர்பிலும் இருவரும் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதே வேளை, இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளையும் மிலிந்த மொரகொட சந்தித்துக் கலந்துரையாடியிருக்கிறார்.

## அரசில் ஜே.வி.பி...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாகத் தனது கருத்துகளை வெளியட்டுள்ள, சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்திருப்பதாவது, இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கமைய பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதை ஜே.வி.பி. எதிர்க்கின்றது. இதுவே எமது உறுதியான நிலைப்பாடாகும். எனவே அரசாங்கம் இதனடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது. இதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டே அரசாங்கத்தை உருவாக்கினோம். இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். இறுதித் தீர்வு என்ன என்பதன் அடிப்படையிலேயே இது அமைய வேண்டும், என்று ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

## வாழ்வதற்காக சாகத் துணிந்த மீனவர்களும் சேது சமுத்திரமும்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இந்துமகா சமுத்திரத்தில்
நமது கப்பல் படையின் ஆதிக்
கத்தை விரிவுபடுத்த வேண்டும்.
கல்பாக்கம் தொடங்கி, அருமணல்
கிடைக்கும் கன்னியாகுமரி வரை,
கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த
இராணுவ தொழில் அமைப்பு
களைப் பாதுகாத்தாக வேண்டும்.

ஆனால், ஆள்பவர்களைப்
போன்ற முட்டாள்கள் என்றும்
இருந்ததில்லை. அவர்கள் நுனி
மரத்தில் இருந்துகொண்டு
அடிமரத்தை வெட்டுவார்கள்.
மீனவர்களுக்கு பாதிப்பு
ஏற்படுத்துவதால், சூழல்
பேரழிவை ஏற்படுத்துவதால்,
திட்டத்தின் அமுலாக்கத்தை
ஒட்டியும், முன்னேயும்
பின்னேயும் சேதுசமுத்திரம்
வெட்டப்படுவது கடும் சமூகப்
பதற்றத்தை ஏற்படுத்தும்.

சென்னை கடற்கரையை
அழகுபடுத்தி பன்னாட்டு
நாய்களுக்கு, மன்னிக்கவும்,
கம்பனிகளுக்கு அளிப்பது, நவீன
கட்டுமான முதலாளிகளுக்கு
அளிப்பது என்ற எம்.ஜி.ஆர்.
காலத்தில் தொடங்கிய
முயற்சியை இன்றுவரையும் கூட
யாராலும் நடைமுறைப்படுத்த
முடியவில்லை. அன்று துப்பாக்
கிக் குண்டுகளுக்குப் பலியான
மீனவர்கள் ஒரு செய்தியைச்
சொல்லி சென்றிருக்கிறார்கள்.

மீனவர்களின் அன்றாட வாழ்வு
கடலோடு மட்டும் அல்ல, மரணத்
தோடும்தான். வாழ்வதற்காக
சாகத்துணிந்தவர்கள் அவர்கள்.
ஆட்சியாளர்கள் இந்த செய்தியைப்
புரிந்துகொள்ளும்போது, அது காலம்
கடந்த புரிதலாக இருக்கும்.

-நன்றி: திண்ணை

## தேசிய ஆலோசனை சபையை ஹெல உறுமய பகிஷ்கரிப்பு

(04.10.04)

விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சு நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட்டப்படவுள்ள தேசிய ஆலோசனைச் சபையில் தமது கட்சி அங்கம் வகிக்கப் போவதில்லை என்று சிங்கள இனவாத அமைப்பான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால விடுத்துள்ள அழைப்பை நிராகரித்துள்ள ஜாதிக ஹெல உறுமய, அது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில், இந்தக் கூட்டம் வெறும் ஆலோசனைக் கூட்டமாகவே இருக்கும். இப்படிப்பட்டதொரு ஆலோசனை சபையை தயாரிக்க முன்னர், அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து தமிழ் தீவிரவாதம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் ஹெல உறுமய ஆதரிக்காது. இதேவேளை, அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனைகளுடன் தான் பேச்சு நடத்தச் செல்ல வேண்டும் என்றும் ஹெல உறுமைய தெரிவித்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க, தேசிய சமாதான ஆலோசனை சபையில் பங்கேற்பதற்கு முன்னர், ஜனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு ஒன்றுக்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது. காங்கிரசின் அரசியல் உயர்பீடம் இதற்கான முடிவை எடுத்துள்ளது. இதனையடுத்து சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்திரிகாவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் உத்தேச ஆலோசனை சபை தொடர்பாக தாம் ஜனாதிபதியிடம் சில விளக்கங்களை பெற வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


**சகல திருத்த வேலைகளுக்கும்**

றெஸ்ரோரண்ட் (BAR) அடித்தல், வீட்டு கூரை வேலைகள், சமயலறை அலுமாரிகள், படுக்கையறை அலுமாரிகள் அனைத்து வேலைகளுக்கும், மாபிள் பதித்தல், மின்சார இணைப்புக்கள், குடிநீர் இணைப்புக்கள், பேப்பர் ஒட்டி பெயின்ற் அடித்தல், இரும்பு வேலைகள், கடை இரும்பு சட்டர், P.V.C. ஜன்னல் மாற்றுதல் போன்ற சகல வேலைகளும் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.



தொடர்களுக்கு - கதிர் : 06 27 46 49 31



**உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.**

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில்
பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

**தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

# பனிச்சங்கேணி காவலரண் மீதான தாக்குதல் தொடர்பாக மட்டு - அம்பாறை அரசியற்துறை அறிக்கை

(03.10.04)

மட்டக்களப்பு - பனிச்சங்கேணி பிரதேசத்திலுள்ள தமது முன்னணிக் காவலரண் மீது கடந்த 28ம் திகதி காலை 11.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜி தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை அறிக்கையொன்றை வெளியிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக அரசியற்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிரிமிச்சையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருந்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின்போது - புலிகளின் காவலரண்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை, அதற்கு மேலாகச் சென்ற ஆர்.பி.ஜி எறிகணைகள் வீடுகளில் விழுந்து வெடித்ததில் இரண்டு பெண்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து புலிகள் பதுங்கித் தாக்குதல் நடத்தி, தாக்குதல் நடத்தியவர்களை விரட்டியடித்துடன் அப்பகுதிகளில் தேடுதல்களையும் மேற்கொண்டனர். இந்தச்சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர் பனிச்சங்கேணியைச் சேர்ந்த எஸ்.காளிப்பிள்ளை (40) எனவும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் கே.உதயச்செல்வி (37) எனவும் மட்டக்களப்பு வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. காளிப்பிள்ளை என்ற பெண் தலையில் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் முன்னணி காவலரணை இலக்குவைத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து சிறீலங்காப் புலனாய்வுப் பிரிவினர் கருணா குழுவினரைப் பாவித்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, பனிச்சங்கேணியிலுள்ள முன்னணிக் காவல் நிலைகள் மீதான தாக்குதல், யுத்த சூன்யப் பிரதேசத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் விசாரணையின் போது தகவல்கள் வெளியாகியுள்ளன. சம்பவ இடத்திற்கு நேரில் சென்று போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விசாரணையை மேற்கொண்டனர். பொதுமக்களின் தகவல்களின் படி குறிப்பிட்ட காவல் நிலைகளிலிருந்து தென்மேற்காக 300 மீற்றர் தொலைவிலிருந்து இரண்டு எறிகணைகள் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்ட ஆயுதபாணிகள், கிழக்குப்பக்கமாக தப்பிச் சென்றுள்ளனர்.

அத்துடன் இராணுவச் சீருடை தரித்த 15 பேர் வரை இந்த தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் குடியிருப்புக்களின் மீது விழுந்த இரண்டு எறிகணைகளில் ஒன்று வெடிக்காத நிலையில் காணப்பட்டுள்ளதாக விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. இராணுவத்தினரின் உதவியுடன் தேசவிரோதக் கும்பலே இத் தாக்குதலை மேற்கொண்டதாக, முன்னணி காவல் நிலைகளில் கடமையிலிருந்த போராளிகள் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளனர்.

# கிளிநோச்சியில் கராத்தே பயிற்சிப் பாசறை!



(03.10.04)

ஜப்பானைச் சேர்ந்த 8வது கறுப்புப் பட்டி போதன ஆசிரியரான சென்சி மசோ கவாசோ அவர்களின் சர்வதேச தொடர்பாளர் சென்சி சிமிற் (6வது கறுப்பு பட்டி) அவர்களால் கிளிநொச்சியில் பயிற்சிப் பாசறையொன்று நடாத்தப்பட்டது. கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் இடம்பெற்ற இப்பாசறையில் தமிழீழத்தின் 8 மாவட்டங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரவீராங்கனைகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி நெறி தமிழீழ விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது. ஆரம்ப நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து பயிற்சிகளை சென்சி சிமித் அவர்கள் வழங்கினார்.





இதுஇவ்வாறிருக்க, கராத்தே பாசறையில் கலந்துவிட்டு திரும்பியவர்கள் விளக்குவைத்தகுளம் சோதனைச் சாவடிக்கு வருவதற்கு பத்து நிமிடங்கள் தாமதமாகி விட்டமையினால் படையினர் உள்ளே வர அனுமதிக்கவில்லை. திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களின் பாடசாலை மாணவர்களும் கழகங்களின் உறுப்பினர்களும் இரு பேரூந்துகளில் வந்திருந்தனர். தமது பயணம் விளக்குவைத்தகுளம் பகுதியில் தடைப்பட்டதால் தொடர்ந்தும் பயணத்தை மேற்கொள்ள படையினரிடம் அனுமதியைப் பெற்றுத் தருமாறு தமிழ் கூட்டமைப்பின் வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோரிடம் முறையிட்டனர். அவரது முயற்சியையடுத்து பயணத்தைத் தொடர அனுமதித்துள்ளனர்.

# சிங்களவர்களின் முயற்சியை முறியடிக்க வேண்டும்

## தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

(03.10.04)

சேது சமுத்திரத் திட்டத்தை சிங்களவர்கள் விரும்பவில்லை. அதனால் தமிழகத்திலுள்ளோரை தூண்டிவிட்டு திட்டத்துக்கு எதிராக பிரசாரம் செய்கின்றனர் என்று, தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். தாம்பரத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கருணாநிதி, 100 ஆண்டுகளுக்கும் மேலாக பரிசீலிக்கப்பட்டு கைவிடப்பட்ட சேது சமுத்திரத் திட்டம் இப்போது நிறைவேறும் வாய்ப்பு உருவாகியுள்ளது. முன்னைய ஆட்சியில் பிரதமர் வாஜ்பாயிடம் இத்திட்டம் குறித்து வலியுறுத்தினோம். நிறைவேற்றுவதாக உறுதியளித்தும் அவர் அதனை செய்யவில்லை.

2 ஆயிரம் கோடி ரூபா செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமென்ற மகிழ்ச்சியான அறிவிப்பு இப்போது வெளியாகியுள்ளது. இது நிறைவேற்றப்படும் தினம் எனக்கு மகிழ்ச்சியான நாள். நான் பெரும் பேறுபெற்ற நாள்.

வஞ்சகத்தை முறியடிக்க வேண்டும். ஒரு நல்ல விடயம் நடக்கும் போது சிலர் குறுக்கால் ஓடுவார்கள். இத்திட்டம் நிறைவேறினால் கடலில் பவளப் பாறைகள் அழியுமென சிலர் கூறுகின்றனர். மீனவர்கள் பாதிக்கப்படுவார்களென சிலர் பிரசாரம் செய்கின்றனர். உண்மையில் இத்திட்டம் தொடங்கப்படுவது சிங்களவர்களுக்கு பிடிக்கவில்லை. இங்குள்ளவர்களை அவர்கள் தூண்டிவிட்டு இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதைச் செய்வது சிங்கள அரசா? தனிநபர்களா? சிங்கள வர்த்தகர்களா? என்று தெரியவில்லை. எது எப்படி நடந்தாலும், இது போன்ற வஞ்சக முயற்சிகள் எடுபடாமல் முறியடித்து இத்திட்டத்தை நிறைவேற்றி காட்ட வேண்டிய பொறுப்பு தமிழராகப் பிறந்த அனைவருக்கும் உண்டு.

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.




மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்
Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்
சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்
மோகன் ஜுவல்லர்ஸ்
வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes
என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

MOHAN JEWELLERS & TEXTILES
Elisabethen anlage 25
4051 Basel
Tél - 061 271 41 09
Fax - 061 271 41 17
WWW.mohantextiles.com

# பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்

# அமெரிக்க தூதுவரிடம் தமிழ்க் கூட்டமைப்பு வேண்டுகோள்

(03.10.04)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் மீண்டும் ஆரம்பிக்குமாறு சிறீலங்கா ஜனாதிபதிக்கும் அவரது கூட்டமைப்பு அரசிற்கும் அமெரிக்க அரசு அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழ் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. கொழும்பிலுள்ள சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதரகத்தில் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரட்டுக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் சர்வதேச விவகாரங்க



ளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன் ஆகியோருக்குமிடையே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இச் சந்திப்பின்போது தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான பற்றீசியா மெகோனியும் கலந்து கொண்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் பதவியேற்று 5 மாதங்கள் கடந்த நிலையிலும் சமாதானப் பேச்சுகள் தொடர்பான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சமாதான முயற்சிகள் தொடர்பான ஜனாதிபதியின் நடவடிக்கைகளில் நேர்மைத் தன்மையும் தெளிவுமில்லை. அத்துடன் அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இடைக்கால நிர்வாகசபை ஆலோசனைகளை எதிர்ப்பதுடன் சமாதான முயற்சிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது.

அதேநேரம் அரசபடையினரின் துணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சில ஆயுதக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்கள் யுத்தத்தைத் தூண்டுவனவாகவேயுள்ளது. சமாதானப் பேச்சுகளை தொடர்வதற்கு மிகவும் பிரதான விடயம் போர் நிறுத்தமாகும். எனவே அரசின் இவ்வாறான நடவடிக்கைகளும் தெளிவற்ற, நிலைப்பாடும் படையினரின் துணையுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களின் தாக்குதல்களும் போர் நிறுத்தத்திற்கு ஆபத்தை உருவாக்கலாம். எனவே யுத்த நிறுத்தத்திற்கு ஆபத்து ஏற்படாத வகையில் உடனடியாக சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான அழுத்தத்தை அமெரிக்கா கொடுக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## கருணா குழு...

(32ம் பக்கத் தொடர்ச்சி)

கருணா குழுவைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் காயமடைந்தனர். 2ம் திகதி காலை 6.30 மணியளவில் கருணா குழுவினர் சுமார் 10 பேர் தங்கியிருந்த மறைவிடம் ஒன்றின் மீது இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு கருணா குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர் ஏனையோர் அங்கிருந்து தப்பியோடி விட்டனர். கொல்லப்பட்ட இருவரது சடலங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டு வாகரைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இவற்றை எடுத்துச் செல்லுமாறு பெற்றோருக்கு புலிகள் அறிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் ஆயுத தளவாடங்களும் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்த்துறை அறிவித்துள்ளது.

வாகரைப் பிரதேசம் மதுரங்குளம் ஓமடியாமடுவில் இடம் பெற்ற அதிரடி நடவடிக்கை தொடர்பாக அறிக்கையொன்று மட்டு. - அம்பாறை அரசியல்துறையினரால் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நேற்று (2ம் திகதி) சனிக்கிழமை காலை 6.45 மணியளவில் வாகரை ஓமடியாமடுவில் தேசவிரோத கும்பல்களில் ஒன்றான கருணா குழு மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் அந்த குழுவைச் சேர்ந்த நித்தி மற்றும் கஸ்ரோ ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் தப்பியோடி விட்டார்கள். தொடரிலக்கம் அழிக்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியொன்று, ஆர்.பி.ஜி. எறிகணைகள், கிளைமோர் கண்ணிவெடிகள், வயர்கள், மற்றும் இராணுவ தளபாடங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட நித்தி பனிச்சங்கேணியிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி காவல் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதல்களுக்கும், இதன் காரணமாக 50 வயதுடைய கணபதி காளிப்பிளை என்பவரின் மரணத்திற்கும், இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவமொன்றிற்கும் நேரடியாகப் பொறுப்பானவர் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அகதிகளை இலங்கை...

(32ம் பக்கத் தொடர்ச்சி)

திகள் உடனடியாக திருப்பியனுப்பப்படும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கும்படி கூறியுள்ளார்.

இலங்கையில் இன்னும் பாதுகாப்பான, அமைதியான சூழல் காணப்படவில்லையென்றும், நடைமுறை அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தைகளில் இணக்கம் தெரிவிக்கவில்லையென்றும், இதனால், இலங்கையின் நிலைமை மோசமாகி வருவதாகவும் ஜயலத் அவ்விடத்தில் தெரிவித்தார்.

மேலும், அவர் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்து தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமென்றும் குறிப்பிட்டார். தொடர்ந்தும் அவர் தென் இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளதாகவும் அவர்கள் தொடர்பாகவும் கூடிய கவனம் எடுக்கும்படியும் யூ.என்.எச்.சி.ஆர். அமைப்பின் அகதிகள் தொடர்பான உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகதிகள் தொடர்பாக இலங்கையிலுள்ள முதலாவதும், ஒரேயொரு அமைச்சர் என்ற ரீதியில், ஐரோப்பிய நாடுகளிலுள்ள அகதிகள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவதை தாமதப்படுத்துமாறு ஜயலத் ஜயவர்தன விடுத்த வேண்டுகோளை, தாம் வரவேற்பதாக யூ.என்.எச்.சி.ஆர். அமைப்பின் அகதிகள் தொடர்பான உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்.....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க முடியாது. அரசியல் கொலைகளானது முக்கியமாக உள்நாட்டுப் பிரச்சினை என்பதால் இதனை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர தாங்கள் எவ்வித உறுதிமொழியையும் வழங்கப் போவதில்லையென்றும் கூறினார்.

## பேராசிரியர் சிவத்....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இடம்பெறவிருக்கிறது. செங்கை ஆழியானின் நாவலுக்கும், எஸ்.முருகானந்தனின் தரை மீன்கள் என்ற சிறுகதைத் தொகுதிக்கும், சிறுவர் இலக்கியத்துக்கென ஏ.கே.குணநாதனின் ஆக்கமும், மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கென என்.சிவலிங்கம் மொழிபெயர்த்த வேலுப்பிள்ளையின் தேயிலை என்ற ஆக்கத்துக்கும், கவிதைத்துறையில் முளாய் முஸ்தபா என்பவரின் தொகுதிக்கும் இம்முறை இலக்கிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## இது எப்படியிருக்கு....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

விமானப் படையினரின் உலங்குவானூர்திகளுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கான பயணத்துக்காக ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவாகிறது. இதன் அடிப்படையில் சமாதான முன்னெடுப்புகளுக்காக இதுவரை சிறீலங்கா விமானப் படையினரின் உலங்குவானூர்திகள் ஆயிரத்து இருநூற்று 70 மணித்தியாலங்கள் தமது பயணங்களை மேற்கொண்டுள்ளன. சுமார் 500 பயணங்கள் மூலம் இந்த மணித்தியாலங்கள் கணக்கிடப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் பெல் 212, பெல், 412 மற்றும் எம்.ஐ-17 ஆகிய உலங்குவானூர்திகள் சமாதான பயணங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள போதும், அதற்கான செலவுகள் யாவும் பயற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதாகவே பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எத்தனை ஆயிரம் குண்டுகளை தமிழர் வாழ்விடங்கள் மீதும் தமிழர் பிரதேசங்கள் மீதும் கொண்டு சென்று கொட்டியிருப்பார்கள். அப்போதெல்லாம் சிறீலங்கா விமானப்படைக்கு நட்டம் ஏற்படவில்லையோ..?

## கண்காணிப்புக்.....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

காவல் படையினர் விவகாரத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு தொடர்ந்தும் செவிசாய்க்க மறுத்தால் வடக்கு, கிழக்கில் அவர்கள் செயற்படுவதைத் தடுக்கப் போவதாக வடக்கு, கிழக்கு என்ற இனவாத சிங்கள அமைப்பு எச்சரித்துள்ளது. இது தொடர்பாக இந்த சிங்கள அமைப்பு கடந்த வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியது.

இதில் அந்த அமைப்பின் செயலாளர் சுனில் அளுக்கமகே கூறுகையில், புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரையும் உடனடியாக விடுவிக்க அரசு தவறுமானால் சிங்கள மக்களின் விடுதலைக்காக கடும் போராட்டத்தை உடனடியாக ஆரம்பிக்கும் நிலை உருவாகும்.

புலிகளால் கைது செய்யப்பட்ட இரு ஊர்காவல் படையினரையும் விடுதலை செய்வதற்கு அரசு தவறி விட்டது. இதனால் வடக்கு, கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் நலனுக்காக நாம் சிலவற்றை செய்தேயாக வேண்டும். தங்களின் விடுதலைக்காக சிங்களவர்கள் இரத்தம் சிந்திய வரலாற்றை சரித்திரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். இதனால் வடக்கு, கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்காக எவ்வாறான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நாம் தயாராயிருக்கிறோம் என்றும் கூறியுள்ளார்.

நித்தி வாகன சேவை

உங்கள் வீட்டுத் தளபாடங்களை பெரிய (20M³) வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி : 01 48050214/06 13342518/06 07348051

மங்கையர் மனம் கவரும் அசல் 22கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கு

KMS JEWELLERS

6, Rue Perdonnet கே.எம்.எஸ் ஜுவலர்ஸ்
75010 Paris
Métro : La Chapelle
Tél : 01 44 72 08 02 - Fax : 01 44 72 04 78 - Port : 06 61 86 08 02

Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

அசைவத்திற்கோ பல... சைவத்திற்கோ ஒன்று தான்!
பிரான்சில், ஈழத்தமிழர்களின் முதலாவது முழுமையான சைவ உணவகம்
கிருஸ்ணா பவன்
விதம் விதமான தோசை, இட்லி, சப்பாத்தி, பூரி, இடியப்பம், பிட்டு, சைவ பலகாரங்கள், இனிப்புப் பண்டங்கள், சைவச் சாப்பாடுகள் இன்னும் பல....
கைதேர்ந்த சமையற்கலை வல்லுநர்களின் தயாரிப்பில் தாயக தென்னிந்திய உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட 'கிருஸ்ண பவன்'
கிருஸ்ணா பவன்
24, Rue Cail
75010 Paris
Tél : 01 42 05 78 43
M° : La Chapelle / Gare du Nord
- ரம்மியமான சூழலில் இரசித்து சுவைக்க ஒரு சைவ உணவகம் -

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
www.poobalam.com

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# கருணா குழுவினரை தேடி எல்லைப்புறக் காடுகளில் ஜெயந்தன் படையணி தொடர் நடவடிக்கை

## மட்டு. வாகரைப் பிரதேச தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை

(04.10.04)

மட்டக்களப்பு பொலநறுவ மாவட்டத்திற்கான 'எல்லைப் புறமான காடுகளில் சிறீலங்காப் புலனாய்வுத் துறையினருடன் இணைந்து கருணா குழு என்ற பெயரில் இயங்குவோரைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் விசேட படையணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. வாகனேரி பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு ஜெயந்தன் படையின் விசேட அணி மேற்கொண்ட விசேட அதிரடி நடவடிக்கை ஒன்றில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ரூபன் என்பவரின் சடலமும், ஆயுதங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. மேலும் இருவர் காயங்களுடன் அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் பக்கமாக தப்பிச் சென்றதாகவும் தெரிய வருகிறது. குறிப்பிட்ட ஆயுதக்குழுவினரின் நடமாட்டம் குறித்துத் தகவலறிந்த விடுதலைப் புலிகள் வாகனேரி, குளத்துமடு பகுதியில் தேடுதல் நடத்தி இந்த அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். சம்பவத்திற்கு முன் தினம் மாலை வாகனேரிக்கும் புனானைக்கும் இடையில் வாழைச்சேனை வர்த்தகரான பூபாலப்பிள்ளை சிவப்பிரகாசம் மீது இந்தக் குழுவினரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, வாகரை - மதுரங்குளத்தில் ஜெயந்தன் படையணி மேற்கொண்ட இன்னொரு அதிரடித் தாக்குதல் நடவடிக்கையில்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்ப வேண்டாம் மேற்கு நாடுகளிடம் ஜயலத் வேண்டுகோள்

(04.10.04)

தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறீலங்காவின் முன்னாள் புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நிவாரண, மனித உரிமைகள் சங்கத்தின் தலைவருமான பேராசிரியர் ஜயலத் ஜயவர்தன சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் வைத்து ஐ.நா. அமைப்பின் கீழ் இயங்கும் அமைப்புக்களினது பிரதானிகளை சந்தித்துள்ளார்.

யூ.என்.எச்.சி.ஆர். அமைப்பின் தலைமையகத்தில், அகதிகள் தொடர்பான இணை உயர்ஸ்தானிகர் கமல் மூர் ஜாணி அவர்களையும், ஆசிய கண்ட பணிப்பாளர் ஜெனட்லிம் அம்மையாரையும் சந்தித்த ஜயலத் தற்போது ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் இலங்கை அக

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இது எப்படியிருக்கு !?

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சமாதான பேச்சுவார்த்தைகளின் நிமித்தம் சிறீலங்கா விமானப் படையினருக்கு 15 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சிறீலங்கா விமானப்படை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அரசாங்கப் பிரதிநிதிகள், சமாதானத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் என பல தரப்பட்டவர்களையும் பல இடங்களுக்கு ஏற்றிச் சென்றமையின் அடிப்படையிலேயே இந்த செலவு ஏற்பட்டுள்ளதாக விமானப் படைத் தரப்பு தெரிவித்துள்ளது. (தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு இலக்கிய சாகித்திய ரத்னா விருது

(04.10.04)

இலங்கைக் கலாசார திணைக்களம், இலங்கைக் கலைக்கழகத்தின் தேசிய இலக்கியச் சபையினால் கடந்த இரு வருடங்களாக வழங்கப்பட்டு வரும் இலக்கிய சாகித்திய ரத்னா விருது இந்தமுறை பேராசிரியர் கா.சிவத்தம்பிக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளது. தமிழ் இலக்கியத்துறைக்கு அவர் ஆற்றிய பணிக்கு இவ்விருது அவருக்கு வழங்கப்படுகின்றது. இதுவரை எழுத்தாளர்களான வரதர், சொக்கன் ஆகியோர் 2002, 2003ம் ஆண்டுகளில் இந்த விருதைப் பெற்றுக்கொண்டனர். 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும், சான்றிதழ் மற்றும் விருது என்பன இந்தவிருதுக்கான பரிசில்களாக வழங்கப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை தேசிய இலக்கிய விருதுகளுக்கென 14 சிங்கள ஆக்கங்களும், 9 தமிழ் ஆக்கங்களும், 10 ஆங்கில ஆக்கங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்விருதுக்கென 525 சிங்கள ஆக்கங்களும், 68 தமிழ் ஆக்கங்களும், 50 ஆங்கில ஆக்கங்களும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இவற்றுள் இருந்தே பரிசுக்குரிய ஆக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

சாகித்திய விருது, இலக்கிய விருதுகள் வழங்கும் சிறப்பு நிகழ்வு, எதிர்வரும் 5ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இலங்கையில் இடம்பெறும் கொலைகள் எமது சக்திக்கு அப்பாற்பட்டவை - நோர்வே

(03.10.04)

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் கொழும்பிலும் இடம்பெறும் கொலைகள் தங்கள் சக்திக்கு அப்பாற்பட்டதென்பதால் இவ்விடயத்தில் தங்களால் எதனையும் செய்ய முடியாதென நோர்வே அரசு தெரிவித்துள்ளது. இவ்வாறான கொலைகளைத் தடுத்து நிறுத்த, தங்களாலான முயற்சியை மேற்கொள்வதாக நோர்வேத் தரப்பினர் ஈ.பி.டி.பி. குழுவினருக்கு உறுதியளித்ததாகக் கூறப்படுவதை மறுத்தபோதே, நோர்வேத் தூதரக அதிகாரியொருவர் இவ்வாறு கூறினார்.

தற்போது இடம்பெற்று வரும் கொலைகள் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியவை. இவை சமாதான முயற்சிகளுக்கும் போர்நிறுத்த உடன்பாட்டுக்கும் ஆபத்தானவை. நாம் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டாலும், எமது கட்டுப்பாட்டினுள் வராத எந்த விடயத்திற்கும் இவ்வாறான உறுதிமொழியை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கண்காணிப்புக் குழுவிற்கு சிங்கள அமைப்பு எச்சரிக்கை

(03.10.04)

திருகோணமலை கோமரங்கடவெல பகுதியில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஊர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

PHONE 2000
Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.
LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE
SFR
இணைய வலையத்துடன் கூடிய தொலைபேசி அழைப்பும் (ADSL) 29.90 மட்டுமே. * France எல்லைக்கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடங்களுக்கு மட்டுமே.

PHONE 2000, 2, Rue Perdonnet, 75018 Paris. ☎: 01 40 05 03 43 Fax: 01 40 05 03 53 M°: La Chapelle
PHONE 2000, 85, Rue des Pyrénées, 75020 Paris. ☎: 01 40 09 13 15 Fax: 01 40 09 01 31 M°: Maraîchers
PHONE 2000, 19, Rue du Labat, 75018 Paris. ☎: 01 42 58 55 40 Fax: 01 42 58 55 46 M°: Marcadet Poissonniers
PHONE 2000 Informatique, 87, Rue des Pyrénées, 75020 Paris. M°: Maraîchers Tél: 06 20 21 11 11
PHONE 2000, 4, Rue de Cail, 75010 Paris. ☎: 01 40 05 93 28 Fax: 01 40 05 97 03 M°: La Chapelle ou Gare du Nord
PHONE 2000, 5, Bld. davout, 75020 Paris. ☎: 01 43 71 40 30 Fax: 01 40 09 01 31 Mobile: 06 17 17 28 17 M°: Porte de Vincennes

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11